# காத்தவன் காவியம்



786

786

JPL

C786

கைப்'றூர் தேவதாசன்
யாழ்நகர் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தவன் காவியம்

KOHA
JPL

PUBLIC LIBRARY
JAFFNA.

நூலாசிரியர் :

கவிஞர் — தேவதாசன்

786 2EY

யாழ்ப்பாண கத்தோலிக்க
இலக்கிய கழகத்தின்
இரண்டாவது வெளியீடு
1987
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சேற்றலாம்.

+ வ. தியோகுப்பிள்ளை
யாழ். மறைவட்ட ஆயர்.

PUBLIC LIBRARY
JAFFNA

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்,
12-3-1987.

சேர்வு எண்
வகுப்பெண் 922.382 யாழ் தேவசகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை — யாழ்ப்பாணம் மறைவட்ட ஆயர்

மேதகு கலாநிதி

# வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை

அவர்களின் திருவடிக்கு

# சமர்ப்பணம்

KOHA JPL



கல்வியே கற்பித்து காவியமே பாடுதற்கு
நல்லதோர் ஆசிதன்னை நன்றீந்த — சொல்வல்லோன்
ஆண்டகையாம் யாழ்ப்பாண ஆயரது தாள்தனக்கு
ஈண்டிந்நூல் வைத்தேன் இனிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

கண்டி மறைமாவட்ட ஆயர்
மேதகு கலாநிதி

**ஜே. வியானி பெர்ணன்டோ**

ஆண்டகை அவர்கள் அளித்த



# வாழ்த்துச் செய்தி

ஒல்லாந்தர் இலங்கையில் ஆட்சிபுரிந்த காலத்தில் அவர்களால் எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட "மதத்துன்புறுவியல்" கொள்கையை எதிர்த்து தேசிய ரீதியில் மத மேம்பாட்டுக்காகவும், மத மறுமலர்ச்சிக்காகவும், காலஞ்சென்ற வண. வெலிவிட்ட சரணங்கர தேரோ, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், வண. பிதா யோசேவ்வாஸ் முனிவர் போன்றோர் தமது வாழ்க்கையை எமது நாட்டுக்காக அர்ப்பணித்தார்கள்.

"காத்தவன் காவியம்" என்ற நூலின் காவிய நாயகனுகத் திகழும் இலங்கையின் முதல் அப்போஸ்தலரான வண. பிதா யோசேவ்வாஸ் முனிவர், எமது நாட்டின் மத எழுச்சிக்காக கி. பி. 1687 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 21 ஆம் திகதி மன்னார் நாட்டில் காலடி வைத்தார்கள்.

முன்னூறு ஆண்டுகள் சென்றாலும் அவர் விட்டுச்சென்ற பணிகள் அளவிடமுடியாதவையாகும். தேசிய ரீதியில் அவரின் பணிகளைப்பற்றி எமது கத்தோலிக்க மக்கள் அறியாதிருப்பது மிகவும் கவலைக்குரியதாகும். இப்படியான ஒருவரை ஈழநாட்டுக்கு அளித்தமைக்காக இறைவனுக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்களாவோம்.

யாழ்ப்பாணம், பாஷையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் தேவதாசன் மிகுந்த கடமைப்பாட்டுடன் வண. பிதா யோசேவ்வாஸ் முனிவரின் வாழ்க்கையோட்டத்தையும், சமய மறுமலர்ச்சியையும் கருப்பொருளாக வைத்து இக்காவியத்தை படைத்துள்ளார். இக்காவியம் எமது கத்தோலிக்க மக்களுக்கும், எமது சகோதரத்துவ பிற சமய மக்களுக்கும் மிகவும் பயன்படுமென்று எண்ணுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காவியம் சரியாக இருபது நாட்களில் திருச்சிராப்பள்ளி, தூய சின்னப்பர் குருத்துவக்கல்லூரியில் வைத்துப் பாடப்பட்டது இக்கவிஞரை, தமிழ்நாட்டுக்கு அழைத்து, தமிழ் இலக்கியக் கழகத்தில் வைத்து பாடுவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொடுத்த தமிழ்நாடு திருச்சிராப்பள்ளி ஆயர் மேதகு தோமஸ் பெர்ணுன்டோ ஆண்டகை அவர்களுக்கு எமது செயலகம் மிகுந்த கடமைப்பாடு உடையதாகும்.

இக்காவியத்தை, உரியஇடங்களில் திருத்தியும், வரலாறு குன்றுது அமைந்துத்தந்தும், இக்காவியத்தை அச்சிடுவதற்கு மேலான அனுமதியையும் வழங்கிய யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களுக்கு எமது செயலகம் நன்றியறிதலை மனம்திறந்து கூறிக்கொள்கின்றது.

இயேசு பெருமான் உலகிற்கு ந்த மானிட மீட்பையும், சமாதானத்தையும், தமிழ்கூறும் நல்லுலகம் அறியவைப்பதற்கு இக்காவியம் பெரிதும் பயன்படும்.

இக்காவியம், ஈழநாட்டு மக்களிடமல்லாது, தமிழ்நாட்டிலும் பரவி, யோசேவ்வாஸ் முனிவரை புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கு எல்லா கத்தோலிக்க மக்களும், இனப்பாகுபாடின்றி அனுதினமும் பிரார்த்திக்கும்படி எனது சார்பிலும், கண்டி யோசேவ்வாஸ் முனிவர் தலைமைச் செயலகத்தின் சார்பிலும் பணிவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

யேசுவின் அன்பில்

+ லியோனி பெர்ணுன்டோ

யோசேவ்வாஸ் முனிவர்
"புனிதர்" ஆய்வுச் செயலகம்,
ஆயர் இல்லம், கண்டி.
*1987-03-01*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரத்துக்குரிய யோசேவ்வாஸ்

யாழ்/மறைவட்டக் குழுத்தலைவர்

அருட்திரு.

எஸ். இல்லறி ஜெபநேசன்

அடிகள் வழங்கிய

# ஆசிச்செய்தி



" இருந்தமிழே உன்னால் இருந்தேன் — இமயவர்தம்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் "

என்ற தமிழ்விடுதூதில் காணப்படும் கவிதையின்படி, மொழிக்காக, மண்ணுக்காக, அதன் வளர்ச்சிக்காக வாழ்ந்து வருபவர்கள் எம்மினத்தவர்கள் பலர்.

தமிழ் இலக்கிய உலகில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். தமிழ்மொழியின் தீந்தமிழ்க் காவியமாகிய தேம்பாவணியை படைத்த ஜோசப் கொன்ஸ்ரன்ரியஸ் பெஸ்கி (Joseph Constantius Beschi) இத்தாலி நாட்டைச் சேர்ந்த கத்தோலிக்க மதகுரு.

தேம்பாவணி தொடங்கி இயேசுகாவியம் வரை, தமிழ்நாடு கத்தோலிக்க தமிழ் இலக்கியக்கழகம் வெளியிட்டிருக்கின்றது. அதற்கு மூலகாரணமாக நின்றவர் திருச்சிராப்பள்ளி மறைவட்ட ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் பெர்னாண்டோ அவர்களாகும்.

யாழ்/கத்தோலிக்க இலக்கியக்கழகம் " யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்கதிருச்சபை சரித்திரச்சுருக்கம் " என்ற முதலாவது வெளியீட்டை சென்றவருடம் வெளியீடு செய்தது. இரண்டாவது வெளியீடாக கவிஞர் பாஷையூர் தேவதாசனின் " காத்தவன் காவியம் " என்ற நூலை வெளியிடுகின்றது. இதற்கு அத்திவாரமிட்டவர் யாழ். மறைவட்ட ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையென்றால் மிகையாகாது.

பாரத நாட்டில் கோவைநகரில் பிறந்த அருட்திரு. யோசேவ்வாஸ் முனிவர் 1687-ம் ஆண்டு ஈழத்தில் காலடி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2-ம் வத்திக்கான் சங்கம் முடிவடைந்து இருபது ஆண்டுகளின்பின் திருச்சபையில் புதிய மறுமலர்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. பொது நிலையினரின் பொறுப்புக்கள் வற்புறுத்தப்பட்டு இன்று பொது நிலையினர் பொற்காலம் என அழைக்கப்படுகின்றது. 1987-ம் ஆண்டை பாப்பிறை 2வது அருள் சின்னப்பர் சிறப்பாண்டாக பிரகடனம் செய்துள்ளார். ஆசாரத்துக்குரிய யோசேவ்வாஸ் அடிகள் எமது நாட்டில் காலடிவைத்த முன்னூறாவது ஆண்டை நினைவுகூரும் முகமாக ''காத்தவன் காவியம்'' இவ்வாண்டில் வெளியிடுவது வரவேற்கத் தக்கதாகும்.

ஆசாரத்துக்குரிய யோசேவாஸ் முனிவர் தீர்க்கதரிசனப்பார்வையில், தாம் சென்ற இடமெல்லாம் விசுவாசத்துக்கு வித்திட்டுச் சென்றார். அந்த விசுவாசத்தைக் காத்து வளர்க்கும் பொறுப்பை பொது நிலையினரிடம் ஒப்படைத்துச் சென்றுள்ளார். முன்னூறு ஆண்டுகளின் பின் பொதுநிலையினரின் முக்கியத்துவத்தை 2-ம் வத்திக்கான் சங்கம் வெளிப்படுத்தியது இதற்கு வித்திட்டவர் ஆசாரத்துக்குரிய யோசேவ்வாஸ் முனிவராவார். மிகவும் குறுகிய காலத்தில் இந்தக்காவியத்தை பாடிமுடித்துத்தந்த கவிஞர் தேவதாசனுக்கும், அவர்க்கு துணைநின்ற ஆயர்கள், குருக்கள், பேராசிரியர்கள், பத்திரிகையாளர்கள் யாவருக்கும் இக்குழுவின் சார்பில் நன்றுகூறுகின்றேன்.

எமது மதத்தை ஈழநாட்டில் காத்த யோசேவ்வாஸ் முனிவர் ''புனிதர்'' நிலைக்கு திருநிலைப்படுத்தப்படுவதற்கு இந்நூல் ஒருவகையில் பயன்படுவதோடு, அம்முனி மகான் விட்டுச்சென்ற இறைப்பணியை உலகறிய இக்காவியம் பெரிதும் உதவுமெனவும் நான் எண்ணுகின்றேன்.

இக்காவியம் கலங்கரை விளக்காய் வழிகாட்ட நான் வாழ்த்துவதோடு பல நாடுகள், வீடுகள் எல்லாம் பரவி அனைத்து மக்களின் மடியில் தவழ வேண்டுமென ஆசிக்கின்றேன்.

''காவியம் தருவதோ இனிமை
காத்தவர் யோசேவ்வாஸ் தனிமை'':

புனித மரியன்னை பேராலயம்,
யாழ்நகர்,
15-5-87.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தவன் காவியம்
## — ஓர் ஆய்வு நோக்கு

பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்
தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

தமிழ் இலக்கியத்தின் காவிய வரலாறு தனித்துவமானது. தமிழிலே தோன்றிய இலக்கிய வடிவங்களுட் காவியம் அளவாலே பெரியது. காவியம் என்னும் பெயரைக் கொள்ளாது தமிழிலே முதன்முதல் தோன்றிய பேரிலக்கியம் சிலப்பதிகாரம் ஆகும். அதைத்தொடர்ந்து மணிமேகலை தோன்றிற்று. தண்டியாசிரியர் காவியம்பற்றி இலக்கணம் வகுத்துள்ளார். அவ்விலக்கணத்தைப் பின்பற்றி சீவக சிந்தாமணி, சூளாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற காவியங்கள் தமிழிலே தோன்றின. இவ்வாறு காவிய இலக்கணத்தைப் பின்பற்றி எழுந்த நூல்களுள் 'காவியம்' என்ற சொல்லினையும் நூல் தலைப்பினுடன் சேர்த்துக்கொண்டனவாக யசோதர காவியம், உதயண குமார காவியம் நாககுமார காவியம் என்னும் இலக்கியங்கள் அமைகின்றன. இவற்றுக்குப் பின்னர் ஈழத்துப் பூலோகசிங்க அருளப்ப நாவலர் பாடிய திருச்செல்வர் காவியம் குறிப்பிடற்பாலது. இருபதாம் நூற்றுண்டிலே சுத்தானந்த பாரதியார் பாடிய பாரதமகா சக்தி காவியமும் அதைத்தொடர்ந்து கவிஞர் கண்ணதாசன் பாடிய இயேசு காவியமும் தோன்றின, இவற்றினைத் தொடர்ந்து இப்பொழுது கவிஞர் தேவதாசனின் காத்தவன் காவியம் வெளிவருகின்றது.

இஸ்லாமியரும் மேலைத்தேயத்தவரும் தமிழ்நாட்டுக்கு வருவதற்கு முன்னர், சைவ, வைணவ, சமண, பௌத்த மதக் கதைகளையும் கருத்துக்களையும் அடிப்படையாகக்கொண்டே காவியங்கள் அல்லது தொடர்நிலைச் செய்யுள் நூல்கள் தோன்றலாயின. காவிய வடிவத்தினைப் புராணம் எனவும் வழங்கலாயினர். பெரியபுராணம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இம்மரபினைப் பின்பற்றி இஸ்லாமிய சமயக் கருத்தை அடிப்படையாகக்கொண்டு உமறுப் புலவர் சீறுப்புராணம் என்னும் காவியத்தைப் படைத்தார். கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தவர்களும் தம் சமயக் கருத்துக்களைக் காவியவடிவ மூலமும் பரப்பலாயினர். வீரமாமுனிவர் என அழைக்கப்பட்ட பெஸ்கி பாதிரியார் பாடிய தேம்பாவணி தமிழிலே தோன்றிய முதற் கிறிஸ்தவ காவியமாகும். இவ்வாறு தோன்றிய கிறிஸ்தவமதக் காவிய வரலாற்றிலே கவிஞர் தேவதாசனின் காத்தவன் காவியமும் இடம்பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டியாசிரியருடைய காவிய இலக்கணத்தின்படி கதை நாயகன் அல்லது தலைவன் நாடு, நகர், ஆற்று வர்ணனைகள் கூறி, அத்தலைவனுடைய பிறப்பும் அதைத்தொடர்ந்து கதைகளும் கூறப்படும். காத்தவன் காவிய ஆசிரியரோ தன்னுடைய நூலில் நவீன புனைகதைகளிலே கையாளப்பட்டுவந்த ஓர் உத்தியினைக் கையாண்டே காவியக்கதையை நடத்திச் செல்கிறார். காவியத்தின் கதைத்தலைவர் யோசேவ்வாஸ் முனிவர் ஆவார். இவர் ஈழத்து வரலாற்றிலே ஓர் இடம் பெறுபவர். கி. பி. பதினேழாம் பதினெட்டாம் நூற்றுண்டுகளிலே இலங்கையை ஆண்ட டச்சுக்காரர் தாம் இந்நாட்டிலே புகுத்திய புரட்டஸ்தாந்து சமயத்தைத்தவிர வேறெந்தச் சமய வழிபாடுகளும் இம்மண்ணிலே நடைபெறக் கூடாதெனத் தடைவிதித்தனர். சைவசமயத்தினர் பயந்து பயந்து ஆட்சியாளர்களுக்குத் தெரியாமல் தமது சமய வழிபாடுகளையும் ஆசாரங்களையும் கடைப்பிடித்தனர். கத்தோலிக்க சமயம் முற்றாகத் தடைசெய்யப்பட்டிருந்தது. இவர்களுக்கு ஏற்பட்ட துன்புறுத்தல்கள் தொடர்பாக வரலாற்றாசிரியர்கள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இவ்வேளையிலேதான் யோசவ்வாஸ் முனிவர் கத்தோலிக்க திருச்சபை சார்பில் தன் தியாகச் சேவையிலீடுபட்டார். காத்தவன் காவியத்தின் தொடக்கம் கத்தோலிக்க மதம் கீழைத்தேசங்களில் எவ்வாறு பரவிற்று, அது தொடர்பான சில வரலாற்று நிகழ்வுகளைக் கூறிச்செல்கிறார். புனித தோமையாரும் புனித பிரான்சிஸ்கு சவேரியாரும் இந்தியமண்ணில் ஆற்றிய பணிகள், பிரான்சிஸ்கு சபையினர் யேசுசபையினர் வருகை, இலங்கையில் கத்தோலிக்க மதப் பரம்பல் ஆகியன விவரிக்கப்படுகின்றன. தொடர்ந்து ஒல்லாந்தர் வருகையும் அவர்கள் வருகையால் கத்தோலிக்க மதத்தினருக்கு ஏற்பட்ட இன்னல்களும் கூறப்படுகின்றன.

ஆட்சியதை எடுத்தவுடன் ஆணைபல இட்டார்கள்
கோவில்களை இடித்தகல்லால் கோட்டையுமே கட்டுவித்தார்
மக்களைத்தான் வதைத்தார்கள் மதகுருக்கள் கொன்றார்கள்
தம்மதத்தை வளர்த்தார்கள் தருமத்தை அழித்தார்கள்

என்று ஒல்லாந்தருடைய அட்டூழியங்களைக் கூறும் ஆசிரியர் இவற்றை மாற்றுதற்கும் கத்தோலிக்க மதத்தை நிலைநிறுத்தவும்,

பாரதமாம் தேசத்தில் பார்புகழும் கோவையிலே
யோசவ்வாஸ் முனிவரைத்தான் படைத்திட்டார் மரிமகனார்

என்று கூறும் ஆசிரியர், இதற்குப் பின்னரே, காவியத் தலைவனின் நகர், பிறப்பு ஆகியவற்றைக் கூறிச்செல்கிறார். இந்தவகையில் காத்தவன் காவியம் புதியமுறையிலே தொடங்கப் படுகின்றதெனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவிய இலக்கணத்துக்கேற்பக் கதைத்தலைவர் யோசவ்வாஸ் முனிவர் பிறந்த கோவை நகரின் வர்ணனை முதலிலே இடம்பெறுகின்றது.

பாரத நாட்டில் பக்கம் மேற்கில்
தாரணி போற்றும் தலையெழில் நாடு
நதிகள் பலது நலமாய் ஓடி
நிதிகள் பெருக்கும் நித்தில நாடு

எனத் தொடங்கித் தான் சார்ந்த சமயப்பற்றுப் புலப்படும்படியாக,

வேதியர் குலத்தோர் வேதம் மாறி
வீதிகள் எல்லாம் விளங்கிடும் நாடு
பஞ்சமு மில்லை பட்டினி இல்லை
வஞ்சக ரில்லா வளங்கொள் நாடு

என்று கவிஞர் நகர் வர்ணனையை முடிக்கின்றார். இத்தகைய நகரில் வஞலி என்னும் ஊரிலே வாஸ் முனிவர் பிறந்த கதை அடுத்துக் கூறப்படுகின்றது. பிறந்த குழந்தைக்குத் தாலாட்டு நடைபெறுகின்றது. செந்நெறி தழீஇயதாய காவிய இலக்கியத்திலே சாதாரண மக்கள் நெறிதழீஇயதாய தாலாட்டுப்பாடல் வடிவம் இடம்பெறுவது இக்காவியத்தின் ஒரு தனித்துவமாகும்

ஆழத்தில் மூழ்கிநாம் ஈழத்தின் முத்தெடுத்து
கீழ்மேல் போடுகிறோம் கிள்ளைமொழி பேசிடுவாய்
ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆரிவரோ

என்றபடி தாலாட்டுப் பாடல்கள் கவிச்சுவையும் புதுமையு முடையனவாக அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பிறந்த குழந்தையின் வளர்ச்சியும், அதன் பெற்றோர்களின் பண்பும், சிறுவன்வாஸ் கல்வி கற்றமையும், துறவுக்கு அவர் மனங்கொண்டமையும், குருமடவாழ்வும காவியத்தின் முதலாம்பாக முதலாம் பகுதியிலே கூறிமுடிக்கப்படுகின்றன. யோசேவ்வாஸ் முனிவரின் கோவைநகரப் போதனைபற்றிக் கூறுவதுடன் இரண்டாம் பகுதி தொடங்கி, கன்னட தேசத்தில் அவர் செய்த பணி, கொழும்பிலே தங்கிவந்த குருவானவர் ஒருவர் மூலமாக ஈழமக்கள் படும் கஷ்டங்களை கேள்வியுறுவதும் அங்கு செல்லுதலும் ஆகியவற்றுடன் முடிகின்றது. டச்சுக்காரர் செய்த அட்டூழியங்களைப் பாடும் கவிஞர் உணர்ச்சிவசப்பட்டுப் பாடியுள்ளார் என்பதற்கு அக்கவிதைகள் சான்றாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலுவையை அணிந்து கொண்டு
சீவிக்கும் மனிதர் கண்டால்
வலுவுடைய வாளால் வெட்டி
வாவியிலே எறிந்து விடுவார்!
உலுத்தர்கள் குழந்தை பெண்கள்
உடலதையும் அரிந்தார் மண்ணில்
கொலுக்கிடைத்தால் இதுவா! நீதி?
கொடுமைகள் நிலைக்கு மாமோ?

இத்தகைய கொடுமைகளைக் கேள்வியுற்ற வாஸ் முனிவர் "துறையதுவாம் தூத்துக்குடி கப்பலேறி, தூதனாய் 'யாழ்ப்பாணம்' துணிந்து போனார்".

காவியத்தின் இரண்டாம் பாகம் யாழ்நகர் நோக்கி யோசவ்வாஸ் முனிவர் கப்பலிலே வருகின்ற விபரத்துடன் தொடங்குகின்றது. நாட்டார் கவிதையிலே வழக்கிலுள்ள 'கப்பற்பாட்டு' இங்கு கவிஞருக்கு நன்கு உதவுகின்றது.

அலைகிழித்து போகுதடா — டச்சு
ஆணைக்குள் கப்பலும்தான்
தலைச்சூடா எழும்பு தையா — அந்தத்
தாமானையும் கட்டிவிடு

என்று முனிவருடைய கப்பல் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை நோக்கி ஓடுகின்றது. கொழும்புத்துறையில் அவர் வந்து இறங்கிய வரலாறு தொடருவதற்கு முன் ஒல்லாந்த தேசாதிபதி ஹென்றிக் அட்றியான் வான்றீட்டினுடைய கொடூர ஆட்சியும், டச்சுக்காரர் சமயம் தொடர்பாகச் செய்த பிரகடனமும், மக்கள் கொடுமை தாங்க முடியாது இறைவனிடம் விண்ணப்பித்திருந்தமையும் விவரிக்கப்படுகின்றன. இந்த வேளையிலேதான் வாஸ் முனிவர்

"கையுதவி யோனுடனே கரைவந்த "யோசேவ்வாஸ்"
ஆண்டியதே கோலத்தில் அந்தரித்து நின்றாரே"

என்று ஆசிரியர் கூறுகிறார். இவ்வாறு வந்துசேர்ந்த வாஸ் முனிவர் பட்டகஷ்டங்கள், டச்சுக்கார அரசுக்கு மறைந்து வாழ்ந்து செய்த பணிகள் விவரிக்கப் படுகின்றன. யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், மட்டக்களப்பு, கண்டி ஆகிய பிரதேசங்களிலே அவருடைய சமயப் பணிகளை விவரிக்கும் காவியம் கண்டியிலே அவர் உயிர் பிரிவதுடன் முடிவடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1687-ல் தொடங்கும் ஈழத்துக் கொடுக்கோலாட்சியைப் பாடும் கவிஞர் இன்றைய காலகட்டத்தில் நின்றே பாடுவதைக் காவியத்தைப் படிக்கும் எவரும் இலகுவிலே கண்டு கொள்வர். உதாரணத்துக்குச் சிலவற்றைக் கீழே தருகிறேன் :

" நாடுகள் விட்டு வந்த
நச்சரவச் சிப்பாய்க் கூட்டம்
வீடுகளில் இருந்த பொன்னும்
விதைநெல்லும் கொள்ளை யிட்டார்
ஏடுடைய நிலைய மொன்றை
எரித்துமே வஞ்சந் தீர்த்தார் !
வாடுகின்ற பயிரைப் போல
வாழ்கின்றார்ஈழமக்கள் ! "

" தேர்களையும் கொழுத்தி னார்கள்
தெய்வங்கள் தெருவில் போட்டார் "

" கப்பலிலே கடலில் நின்று
கள்ளமாய்க் குண்டு போட்டார் "

" படித்திட்ட கல்விக் கூடம்
படைகளும் புகுந்து விட்டார்
குடிகளு மிருந்த ஊரில்
கூடாரம் அமைத்துக் கொண்டார் "

" மண்ணதில் துயரங்கள் போக்க — ஈழ
மக்களின் வேதனை கவலையும் நீங்க
உண்பதும் உடுப்பதும் அளிக்கும் — எல்லா
உயிர்களைக் காத்திடும் தூயவன் நீயே "

மேற்படி கவிதை அடிகள் இன்றைய நிகழ்வுகளுடன் எவ்வாறு தொடர்புறுகின்றன் என்பதுபற்றி இங்கு விரிவாக எழுதவேண்டிய அவசியமில்லை எனக் கருதுகிறேன்.

பாஷையூர், கத்தோலிக்க நாட்டுக் கூத்துக்குப் பேர்போனது. நாடறிந்த சிறந்த அண்ணாவிமார்களையும் கூத்துக்கலைஞர்களையும் உருவாக்கியது அவ்வூர். காத்தவன் காவிய ஆசிரியர் கவிஞர் தேவதாசன் பாஷையூரைச் சொந்த இடமாகக் கொண்டவர். சிறுவயதிலிருந்தே கேட்டுக்கேட்டு, அவர் காதுக்குள் ஒலித்துக்கொண்டிருக்கும் கூத்துப் பாடல்களின் செல்வாக்குந் தவிர்க்கமுடியாதபடி அவருடைய காவியத்திலும் இடம்பெற்றுள்ளது. கத்தோலிக்க கூத்துக்கே சிறப்பாயுரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வாசகப்பா' என்னும் உரைப்பா வடிவினைக் கவிஞர் வாஸ்முனிவர் கோவையிலுள்ள கத்தோலிக்க ஆயருக்கு டச்சுக்காரரால் ஈழமக்களடை யும் துன்பங்களைக் கடிதத்திலே எழுதுகின்ற சந்தர்ப்பத்திலே பொருத்த மாகக் கையாளுகின்றார். 'வாசகப்பா' வைக் கேட்டனுபவித்தவர் களுக்கு இது விருந்து.

"பாரதத்தின் மண்மீதில் பதியதுவாம் கோவையிலே
பரிபாலனம் செய்கின்ற ஆயருக்கு
பரன்யேசு ஆசியதை பணிவுடனே கூறித்தான்
பலநாட்பின் எழுதிக் கொள்வது :–"

என்று 'கடிதவாசகம்' தொடங்குகின்றது. ஒல்லாந்தரின் பல அழிவு வேலைகளை வாஸ் முனிவர் கடிதத்திலே குறிப்பிடுவதாகக் கூறும் ஆசிரி யர்,

"சொத்தெல்லாம் எடுக்கின்றார் சோரரைப்போல் உருவெடுத்தார்
சோதனையில் வாழ்கின்றார் ஈழமக்கள்
சொல்லவொண்ணு வாதைகளைச் சொந்தமண்ணில் சுமக்கின்றார்
சோகத்தின் விழிம்பில் நிற்பார்"

என்று காலங்கடந்தும் பாடுகிறார்.

சந்தர்ப்பத்துக் கேற்றபடி கவிதை வடிவங்களைக் காவியத்திலே அமைத்துக் செல்கிறார் ஆசிரியர். புனித தோமையாரைப்பற்றிக் கூறு மிடத்து அன்பும், கனிவும், கருணையும் புலப்படும் படியான பாடல்கள் அமைக்கப்படுகின்றன.

"அலைகடல் தன்னில் அலைந்து திரிந்து
வலையது இழுக்கும் வர்க்கம் சார்ந்தோன்
மும்மைக் காலம் முறையது அறிந்த
தொம்மை என்னும் தொல்முனி இவரே"

என்னும் பாடலை வகைமாதிரிக்குக் காட்டலாம். அவருடைய பணிக் கான பயணங்களின் விரைவும் வேட்கையும் புலப்பட,

அலைகடல் தாளம் போட
அமலனின் பணியைத் தேட
நிலையது அசையா நெஞ்சன்
நீண்டதோர் பயணஞ் செய்தார்

எனப் பாடல் அமைகின்றது. ஈழத்துக் கவிஞன் 'மஹாகவி' யினு டைய குறும்பா போக்கிலே கிறிஸ்தோப்பர் வாஸ் குடும்பம் பற்றிக் கூறும் பாடல்கள் அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசுடைய வீட்டுக்கு எல்லோரும்
அழைப்பு
யேசுமறை உயர்வுக்காய் முழுநேர
உழைப்பு
காசுகளும் அதற்காகத் தேடிடுவார்
பிழைப்பு
பேசிடுவார் எவருடனும் சமமான
விழைப்பு

என்னும் காத்தவன் காவியப் பாடலையும்,

" முத்தெடுக்க மூழ்குகிறான் சீலன்
முன்னாலே வந்து நின்றான் காலன்
சத்தமின்றி வந்தவன்தன் கைத்தலத்தில்
பத்துமுத்தைப் பொத்திவைக்கப் போனான் முச்சூலன் "

என்னும் 'மஹாகவி'யின் குறும்பாப் பாடலையும் ஒப்பிட்டு நோக்குக. ஒல்லாந்த தேசாதிபதி வான்றீட்டின் மூர்க்கத்தனத்தையும் கொடூர சிந்தனையினையும் உணர்த்தும் வகையிலே,

சிலுவைமரம் கண்டுவிட்டால் பதைப்பான்
சீற்றமுடன் காலாலே உதைப்பான்
வலுவுள்ள சவுக்காலே வதைப்பான்
வன்செயல்கள் தூண்டிவிடக் கதைப்பான்

என்னும் கவிதை வடிவம் அமைக்கப்படுகின்றது. டச்சுப் பிரகடனம் வாசிக்கப்படுஞ் சந்தர்ப்பத்தில் தற்காலத்திலே வழக்குப்பெற்று வரும் வசனகவிதை வடிவத்தைக் கையாண்டு

" இங்குள்ள மக்கள் எல்லோரும்
டச்சு மதத்துக்கு மாறவேண்டும்
திருமுழுக்கு — திருமணம் — மரண
இறுதிக் கிரிகைகள் எல்லாம் டச்சு
மத முறைப்படி நடாத்தப்பட வேண்டும்
சிறுவர்கள் டச்சுப் பாடசாலையில்
கட்டாயமாகக் கல்வி கற்க
வேண்டும் "

எனக் கவிஞர் பாடிச்செல்கிறார். மருதமடு மாதாவை யோசேவ்வாஸ் முனிவர் வணங்கும் சந்தர்ப்பத்தில் பக்திச்சுவை புலப்படும்படியாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கிய அன்னையென்று அருளும் ஈவாய்
அடைக்கலத்தாய் பெயர்கொண்டு அனைத்தும் காப்பாய்
பாரோங்கும் யாழ்நகரில் புதுமை மாதா !
படர்துயர்கள் நீக்குதற்காய் பள்ளி கொண்டாய் !
ஏரோங்கும் மாந்தைநகர் எல்லை விட்டு
எழில்வளமாம் மருதமடு எழுந்து வந்தாய் !
நீரோங்கும் கண்ணோடு நிற்கு மெந்தன்
நீண்டதுயர் போக்கிடுவாய் நிமலன் தாயே !

என்று பாடுகின்றார்.

கவிஞர் தேவதாசன் தன் காவியத்துக்குத் தேர்ந்தெடுத்துள்ள பொருள் முன்னூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட நிகழ்வுகளையும் இக் கால நிகழ்வுகளையும் ஒருங்குசேர நோக்கக்கூடிய பொருத்தப்பாடுடைய தாகும். வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வகைப்பட்ட போர்களும், போர்க்கோலங்களும், அட்டூழியங்களும் நடப்பதுண்டு. இவ்வாறு வேறு பட்டனவற்றுள் பல பொதுப்பண்புகள் என்றுமே தோன்றுவதுண்டு. அப்பொதுப் பண்புகளைக் கவிஞர் இனங்கண்டு கவிதைகளிலே வடித்து விடுகின்றார். இந்த வகையிலே காத்தவன் காவியம் சென்ற காலத்து நிகழ்வுகளைக் கூறும் அதேவேளையில் நிகழ்கால உணர்வுமுடையதாக அமைகின்றது. சுருக்கமாகக்கூறின் ஆசிரியர் 1987-ல் நின்று கொண்டு தான் 1687 ஐப் பார்க்கிறார் எனலாம்.

காத்தவன் காவியத்தை ஆய்வுசெய்து இக்கட்டுரை எழுதப்படுவ தால், இதிலே காணப்படும் சில குறைபாடுகளும் காட்டப்பட வேண்டி யுள்ளது. கோவைநகரை வர்ணிக்கும் ஆசிரியர் முதலில்,

பஞ்சமு மில்லை பட்டினி இல்லை
வஞ்சக ரில்லா வளங்கொள் நாடு

எனப் பல்வேறு சிறந்த பண்புகளை உடையதாக வர்ணித்துச் செல் கிறார். பின்னர்,

கோவை யென்ற கோல நகரில்
கோவில் குறைவு கொடுமைகள் பெரிது !

என்று கூறுகின்றார். இதிலே முரண்பாடு தென்படுவதை எவரும் உணர் வர். பெருங்கவியனை பாரதியிலே இதுபோன்றமுரண்பாடுகள் காணப் படுகின்றன. கவிஞர்களுக்கும் முரண்பாடுகளுக்கும் தொடர்புண்டு போலும் ! இத்தகைய முரண்பாட்டினை கவிஞர் பக்கல் நின்று எவ்வாறு நியாயப்படுத்தலாம் என்றும் எண்ணிப்பார்க்கலாம். குழந்தை யோசேவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாஸ் பிறந்த நாளிலே கோவைநகர் " வஞ்சகரில்லா வளங்கொள்" நாடாக இருந்திருக்கலாம். கவிஞர் அச்சந்தர்ப்பத்திலேயே அவ்வாறு வர்ணிக்கின்றார். அவர் வளர்ந்து குருப்பட்டம் பெற்று போதனை செய்யத் தொடங்கிய காலகட்டத்துக் கோவைநகரையே " கோவில் குறைவு கொடுமைகள் பெரிது " என்று கவிஞர் பாடுகிறார். அக்காலத்தில் அவ்வூர் அவ்வாறு மாற்றமடைந்திருக்கலாம் என ஒரு நியாயம் கூற இடமுண்டு. இக்கருத்துப் பொருத்தமானதோ என்பதை நுனித்து நோக்கும் வாசகர் ஆராய்ந்துணர்வாராக.

" அறைந்திருந்த சிலுவையொன்றை ஆரும் காணா அங்கிக்குள் மறைத்துமே ஆண்டிபோல " வாஸ்முனிவர் யாழ்ப்பாணம் வருவதற்குக் கப்பல் ஏறினர் எனக் கவிஞர் கூறுகின்றார். அறைந்திருந்த சிலுவையினை எப்படி அங்கிக்குள் மறைத்து வைக்கலாம் என எவராவது கேட்கக்கூடும். யேசுவை அறைந்திருந்த சிலுவைஎன அதற்கு விரிபொருள் கொள்ள இடமுண்டு.

ஈழத்தில் நிகழ்ந்த வரலாற்றுக் கதையை இக்காவியம் படைத்து இம்மண்மணம்பெற்ற இலக்கியமாகின்றது. அத்துடன் ஈழத் தமிழருடைய மொழிப் பிரயோகங்கள் சிலவும் இக்காவியத்தின் ஈழப்பண்பினை இன்னும் மேலோங்க வைக்கின்றன.

" புள்ளியே பலதுடைய பறவை கேட்க
பூமிதனில் ' அசிசியார் ' புகன்றார் வேதம் !
துள்ளுமீன் பலதையுமே துறையில் கூட்டி
தூயவனார் ' அந்தோனி ' செய்தி சொன்னார் ! "

என்ற பாலடிகளில் இடம்பெறும் பலது என்னும் சொற்பிரயோகம் ஈழத்தமிழுக்குரியது.

" பறங்கியர் அன்று நல்லூர் தன்னை
அடிமைப் படுத்த ஆசையும் கொண்டு
வாறார் என்ற வதந்தி கேட்டு "

என்பதில் " வாறார் " (வருகிறார்) என்னும் சொற்பிரயோகம் ஈழத்தமிழர் பேச்சிலே பெருவழக்காயுள்ளது.

" ஆச்சி அடித்தாரோ ! அண்ணன் பிடித்தாரோ " என்பதில் " ஆச்சி " எனும் உறவுமுறைச் சொல்லும், " நாவு நசை " அகற்றல் வேண்டும் " என்னும் பாடலடியில் " உருசி " என்பதற்குப் பதிலாக ஈழத்தவர் பேச்சிலே இடம்பெறும் " உருசை " என்ற சொல்லும் " கிட்டடியில் சண்டை கண்டால் பொத்திடுவாள் காது " என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் அடியில் அருகே என்ற பொருளில்வரும் '' கிட்டடி '' என்ற சொல்லும் '' அங்கங்கள் எல்லாமே அலுத்தது போச்சு '' என்னும் பாவடிவில் இடம்பெறும் களைத்தது என்ற பொருளிலே வரும் '' அலுத்தது '' என்னும் சொல்லும், இன்னும் பலவும் காத்தவன் காவியத்தின் ஈழமண் மணத்தைப் பெருக்குகின்றன.

ஈழத்தமிழருடைய பேச்சோசையில் அமைந்த வாக்கியங்களும் காவியப்பாடல் சிலவற்றிலே இடம்பெறுகின்றன.

'' வெள்ளாப்பு வந்ததுமே வெளிக்கிட்டுப் போவீரே ''

என்னும் வாக்கியத்தின் பொருளை ஈழத்தமிழர் இலகுவிலே விளங்கிக் கொள்வர். இந்தியத்தமிழர் சந்தர்ப்பத்தை நோக்கிப் பார்த்தபின்னரே பொருளை விளங்கிக்கொள்வர். '' காலை வெளுப்புத் தோன்றியவுடனே புறப்பட்டுப் போங்கள் '' என்ற பொருளிலேயே மேற்படி வாக்கியம் அமைக்கப்பட்டுள்ளது. இது ஈழத்தமிழ்ப் பேச்சிலே சாதாரணமாக இடம்பெறும் வாக்கியமாகும்.

பொதுவாகத் தமிழ் இலக்கிய வரலாற்றிலும், சிறப்பாகத் தமிழ்க் காவிய வரலாற்றிலும், ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலும், கிறிஸ்தவத் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் காத்தவன் காவியம் ஓரிடத்தைப் பிடித்துக்கொள்கிறது. எளிமையான சொற்கள், பழமையும் புதுமையும் கலந்த நடை, நாட்டாரிலக்கியப் பண்புகள், புதுமையான நோக்கு ஆகியனவற்றைக் கொண்டதாக இக்காவியம் அமைகின்றது. கவிஞர் தேவதாசனின் காத்தவன் காவியம் '' தமிழன்னையின் செல்வச் செருக்குக்கு மேலும் ஒரு பங்களிப்பாகும். '' ஈழத்தமிழரின் வரலாற்று நிகழ்வுகள் பல காவியங்களாக வேண்டிய காலகட்டத்திலே இக்காவியம் ஒரு வழிகாட்டியாக அமையுமென்பது திண்ணம்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறை இலக்கம்-4
தமிழ் இலக்கியக் கழகம்
திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு
1986.11.01

# பாரத நாட்டிலிருந்து பாடியவனின் பணிவுரை

"கவிதை என்பது உணர்ச்சியின் பிரவாகம். கட்டவிழ்த்து துள்ளிவரும் சிந்தனைகள். தாளமும் சந்தமும் நிறைந்திருப்பது அதன் தனிச்சிறப்பு" என்று கவியரசர் கண்ணதாசன் கூறினார்.

"மக்களிடம் கற்பது; மக்களுக்கு கற்பிப்பது" என்ற இலக்கிய கோட்பாட்டின்கீழ் பேனா தூக்குபவன் நான். மக்களிடம் நான் கற்ற கிராமியக்கலையின் (Folk Song) பிரதிபலிப்பே இக்காவியம்.

ஈழத்தில் மன்னார், வன்னி, யாழ்நகர், மாத்தளை, கண்டி மாவட்டங்களில் உழைக்கும் வர்க்கத்தினரிடம் இருந்து என்னால் நேரடியாகச் சேர்க்கப்பட்ட கவிமலர்களால் கோர்க்கப்பட்ட ஆரமே இக்காவியம். கி. பி. 1658—1798 வரை ஒல்லாந்தர் அல்லது டச்சுக்காரர் இலங்கையில் 140 வருடங்கள் ஆட்சி செய்தனர். இலங்கை வரலாற்றைச் சரியானமுறையில் வரைந்த யேசுசபையைச்சேர்ந்த காலம்சென்ற வண. பிதா எஸ். ஜி. பெரேரா அவர்கள் கி. பி. 1658—1687 வரை ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் ஒல்லாந்தர் தாம் புகுத்திய புதிய மதத்தைவிட வேறெந்த மதமும் இலங்கையில் அனுசரிக்கப்படக் கூடாதென்ற ஆணையைப் பிறப்பித்தனர்.

குறிப்பாக கத்தோலிக்க திருச்சபை முற்றாக வழிபாடு செய்வதற்கு இலங்கையில் தடைவிதிக்கப்பட்டிருந்தது. இலங்கை வரலாற்றில் இக்காலப்பகுதியை வண. பிதா எஸ். ஜி பெரேரா அவர்கள் கத்தோலிக்கரின் துன்புறுவியல் (Persecution of Catholics) என வர்ணித்துள்ளார். கி. பி. 1651-04-21-ம் திகதி பாரத மண்ணில் கோவா (GOA) நாட்டில் "வனலி" என்ற கிராமத்தில் யோசேவ்வாஸ் முனிவர் பிறந்தார். அவர் யேசுபெருமான் உலகிற்கு அளித்த மானிட விடுதலையை ஈழமக்களுக்கு அளிப்பதற்காக 1687-ம் ஆண்டு ஆனிமாதம் ஈழமண்ணில் கால்வைத்தார். அவர் இலங்கையில் மன்னார், வன்னி, யாழ்நகர், புத்தளம், கண்டி, கொழும்பு, மாத்தறை ஆகிய பகுதிகளில் மறைப்பணியாற்றி 1711-01-16-ம் திகதி கண்டி மாநகரில் உயிர் துறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிட விடுதலையை ஈழமக்களுக்கு அளிக்கும் பொருட்டு கடல் கடந்துவந்த யோசேவ்வாஸ் முனிவர் இந்நூலின் காவியநாயகனுகத் திகழ்கின்றார். அவருடைய வாழ்க்கை ஓட்டத்தைக் கருப்பொருளாகக் கொண்டு, இக்காவியம் என்னுல் பாடப்பட்டது.

தமிழ்நாடு — திருச்சிராப்பள்ளி மறைவட்ட ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் பெர்னுண்டோ ஆண்டகை, இலங்கை — யாழ் மறைவட்ட ஆயர் மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை, கண்டி மறைவட்ட ஆயர் மேதகு கலாநிதி வியானி பெர்னுண்டோ ஆண்டகை, திருகோணமலை – மட்டுநகர் மறைவட்ட ஆயர் மேதகு கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களினது பேராதரவிலே இக்காவியம் தமிழகத்தில் முழுமைபெற்றது.

எமதுநாட்டில் தற்பொழுது நிலவும் அமைதியின்மை காரணமாக இக்காவியத்தை தமிழகத்தில் வைத்து பாடினுல் நல்லதென்று தகுந்த அறிவுரை தந்த யாழ்ப்பாணம் புனித பிரான்சீஸ் சேவியர் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருள்திரு. ஜே. ஈ. ஜெயசீலன் எம். ஏ. அடிகளாருக்கும், யாழ்ப்பாண ஆசனக்கோவில் பங்குத்தந்தை அருள் திரு. எஸ். கிலாறி ஜெபநேசன் அடிகளாருக்கும், பாஷையூர் பங்குத் தந்தை அருட்திரு. ஜே. ஏ. பிராஸ்சீஸ் அடிகளாருக்கும், நாவாந்துறை பங்குத்தந்தை பி. எம். இம்மனுவேல் அடிகளாருக்கும், யாழ்/மறைவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்திரு. ஆர். எம். ஜி. நேசநாயகம் அடிகளாருக்கும் எனது நெஞ்சத்தின் நன்றிகளை தஞ்சமாக வைப்பதில் பெருமை யடைகின்றேன்.

இக்காவியம் தமிழ்நாடு திருச்சிராப்பள்ளி தூய சின்னப்பர் குருத்துவக் கல்லூரியில் வைத்துப் பாடப்பட்டது. அதற்கு உதவிசெய்த குருத்துவக்கல்லூரி நூலகப் பொறுப்பாளரும், இறையியல் விரிவுரையாளருமான அருள்திரு. டி. அல்போன்ஸ் அடிகளாருக்கும், நூலகர் ஏ. ஆரோக்கியராஜ் அவர்களுக்கும் என்றும் நான் கடமைப்பட்டவனுவேன்.

அத்துடன் இந்தக் காவியத்தை பார்வையிட்டு அறிவுரைகள் கூறிய திருச்சிராப்பள்ளி தூய சின்னப்பர் இறையியல் கல்லூரி பேராசிரியர்களான அருட்திரு. கலாநிதி ஏரோனிமுஸ் குருஸ் அடிகளாருக்கும், அருட்திரு. கலாநிதி பால் லியோன் அடிகளாருக்கும், அருட்திரு. கலாநிதி சேவியர் இருதயராஜ் அடிகளாருக்கும், தமிழ் ப்பராசான் திருவாடுதுறை ஆதீனப்புலவர் ஆதி முருகவேள் எம். ஏ. அவர்களுக்கும் நான் என்றும் கடமைப்பட்டவனுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டில் முத்துக்குளிக்கும் தூத்துக்குடியில் 1948-12-01-ம் திகதி "தமிழ் இலக்கியக்கழகம்" என்ற நிறுவனத்தை நிறுவிய பெருமை யாழ்ப்பாணம் நெடுந்தீவைச் சேர்ந்த அருட்திரு கலாநிதி சேவியர் தனிநாயகம் அடிகளாரையும், திருச்சிராப்பள்ளி ஆயர் அதி வந். கலாநிதி தோமஸ் பெர்ணாண்டோ ஆண்டகை அவர்களேயும் சார்ந்த தாகும். அவர்களால் தொடக்கி வைக்கப்பட்ட மேற்படி "தமிழ் இலக்கிய கழகம்" செழுமை குன்றாமல் பாதுகாத்துவருபவர் அருட் திரு ஏ. மைக்கல் அடிகளார் ஆகும் இக்காவியம் பாடுவதற்கும், இக் காவியம் முழுமைபெறுவதற்கும், அவரே எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துதவினார். நான் தமிழகத்தில் தங்கிய மூன்றுமாத காலத்தில் தந்தை யாய், ஆசானாய், உற்ற நண்பனாய், உதவிய அடிகளாரை நான் என் றுமே மறக்கமுடியாது. அவரது இலக்கியச் சேவைகள் தமிழகத்தில் மேலும் பரவ ஆசிக்கின்றேன்.

சங்ககாலத்தில் தமிழ்ப்புலவோர் தமது ஆக்கங்களை வைகைஆற் றின் ஓரத்தில் அமைந்த மதுரைமாநகரில் வேந்தர்களுக்கு பாடிக்காட்டி அரங்கேற்றினர்.

எனது காவிய முதல்வாசிப்பு காவேரி ஆற்றினை அணைத்துக் கொள்ளும் சோழநாட்டின் மத்தியில் அமைந்த திருச்சிராப்பள்ளி 'சிறுமலர்" ஆச்சிரமத்திலே நடைபெற்றது. இக்காவிய வாசிப்பை அங்கு நடாத்துவதற்கு ஒழுங்கு செய்துதந்த செபமாலைத்தாசர் துறவி களுக்கும் எனது நன்றிகள்.

இக்காவியத்திற்கு வாழ்த்துரை தந்த கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி வியானி பெர்ணாண்டோ ஆண்டகை அவர்களுக்கும், காவியக்கண்ணோட்டம் என்ற பகுதிக்கு அணிந்துரை தந்த யாழ் பல் கலைக்கழக தமிழ் துறைப் பேராசான் கலாநிதி அ சண்முகதாஸ் அவர் களுக்கும், ஆசியுரை வழங்கிய யோசேவ்வாஸ் முனிவர் "புனிதர்" ஆய்வுக்குழுத் தலைவர் (யாழ் மாவட்டப்பிரிவு) வண பிதா. கிலாரி ஜெப நேசன் அடிகளாருக்கும் எனது நன்றிகள். இக்காவியம் தமிழகத்தில் வைத்து ஆய்வு செய்யப்பட்டபொழுதிலும் எனது ஆசானும் யாழ் மறை வட்ட ஆயருமான மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்ட கையால் மீளாய்வு செய்யப்பட்டது. நோய்வாய்ப்பட்டிருந்த காலத் திலும்கூட என்னைத் தனதில்லத்தில் அழைத்து இருவாரங்கள் தனிமை யில் வைத்து இக்காவியத்தை திருத்தி அதற்கு அழகிய "காத்தவன் காவியம்" என்ற பெயரைச்சூட்டியும் காவியத்தை அச்சேற்றுவதற் கான மேலான அனுமதியையும் வழங்கினார். இன்றைய இக்கட்டான நேரத்தில் எம்மைக் காத்து வழிநடத்திக் கொண்டிருப்பவரான எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசானுக்கு இக்காவியத்தை சமர்ப்பணம் செய்வது தமிழ்கூறும் நல்லுல கம் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளக் கூடிய செயலாகும். அத்துடன் இக் காவியத்தை குறுகியகாலத்தில் அழகுற அச்சிட்டு உதவிய யாழ். புனித வளன் அச்சகத்தாருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

பாரம்பரிய இலக்கியச் செல்வங்களை, நேசிக்கும் இலக்கிய நெஞ் சங்களுக்கும், ஈழத்தில் எனது இலக்கிய ஆக்கங்களை பிரசுரித்த " பாது காவலன் ", " தினகரன் ", " வீரகேசரி ", " தினபதி ", " ஈழநாடு ", " ஈழமுரசு ", " உதயன் " ஆகிய தேசியப் பத்திரிகைகளுக்கும் எனது நன்றிகள்.

எனது முன்னைய படைப்புகளுக்கு மக்கள் ஆதரவு தந்ததைப் போல் இக்காவியத்திற்கும் பேராதரவு தரும்படி கேட்டுக்கொள்வ துடன், காவிய நடைக்கு எடைபோட்டு, எனது படைப்புகள் மென் மேலும் வளர இலக்கிய நெஞ்சங்கள் உதவுவார்கள் என்ற எண்ணத் துடன் எனது பணிவுரையை முடிக்கின்றேன்.

வணக்கம்.

தங்கள் இலக்கியச் சேவையிலுள்ள
கவிஞர் தேவதாசன்.

" அனலாஸ் "
35/4 2-ம் குறுக்குத்தெரு,
பாஷையூர்.
யாழ்ப்பாணம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

பாயிரம்

## முதல் பாகம்

### " பாரத வித்து "

### பகுதி 1

### " அரும்பு "


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | விடுதலையின் ஊற்றுக்கண் | 1 |
| 2. | இந்திய ஆட்சி, புனித தோமையார் | 2— 3 |
| 3. | பிந்திய காட்சி, புனித பிரான்சீஸ் சவேரியார் | 4— 6 |
| 4. | நற்செய்தி அறிவிப்பு 1. பிரான்சிஸ்கு சபையினர் | 7— 8 |
| | 2. யேசு சபையினர் | |
| 5. | ஈழத்தில் நற்செய்தி அறிவிப்பு | 8 – 9 |
| 6. | கோட்டையில் கோமகன் வேதம் | 9—10 |
| 7. | மன்னாரில் வேதசாட்சிகள் | 11–13 |
| 8. | நல்லூரில் நாயகன் யேசு ஒளி | 13—16 |
| 9. | ஒல்லாந்தர் வருகை | 16—17 |
| 10. | கோவை மாநகர் | 17—18 |
| 11. | பிறப்பு | 18—19 |
| 12. | தாலாட்டு | 19—21 |
| 13. | மழலைப்பருவம் | 21—23 |
| 14. | கிறிஸ்தோப்பர் வாஸ் குடும்பம் | 24—26 |
| 15. | இரவில் நடந்தவை | 27—29 |
| 16. | துறவறத்தார் உழைப்பும் யோசேவ்வாசின் அழைப்பும் | 29—31 |
| 17. | குருமட வாழ்வு | 31—32 |


### பகுதி 2

### " கரும்பு "


| | | |
|---|---|---|
| 18. | கோவையில போதனை | 33—34 |
| 19. | கன்னடத்தில் சாதனை | 35—36 |
| 20. | கடல்கடந்த மக்களின் கண்ணீர்குரல் | 36—39 |
| 21. | நெஞ்சத்தில் வேதனை | 39—41 |


## இரண்டாம் பாகம்

### ஈழத்தின் முத்து

### பகுதி 1

### தேன்மொழி


| | | |
|---|---|---|
| 22. | யாழ்நகர் நோக்கி | 43—44 |
| 23. | ஒல்லாந்த தேசாதிபதி ஹென்றிக் அட்றியான் வான்றீட் (காலம்—கி. பி. 1687–1692) | 44—46 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் பக்கம்

24. டச்சுப் பிரகடனம் 46—49
25. மக்களின் விண்ணப்பம் 49—50
26. கொழும்புத்துறை 50—51
27. வயிற்றோட்ட நோய் 52—53
28. மந்தைகளைத் தேடல் 53—55
29. அரக்கன் வான்றீட்டின் சபை 55—57
30 ஓய்வுநாள் 5 —58
31. நத்தார் படுகொலை 59—61

பகுதி 2

மான் மயில்

32. மருதமடு மாதாவின் திருப்பதி 62—64
33. மகாகல்கமுவ இராசவன்னியன் 64—65
34. கடிதம் வாசகம் 66—62

பகுதி 3

கோன் புரம்

35. மலைநாடு 68—69
36. கண்டிமன்னன் 11-ம் விமலதர்மசூரியன் 69—70
37. நாட்டின் வரட்சியும் மழையை அழைத்தலும் 71—73
38. வைசூரி நோயும் கைவிடப்பட்டவர்களும் 74—75

மூன்றும் பாகம்

இறைவனின் சொத்து

பகுதி 1

செங்களம்

39. தென்கரை நோக்கி 77—78

பகுதி 2

திங்கள்கரை

40. மீன்பாடும் தேனுடு மட்டுநகர் 79—80
41. கிழக்கு சிவந்தது 80—81
42. தாண்டவன் வெளியில் அழிவும் ஒளியும் 81—83

பகுதி 3

சங்கமம்


43. கண்ணீர் கங்கையானது 84
44. விண்மீன் 85—86

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பாகம்

# பாரத வித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாயிரம்

விண்ணிலே நீந்தும் தாரகை தன்முன்
விளக்கொன்றின் சுடரது போலே
விரலொன்று மின்றி வீணையை மீட்டும்
வீரத்தைக் கொண்டுவிட் டேனே !

மண்ணிலே நானும் மாகவி யல்லன்
மறைநூல்கள் கருத்தையும் அறியேன்
மதிதனைப் பிடிக்க மழலையும் நினைக்கும்
மமதையும் மனதில் வைத்தேன் !

கண்ணிலே உறக்கம் கண்டது கொஞ்சம்
காடெல்லாம் அவரது மஞ்சம்
கடவுளார் நாமம் களிப்புடன் சாற்ற
காலங்கள் போக்கிய நெஞ்சன் !

பண்ணிலே இந்தப் பரமனின் அடியான்
பண்புறு யோசேவ் வாசின்
பாங்குறும் கவியில் பலபிழை காணின்
பரிவுடன் பொறுத்திடு வீரே !

★★
★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 1

## அரும்பு

### 1. விடுதலையின் ஊற்றுக்கண்

அண்டமும் மண்ணும் அளித்த இறைவன்
மானிட மீட்பை மனதில் வைத்து
மரியாள் வயிற்றில் மகனை ஓர்நாள்
தாரணி மீட்க தந்தார் உலகில் !

ஆநிரைத் தொழுவில் அமலன் யேசு
கட்டிலு மின்றி தொட்டிலு மின்றி
பாரில் மக்கள் பாவம் போக்க
புழுதி மண்ணில் புரண்டு அழுது
அடிமைக் கோலம் அகிலம் பூண்டு
மனித னுக மண்ணில் பிறந்தார்

யூதாஸ் தன்னுல் யூதர் இவரை
கண்டு பிடித்து களிப்புக் கொண்டார் !
முள்முடி வைத்து முகத்தில் அறைந்து
செங்கோல் பிடியென செப்பி அவரும்
எச்சிலைத் துப்பி ஏந்த லென்ருர் !

கள்வ ரென்ருர் காலால் உதைத்தார்
கசையால் அடித்தார் காடி கொடுத்தார்
சிலுவை சுமத்தி சீறி எழுந்து
ஊரார் பார்க்க ஊர்வலம் செய்தார் !
குருதி வெள்ளம் குளமாய் ஓட
குன்றின் மீது குருசில் அறைந்தார்

மக்க ளெல்லாம் மனமது திருந்த
சாதி இனங்கள் சமத்துவம் ஓங்க
படிதனில் அன்பாய் பலரும் வாழ
இத்தனை வாதை இறைவன் பட்டார்

பகைகள் எங்கும் பறந்து ஓட
அவனி தன்னில் அமைதி கூட
மடமை இருள்தான் மறைந்து போக
விடியலை நோக்கி விரைந்து ஏக
நீதி அரசன் நிலத்தை ஆள
விடுதலை ஊற்றை விதைத்தார் யேசு !

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2, இந்திய ஆட்சி

### புனித தோமையார்

அலைகடல் தன்னில் அலைந்து திரிந்து
வலையது இழுக்கும் வர்க்கம் சார்ந்தோன் !
மும்மைக் காலம் முறையது அறிந்த
தொம்மை என்னும் தொல்முனி இவரே !

சங்குகள் விளையும் சமுத்திர ஓரம்
மங்கை மரியாள் மகனும் ஓர்நாள்
வலமது வாக வருதல் நேரம்
கலமது அருகில் களைத்து நின்ற
மானிடர் சிலரை மறைப்பணி புரிய
தேனிகர் குரலால் தேவனும் அழைத்தார் !

" கனிவுடன் இவைகள் கடலில் விட்டு
மனிதரைப் பிடிக்க மகிழ்வாய் வருவீர் "
அன்றவர் சொன்ன அருள்மொழி தன்னுல்
பணியது புரிய பரமனின் பின்னுல்
துணிவுடன் சென்றுர் தூயவர் தோமை !

மூன்றும் நாளில் முதுவுரை எல்லாம்
சான்று பகர சாவில் வென்றேன்
சபையில் வந்து தம்சீ டருக்கு
இவைகளை உரைத்தார் இறைமகன் யேசு !

" உலகெங் கணும்போய் படைப்பிற் கெல்லாம்
நற்செய் தியினை அறிவிக்(க) " என்று
இறையோன் அன்று இட்டார் ஆணை
நிறைவுளத் தோம்மை நினைவதில் ஏற்றுர் !

இந்திய தேசம் இறைபணி செய்ய
வந்ததது முறைதான் வல்லோன் தனக்கு
நாராங் கோட்டை நன்றய் வந்து
போரால் இன்றி போதனை செய்தார் !

மலையா ளத்தில் மகிழ்வுடன் வந்து
நிலையது செய்தார் நித்திய வேதம் !
மயிலாப் பூரில் மறைகள் ஓதி
உயிரது விடவும் உளத்திடம் கொண்டார் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலர் பலரும் சுற்றனர் செய்தி
ஆவலும் கொண்டு அடைந்தனர் மீட்பு
சிறையது பட்டார் சினமே இல்லை
மறையது ஓங்க மாபணி புரிந்தார் !

சின்ன மலையில் சீடரும் அன்று
கன்னி மரியைக் காவலும் வைத்தார் !
பெரியது மலையாம் பெயரது பறங்கி
தரித்தனர் பிறகே தரணியில் நாமம்
பறங்கி மலையில் பரமனின் சீடர்
துறந்தனன் உயிரை ஈட்டியின் முனையில் !

இருளில் கிடந்த இந்திய மக்கள்
விழியில் ஒளியை தோம்மை வைத்தார் !
பாரத மண்ணில் பரமனின் சீடர்
சிந்திய இரத்தம் சிதறிய தெங்கும் !

மலையில் அந்த மாமுனி தோம்மை
மரித்து வழியை மகிழ்வாய் வைத்தார் !
சுதந்திர தாகம் சுடரது விடவே
பயிரது இட்டார் பரவின தெங்கும்

குருதி சிந்தி குவலயம் காத்த
விமலன் யேசு விடுதலைப் பாதை
தோம்மை முனியும் தொடங்கியும் வைத்தார் !
இந்திய மண்ணில் இவரது ஆட்சி
வந்தது அங்கே வளர்பிறை போலே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பிந்திய காட்சி

## புனித பிரான்சிஸ் சவேரியார்

பூதல சுவர்க்க பூமி
பிரான்செனபார் மண்ணில் மக்கள்
காதலாம் மொழிதா னென்றும்
கரும்பதாய் கூறு வார்கள் !
மாதர்கள் ஒன்று கூடி
மகிழ்வதாய் மலர்கள் சூடிக்
கீதங்கள் இசைத்துப் பொன்நேர்
கிண்ணமாய் உலவி வாழ்வார் !

பிரான்செனும் நாட்டில் பாரீஸ்
பெருநகர் பெண்கள் கூட்டம்
அராகதம் செய்து கொண்டு
அலைகின்ற நிலையும் உண்டு !
இராகமும் இரவில் பாடி
இருவிழி மயக்க ஆடித்
தராதரம் பெற்ருே ரென்ற
தகுதிதான் அவருக்கு உண்டு !

மதுவையே குடித்துக் கொண்டு
மானமே யின்றி வாழ்ந்து
பொதுமாதர் தேடி யோடி
பொழுதையே கழிப்பார் ஆண்கள் !
சதுரங்கச் சூது போட்டுச்
சபைதனில் சரிந்து வீழ்வார்
இதுவெல்லாம் நடக்கு மந்த
இன்பபுரி பாரீஸ் மண்ணில் !

தகைபெறு சவேரி யார்தாம்
சகலமும் கற்ப தற்கே
மிகையதாய் ஆசை கொண்டு
மேம்பட இங்கு வந்தார் !
வகையதாய் படித்துத் தானும்
வல்லோனுய் வருவ தற்கு
முகைவிட்ட மலராம் காலம்
முற்றுமே விரும்பி வந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக் கழகம் தன்னில்
பட்டமாம் பெரிதும் பெற்ருர் !
செல்வமும் பெரிதும் சேர்க்க
செகமதில் ஆசை கொண்டார் !
கல்வியால் முழுமை பெற்ற
கற்ருேராம் இன்ஞ சியார்
இல்லத்தில் இவரும் சேர
இறைமகன் யேசு விட்டார்

பேருமே புகழும் சேர்த்து
பெரும்செல்வம் அனைத்தும் பெற்று
யாருமே மதிக்கப் போற்ற
யாக்கைதான் பெரிதாய்க் கண்டார் !
" நீருமே ! இறைவன் பாதை
நிலத்தினில் தேடும் " என்றும்
" சீருமே ! அழகு பொன்னும்
சீக்கர மழியு " மென்றும்

மாமுனி இன்ஞசியார் மதியுரை கீழே சொன்ஞர்:

" ஒருவன் இந்த உலகத்தை எல்லாம் தனக்கு ஆதாயமாக்கிக் கொண்டாலும் தன் ஆத்துமாவை இழப்பா னென்ருல் அவனுக்கு அதஞல் என்ன பலன் ஏற்படப் போகின்றது "

மேற்படி

மதியுரை கேட்ட பின்பு
மகிமைகொள் துறவு பூண்டு
வதிவிடம் நீக்கி விட்டு
வாஞ்சையுடன் ரோமும் போஞர் !
அதிபதி பாப்புக் கண்டு
அவரது ஆசி பெற்று
உதித்திடு கதிரோன் போன்று
உலகினில் இருளை வென்ருர் !

மூப்புவாம் தோம்மை என்ற
முனிவரால் இட்ட வித்தை
காப்பது இவரால் செய்ய
கடவுளார் ஆணை இட்டார் !
பாப்புவின் அருளைப் பெற்று
பாரதம் பாதம் வைத்தார்
மோப்பமும் தெரியா தேசம்
மோகமும் கொண்டார் தூயோன் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைகடல் தாளம் போட
அமலனின் பணியைத் தேட
நிலையது அசையா நெஞ்சன்
நீண்டதோர் பயணம் செய்தார்.
மலையது பறங்கி தன்னில்
மரித்துமே வித்தை யிட்டு
சிலையது நின்ற தோம்மை
சிந்திய வழியில் வந்தார்.!

கோவைமா நகரில் வந்தார்
கோமகன் யேசு போற்ற
சேவையில் ஒளியாய் நின்றார்
செகமதில் மாயை வென்றார் !
பாவையர் ஆண்கள் மற்றும்
பாலகர் பணியில் சேர்க்க
சாவையே வென்ற ஈசன்
சத்தியன் துணையும் ஈன்றார்

ஜப்பான்—குமரி—மோரே
மலாக்கா—மன்னார் எல்லாம்
தப்பாமல் விஜயம் செய்து
தங்கியும் பணியும் பார்த்தார் !
அப்பாலும் போக வேண்டி
ஆசையில் சீனு போனார்
உப்பானார் சான்சியஸ் தீவில்
உயிரது இறைவன் கொண்டார்

உயிரது ஈசன் பாதம்
உடலது கோவை மண்ணில்
துயரது களைவ தற்கு
தூதனாய் இங்கு வந்தார்
பயிரது நட்டார் அன்பாய்
பாரத தேசம் தன்னில்
பெயரது பொறித்து விட்டார்
பேறுகொள் காட்சி தந்தார் !

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. நற்செய்தி அறிவிப்பு

### I, பிரான்சிஸ்கு சபையினர்

வணிகரது குலத்திலே வந்த செல்வன்
வாஞ்சையுடன் யேசுமறை வளர்த்த நல்லோன் !
துணிவுடனே பொருளனைத்தும் துறந்து விட்டு
துறைகடந்து தொண்டுபல செய்த தூயோன் !
பணிவுளத்தோன் " அசிசியார் " பாரில் அப்போ
பாடுபட்டு தொடங்கிதோர் சபையின் தன்னால்
அணிதுலங்கும் பாரதத்தில் அமலன் வார்த்தை
அனுதினமும் பெருகியதே ! அலையைப் போலே!

புள்ளியே பலதுடைய பறவை கேட்க
பூமிதனில் " அசிசியார் " புகன்றார் வேதம் !
துள்ளுமீன் பலதையுமே துறையில் கூட்டி
தூயவனார் " அந்தோனி " செய்தி சொன்னார் ;
வள்ளலாம் மரிமகன் வார்த்தை சொல்ல
வந்திட்ட பிரான்சிஸ்கன் சபையார் அன்று
பள்ளங்கள் மலையருவி பலதும் தாண்டி
பாரதத்தில் நற்செய்தி பரப்பி னார்கள் !

அசிசியார் சபையாரும் அன்று மண்ணில்
அலைகடலும் கடந்துதான் அல்லல் பட்டு
பசிப்பிணிகள் பட்டுமே பரமன் சேவை
பரப்புதற்கு பாரதம்தான் பறந்து வந்தார்
வசிக்கின்ற இடங்களோ வசதி யில்லை
வழிச்செலவும் இன்றியே வந்தார் இங்கே !
நிசியுலகு தன்னையே நீக்கி விட்டு
நித்தியத்தின் வழியைத்தான் நீட்டி னார்கள் !

### II. யேசு சபையினர்

வாளெடுத்து எதிரிகளை வாகை கொள்ள
வாஞ்சையுடன் போர்க்களம்தான் வந்த போது
தாள்முறிந்து இன்னுசி தவித்துப் பின்பு
தாயகம்தான் வந்தாரே தனியோ னாக
சூளுரைத்த வீரமதன் சுமையும் விட்டு
சுதன்யேசு மறைப்பணிகள் சுடராய் மாற
நாள்பலது தவமிருந்து நயந்து கேட்டார்
நயனமதே காட்டினார் நல்ல யேசு !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையேசு சபையொன்றை இயங்கச் செய்து
இந்தியா செல்வதற்கு இச்சை கொண்டு
நிறையுள்ளம் கொண்டோர்கள் நிலத்தில் சேர்த்து
நித்தியத்தின் வழிகாட்ட நிரையாய் விட்டார் !
அறைகின்ற மொழிதானும் அறிய மாட்டார்
அமலனார் நற்செய்தி அள்ளி வீச
கறைசிந்தி மனுக்குலத்தை காத்த யேசு
கடவுளார் நம்பித்தான் கடலால் போனார் !

பாரதத்தில் மறைவீரர் பலபேர் வந்தார்
பஞ்சத்தால் படுகொலையால் பாதி யானார்
தாரகைபோல் ஒளிகொடுத்தோர் தரங்கள் தன்னை
தண்டனைக்காய் வெட்டியே தணலில் போட்டார்!
நீராகக் கண்ணீர்தான் நிலத்தில் விட்டு
நீடுதுயர் பட்டார்கள் விடிவுக் காக
வீரமதாய் சபையிருவர் விட்ட செந்நீர்
விடுதலைக்கு வழிதனையும் வகுத்த தன்றோ

★

5. ஈழத்தில் நற்செய்தி அறிவிப்பு.

குருதி சிந்தி குவலயம் மீட்ட
பஞ்ச காயன் பரமன் யேசு
பாதை தன்னை பாரத மண்ணில்
தோம்மை முனியால் தொடங்கிய பின்னர்
பண்டை நாளில் பார சீகர்
மரிமகன் வார்த்தை மலர வைக்க
தடைபல தாண்டி தாயகம் விட்டு
ஈழைத் தேசம் கிளர்ந்து வந்தார்

நீலக்கடல்கொள் நீடுயர் முத்தும்
மலையகம் வழங்கும் மா மணி தன்னை
பாச மோடு பார சீகர்
வாங்கத் தாழும் வதிவிடம் விட்டு
கப்பல் தன்னால் கடலைக் கடந்து
ஈழம் வந்து இருந்தனர் சிலநாள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகம் செய்ய வந்த போது
ஞானக் கடமை நன்றாய்ச் செய்ய
குருக்கள் சிலரைக் கூட்டி வந்து
இலங்கை நாட்டில் இட்டார் வித்தை !

பத்து ஆறும் நூற்றாண் டதனில்
போர்த்துக் கேயர் பொருள்பல ஈட்ட
படைப்பலம் கொண்டு "பாரதம்" "ஈழம்"
அடிமைப் படுத்தி ஆண்ட போது
இறைமகன் யேசு இலங்கைத் தீவில்
சத்திய மதத்தை சகலரு மறிய
வழியும் வகுத்தார் வல்லவர் அவரே !

படைகள் தனக்கு பரமன் செய்தி
போதனை செய்ய போர்த்துக் கேயர்
மதக்குரு சிலரை மகிழ்வாய் அழைத்து
இறைப்பணி புரிந்தார் இலங்கைத் தீவில்

ஆதியில் வந்த அசிசி சபையார்
வீர மோடு விரும்பிய மக்கள்
ஏற்க அளித்தார் ஏசு வேதம்
அன்றி லிருந்து அமலன் வார்த்தை
ஈழ நாட்டில் இனிதாய் வளர்ந்து
ஆதவன் ஒளிபோல் அழித்தது இருளை

★

### 6. கோட்டையில் கோமகன் வேதம்

பத்து ஆறும் நூற்றாண் டதனில்
இத்தரை யரசு இருந்தது மூன்றாய்
கோட்டை—கண்டி—யாழ்ப்பா ணமென்று
நாட்டைப் பிரித்து நடத்தினர் வேந்தர் !
புரியது கோட்டை புவனேக பாகு
பரிவுடன் ஆண்டு பலநாள் வாழ்ந்தான்

மணிமுடி சூட மகனு மின்றி
பிணியது பட்டு பிறசெயல் பார்த்து
தன்மகள் மைந்தன் தர்ம பாலன்
மன்னனுக்க மனதில் வைத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அண்ணன் தனக்கு ஆண்மகன் இல்லை "
மண்ணை ஆள மாய துன்னை
மன்னேன் தன்னின் மணிமுடி தன்னை
பின்னேன் தானும் பிடிக்க முயன்ருன் !

முன்னேன் வீழ்த்த முரசும் அறைந்து
பென்னம் பெரிய பேரணி கூட்டி
போரது செய்ய பொங்கி எழுந்து
வேரது அறுக்க வெளிக்கிட் டானே !

மாய துன்னை மாபலம் கண்டு
ஆய உதவி அரசன் எடுக்க
போர்த்திறன் கொண்ட போர்த்துக் கேயர்
நேர்முகம் போக நெஞ்சில் நினைத்தான்

லிஸ்பன் நகர அரசன் யுவாமும்
இஷ்டம் கொண்டு இலங்கை மன்னன்
ஆசை தன்னை அங்கீ கரித்து
மாசைச் சிலைக்கு மாலை போட்டு
சுதனிறை யேசு சுடர்கள் வீச
மதக்குரு சிலரை மகிழ்வாய் விட்டான்

அசிசி சபையும் அடுத்தது யேசு
நிசியது கழைய நீர்சூழ் இலங்கை
வருகை தந்து வார்த்தை ஓதி
தெருவது எல்லாம் தெய்வ மகனின்
வேதம் பரப்பி வேர்வை சிந்தி
ஆதவன் போல அளித்தனர் சேவை !

கோமகன் வேதம் கொற்றவன் தன்ஞல்
மாமகள் விரும்பும் மண்ணதில் தோன்றி
மலையகம் ஓடும் மாவலி போலும்
அலைகடல் நீர்போல் அனுதினம் பாய்ந்து
மக்களை மீட்க மாபவம் போக்க
இத்தரை தந்தார் இறைமகன் யேசு !

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. மன்னூரில் வேதசாட்சிகள்

நூற்றாண்டாம் பத்து ஆறில்
நூல்புகழும் நல்லூர் தன்னில்
வீற்றிருந்தான் அரசு கட்டில்
வீரன் " பரராசசிங்கன் "
ஏற்றமுறு ஏந்த லென்று
எல்லோரும் புகழ வாழ்ந்து
மாற்றார்கள் நாட்டைப் பிடிக்க
மன்னவனும் விட்ட தில்லை.!

நல்லூர் தலைநகர் தன்னில்
நந்திக்கொடி பறந்தே காட்டும்
சொல்வேந்தர் ஒன்று கூடி
சோடிப்பார் பாக்கள் மாலை
கல்விகாண் மன்ற மெல்லாம்
காவலன் காத்து நிற்பான்
செல்வர்கள் வறியோ ரெல்லாம்
செந்தமிழ் போற்றி வாழ்ந்தார்.!

மாதோட்ட நகரும் சேர்த்து
மன்னவன் ஆட்சி செய்தான்
" வா "வென்று பலரை வாழ்த்தி
வழங்குவான் விருந்தும் நாளும்
" தா "வென்று யாரும் கேட்டால்
தலையும்தான் கொடுக்கும் பண்பேபோன்
" ஆ "கன்று காத்தல் போலே
அனுதினமும் மக்கள் காப்பான்

பண்டைய வன்னி நாட்டார்
பலவகைத் திறையும் ஈவார் !
கொண்டதோர நட்பின் தன்னால்
கொற்றவன் புகழும் நீளும்
மண்டல தேசக் கப்பல்
மாந்தையின் துறையில் தங்கும் !
தண்டமிழ் கலையின் பாட்டு
தலைநகர் எங்கும் கேட்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வேறு)

" மாந்தை " – " முசலி " – " மன்னார்தீவு "
ஆகிய மண்ணில் அந்த நாளில்
சபைகள் இரண்டால் சத்திய வேதம்
நிலைபெறச் செய்தார் நிமலன் யேசு !

யூதர் குலத்தை யுகத்தில் திருத்த
அருவுரு வான ஆதி மைந்தன்
தனது வாயால் தந்த வார்த்தை
மன்னார் மண்ணில் மலர வைக்க
போதகர் மூலம் பொறைதனில் விட்டார் !
மக்கள் பலபேர் மகிழ்வாய் ஏற்றார் !

அனுராத புரத்தில் ஆரம்ப மாகி
அரிப்புக் கடலை அணைத்துக் கொள்ளும்
அருவி ஆற்றின் அந்தம் தொட்டு
கடல்சூழ் மன்னார் கரைபடு வரைக்கும்
ஆவியின் மகனார் அருளிய வேதம்
வாழை மரம்போல் வளர்ந்திடு வேளை ......

" நல்லூர் " என்னும் நாற்றிசை போற்றும்
தலைநகர் தன்னை தரணி புகழ
நெஞ்சுரம் கொண்டோன் நெடுமதில் படைத்தோன்
வேந்தன் சங்கிலி வெகுநாள் ஆண்டான் !

பறங்கியர் அன்று நல்லூர் தன்னை
அடிமைப் படுத்த ஆசையும் கொண்டு
வாரார் என்ற வதந்தி கேட்டு
ஆத்திரம் கொண்டான் அரசனும் அன்றே !

மாற்றார் தன்னை மடிவது செய்ய
பெரும்படை கூட்டி பெற்றமண் காக்க
போர்ப்பறை தட்டி பொங்கி எழுந்து
மானார் விழியார் மங்கலம் ஓத
விடையது பெற்று வீரர் சூழ
மன்னார் நோக்கி மன்னன் போனான் !

PUBLIC LIBRARY
JAFFNA.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறங்கியர் படைகள் புறமுது காட்ட
ஏசு மறையை ஏற்ற மக்கள்
சமயம் காக்க சங்கிலி எதிர்த்து
எழுந்தனர் வீரர் எதிர்த்தனர் அவனை !

சங்கிலி ஏந்தல் சமரது புரிந்து
சத்திய வேதம் சார்ந்தவ ரென்ற
ஏழு நூறு அடியவர் உடலை
கொன்று குவித்து குருதியும் எடுத்து
வெட்டியும் அழித்தான் வேறோர் கருத்தாய் !
மாண்டனர் மக்கள் மறைக்காய் அன்றோ !

சங்கொலி மன்னர் சங்கிலி தன்னால்
செம்மண லாகி சிவந்தது எங்கும்
சாட்சி தந்து சரித்திரம் படைத்த
மன்னர் நாட்டில் மனுமகன் வேதம்
அழிந்தது இல்லை ! அலைகடல் போல
எங்கும் பரவி எழுந்தது அன்றோ !

★

3. நல்லூரில் நாயகன் யேசு ஒளி

புரியது நல்லூர் தன்னில்
புரவலர் தருமம் செய்வார் !
பரிகளின் மேலே வீரர்
பாய்ந்ததாய் பவனி போவார் !
கரிகளும் தும்பிக் கையால்
காட்டுமே கொடிகள் எங்கும் !
எரிகின்ற பந்த மெல்லாம்
எங்கணும் இருளைப் போக்கும் !

நெடுந்தீவு — அரிப்பு — நாட்டு
நெத்தலி — மீனும் — முத்தும்
கொடுத்திடு செல்வம் தன்னால்
கொற்றவன் மகிழ்ந்து ஆள்வான் !
எடுத்ததோர் வாளின் தீட்டல்
எங்கணும் ஒலியாய்க் கேட்கும் !
தடுத்திடு முகாம்கள் வைத்து
தாய்நாட்டை வீரர் காப்பார் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்வயல் வரம்பின் மேலே
நேரிழையோர் சிலைபோல் போவார்!
வில்கொண்ட வீரர் பலபேர்
வீதியில் உலவி வருவார்
இல்லமெங்கும் சலங்கை யோசை
இன்பபுரி ஒக்கு மென்பார்!
எல்லோரும் ஒன்று சேர்ந்து
ஏந்தலைப் போற்றி வாழ்வார்!

அலைகடல் கலங்கள் காத்து
அரிவையோர் ஏங்கி நிற்பார்
தலைமகனின் வள்ளம் கண்டு
தாய்மனம் குளிர்ந்து போகும்!
வலைசுமந்து நடந்து செல்லும்
வாலிபர்கள் வடிவு காண
உலையிட்ட அரிசி விட்டு
உரியமகள் காத்து நிற்பாள்

பரராச சேகர மன்னன்
பாரினில் வாழும் போது
புரமதைப் பிடிக்க எண்ணி
புரட்சியும் வந்த தன்றே
அரண்மனை தன்னில் ஓர்நாள்
அதிகாரி "சங்கிலி" என்போன்
சிரமது அறுத்துக் கொன்றான்
சீவியம் விட்டான் ஏந்தல்

(வேறு)

வணிகம்செய் ஒருவனால் வள்ளல் யேசு
வார்த்தைதனைக் கேட்டுத்தான் வாஞ்சை கொண்ட
மணிமுடிகொள் "சங்கிலியன்" மகனும் மூத்தோன்
மனம்மாறி மரிமகனார் மதத்தில் சேர்ந்தான்
பணியாளர் இச்செய்தி பகன்ற போது
பார்த்திபனும் கொலுவிருந்து பாய்ந்து சீறி
துணியாத சினத்தோடு தனயன் தன்னை
தன்சபைக்கு அழைத்துவர தகவல் விட்டான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தமகன் தன்னையுமே வாளால் வெட்டி
வளர்மதத்தை அழித்திடவும் வாஞ்சை கொண்டான்
இந்தமண்ணில் இளவரசன் இறந்த நேரம்
இடியோடு சிலுவையொளி வானில் கண்டான் !
அந்தமகன் பூதவுடல் அவனும் பின்பு
அக்கினியால் எரித்தழிக்க ஆணையிட்டான் !
மந்திரிகள் சுட்டெரித்தார் மகனை அன்று
மாநிலமும் பிளந்ததுவே குருசு போலே !

இறையரசர் தனக்காக இறந்த அந்த
இளவரசன் " முதல்சாட்சி " ஈழம் வைத்தான் !
கறைசிந்தி உயிர்நீத்து கடவுள் வார்த்தை
கதிரவன்போல் ஒளிவிடவே கருவு மிட்டான் !
அறைகின்ற " நற்செய்தி " அமுதம் கேட்டு
அலைசூழ்ந்த மன்னாரில் ஆண்கள் பெண்கள்
நிறைமனதாய் ஏற்றார்கள் நிமலன் வேதம்
நீடுபுகழ் கொண்டதுவாய் நிலைத்த தங்கே !

மாந்தையிலே யேசுமறை மலர்ந்து ஓங்கி
மக்களெல்லாம் ஒன்றிணைந்து மகிழும் வேளை !
வேந்தனும் " சங்கிலியன் " விடயம் கேட்டு
வெளிக்கிட்டான் மன்னாரை வீழ்த்து தற்கே !
சாந்தமாய் எழுநூறு சிலுவை பூண்டோர்
சமரதனால் மடிந்தார்கள் சமயம் காக்க
ஏந்தலவன் கொடுமைபல எல்லாம் கேட்டு
எழுந்தாரே பறங்கியரும் நல்லூர் நோக்கி

" சங்கிலியன் இருநிகழ்ச்சி சனமும் தூற்ற
சமர்தொடுத்தார் போர்த்துக்கல் சாதி நாட்டார்
செங்களத்தில் மன்னவனைச் சிறையும் செய்து
செழுமைகொள் நல்லூரைப் பிடித்து விட்டார் !
அங்குவந்த " பிரான்சிஸ்கன் " அடியார் கூட்டம்
அந்நேரம் மறைப்பணியை அதிகம் செய்து
திங்கள்தனை காலடியில் திகழ வைத்த
திருமரிக்கு அவ்விடத்தில் கோவில் வைத்தார் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்களும்தான் அன்னைக்கு " வெற்றி மாதா "
குடிமக்கள் வணங்கிடவே குறிப்பாய் வைத்தார் !
திருமரியாள் பலபுதுமை தினமும் செய்ய
திரண்டனரே மக்களெல்லாம் அவளைப் பார்க்க !
பெருமக்கள் பின்னர்தான் " புதுமை மாதா "
பெண்குலத்தின் தாய்தனக்கு பெயரும் இட்டார் !
உருவெடுத்த யேசுமறை ஊற்று நீர்போல்
உவப்புடனே ஓடியதே ஊர்கள் எங்கும்.

## 9. ஒல்லாந்தர் வருகை

போர்த்துக்கல் மணிமுடிக்கு போட்டியும்தான் வந்தவுடன்
படைப்பலமும் குறைவுற்று பலபிரிவு ஆனதுவே !
வணிகத்தை ஈழமதில் வளர்த்திட ஒல்லாந்தர்
தருணமது பார்த்துத்தான் தந்திரமாய் இருந்தார்கள்

கரையோரப் பகுதிகளை காத்திருந்து பிடித்தார்கள்
கண்டிநகர் தன்னைத்தான் கைப்பற்ற முடியவில்லை
பறங்கியரைத் துரத்தியே பதினேழாம் நூற்றாண்டில்
நடுப்பகுதி தன்னிலே நலிந்தோரை வதைத்திடவும்
திருச்சபையை அழித்திடவும் திரவியங்கள் கவர்ந்திடவும்
டச்சினத்தார் இலங்கைதனை ஆள்பலத்தால் பிடித்தார்கள் !

ஆதியிலே வந்ததொரு அன்னைமரி மகன்மதத்தை
ஏற்றவர்கள் இலங்கையிலே ஏராளம் இருந்தார்கள்
பறங்கியரை குறைத்தார்கள் பலகோவில் அழித்தார்கள்
உள்நாட்டு மக்களது உணர்ச்சிகளைத் தணிப்பதற்கும்
மதப்பற்றை அகற்றுவதற்கும் மனமாற்றம் செய்வதற்கும்
ஒல்லாந்தர் தன்னாலே ஒருநாளும் முடியவில்லை.

" மறுமுறைதான் போர்த்துக்கல் மாற்றரும் படைதிரட்டி
இலங்கைதனைப் பிடிப்பதற்கு இன்னொருக்கால் வந்திட்டால்
திருச்சபையை ஏற்றவர்கள் திரும்பவும்தான் பறங்கியருக்கு
படையுதவி புரிந்திடுவார் " பயமொன்று தன்னாலே

டச்சினத்தார் இலங்கையில் கத்தோலிக்க மக்களை
தேடியே திரிகின்றார் தெருகடல் எங்கணுமே !
முன்பிருந்த கிறிஸ்தவர்கள் முகம்தன்னைக் கண்டிட்டால்
சிரச்சேதம் செய்கின்றார் சிங்காசனம் நிலைத்திடவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியதை எடுத்தவுடன் ஆணைபல இட்டார்கள்
கோவில்களை இடித்தகல்லால் கோட்டையுமே கட்டுவித்தார்
மக்களைத்தான் வதைத்தார்கள் மதகுருக்கள் கொன்றூர்கள்
தம்மதத்தை வளர்த்தார்கள் தருமத்தை அழித்தார்கள்
மரியன்னை மதம்புகுந்தோர் மண்ணதுவாம் ஈழமதில்
சலமீதில் துரும்பாகி சஞ்சலத்தில் வாழ்ந்தார்கள்

மூபத்து ஆண்டுகளாய் முத்தெடுக்கும் இலங்கையிலே
இருந்தநிலை மாற்றுதற்கும் இறையேசு தொழுவதற்கும்
பாரதமாம் தேசத்தில் பார்புகழும் கோவையிலே
யோசேவ்வாஸ் முனிவரைத்தான் படைத்திட்டார் மரிமகனூர் !

அலைகடல்தான் கடந்துமே அம்முனியும் வந்ததினுல்
மதமெல்லாம் சாகாமல் மறுபிறவி எடுத்ததுவே
ஊன்றுகோல் தந்துதான் உலவிடவும் செய்தாரே !
காத்திடவும் வந்தாரே ! கருணைமுனி அவரன்றோ !

## 10. கோவைமாநகர்

பாரத நாட்டில் பக்கம் மேற்கில்
தாரணி போற்றும் தலையெழில் நாடு !
நதிகள் பலது நலமாய் ஓடி
நிதிகள் பெருக்கும் நித்தில நாடு

கடலில் அருகில் கப்பல் கட்டி
உடலில் வலிமை உடையோர் நாடு !
மலைகள் தன்னில் மந்தை மேய்ந்து
அலைந்து திரியும் அரிய நாடு !

துறைகள் எங்கும் துள்ளும் மீன்கள்
பறைகள் சாற்றும் பழம்பெரும் நாடு !
வணிகர் எல்லாம் வலிய வந்து
மணிகள் எடுக்கும் மாபுகழ் நாடு !

காலையில் விரியும் கவின்தரு மலர்கள்
சோலையில் காணும் சொர்க்க நாடு
கனிதரும் மரங்கள் காவலின்றி
தனித்து வளர்ந்து தளிர்த்திடும் நாடு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய நுனியில் அழகுறு வெளிச்சம்
கோலங்கள் காட்டும் கோபுர நாடு
இல்ல மெங்கும் இன்பம் பெருகி
செல்வ முடைய செழிப்புயர் நாடு!
மாடிக ளெல்லாம் மங்கையர் ஆட்டம்
பாடிய பாக்கள் பரந்த நாடு!

கற்றவ ரெல்லாம் கலந்து ஒன்ருய்
கொற்றவன் மனேயில் கொண்டிரு நாடு
ஆலேகள் தோறும் ஆடவர் எல்லாம்
வேலேகள் செய்யும் வேர்வைகொள் நாடு

மாதர் முகங்கள் மதியை ஒத்து
காதல ராகி களித்திடு நாடு
இறைமகன் யேசு இனியவர் தந்த
மறையது ஏற்று மாரு நாடு

வேதியர் குலத்தோர் வேதம் மாறி
வீதிகள் எல்லாம் விளங்கிடும் நாடு
பஞ்சமு மில்லே பட்டினி இல்லே
வஞ்சக ரில்லா வளங்கொள் நாடு

★

## 11. பிறப்பு

ஞாயிறு உதிக்க ஞாலம் மகிழும்
நல்லவர் பிறக்க நானிலம் செழிக்கும்
வேதியர் குலத்தை வெறுத்தது செய்து
சத்திய மதத்தை சார்ந்தனர் முன்னேர்
அவ்வழி தன்னில் அடுக்காய் வந்த
"கிறிஸ்தோப்பர்" வாசும் ஒருவர்!

அன்னவர் தனக்கு அரிவை யாக
"மரியா தே மிராண்டா" வந்தாள்.
செல்வம் எல்லாம் செழித்த குடும்பம்
பஞ்சணை மெத்தை பழரச அமுதம்
ஆடைகள் புதுசு அணிகளும் பலது
எடுபிடி பலபேர் எண்ணிலும் வருவார்!
பயிர்களேப் பார்க்க பக்கமும் தெரியா
நெல்லு எல்லாம் நெடுவுயிர் மாடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை மாலை கடவுளை வணங்கி
வறியோர் தனக்கு வயிறு புடைக்க
உணவு கொடுத்து உடுப்பும் அளித்தும்
முதியோர் பலரின் முகங்கள் மலர
தர்மம் செய்து தாழ்ந்து பேசி
பூசை செய்து பூரிப் படைந்து
குருக்கள் சொன்ன குறைகள் போக்கி
மதப்பணி பார்த்து மகிழ்ந்த குடும்பம்

இறைமகன் யேசு இவர்கள் தனக்கு
ஆறு கனிகள் அளித்தனன் அன்று!
கடலில் போக கப்பல் கொடுத்தார்
காடு மேடு கடக்கச் செய்தார்!
மறையோன் செய்தி மகிழ்வாய் ஊட்ட
மரியாள் மைந்தன் மாபுகழ் பரப்ப
ஈழ தேசம் இனிதாய் செல்ல
அமலன் இவரை அளித்தார் உலகில்!

புனித வளனூர் பெயர்தனைக் கொண்டே
மண்ணதில் வந்தார் மாமுனி இவரே!
கோவை நகரில் "கொங்கணி" மரபில்
"சங்கு வானில்" சற்குணன் வளர
"வனுலி" ஊரில் வள்ளல் பிறக்க
விண்ணில் மீனும் விளங்கொளி காட்ட
யோசேவ் வாசை யேசு தந்தார்!

✶

## 12. தாலாட்டு

ஆராரோ! ஆரிவரோ!
ஆராரோ! ஆரிவரோ!

முத்தே! பவளமே! முக்கனி நறுஞ்சாறே!
மெத்த மனம்குளிர மெத்தையிலே கண்வளராய்

.........ஆராரோ......

சிரித்து மகிழ்ந்திடடா சின்னக் குழந்தையடா
விரித்த பஞ்சணையில் வித்தாரக் கதை கூறு

.........ஆராரோ......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லக் கதைசொல்லு செவ்வாய் திறந்துவிடு
சொல்லும் மொழிகேட்போம் சோம்பலை விட்டிடடா
.........ஆராரோ......

பத்தது மாதமதாய் பவுத்திர மாய்ப்பார்த்த
பெத்தவுன் தாய்கொஞ்ச பெரியதோர் வீரனுவாய்
.........ஆராரோ......

தந்தை மனங்களிக்க தாயும் தினம்மகிழ
முந்தை கலிதீர்க்க முழுமதியே கண்வளராய்
.........ஆராரோ......

தொட்டில் தனைக்கொண்டு தொண்டர் வந்துவிட்டார்
விட்டபணி தொடர்வதற்கு த்தகனே எழுந்திடுவாய் !
.........ஆராரோ......

களைத்து இருந்தாலோ கரத்தில் தூக்கிடுவோம்
தழைத்து வளர்ந்துமே தந்தைதாய் காத்திடுவாய் !
.........ஆராரோ......

மழையின் முகிலாகி மாநிலம் வந்தவனே
பழைய குலம்தழைக்க பார்த்திபா கண்வளராய்
.........ஆராரோ......

மறைகள் கருத்தையே மக்கள் தனக்கூட்ட
இறைமகன் செய்தாரோ இனியவனே ஓதிடுவாய்
.........ஆராரோ......

இனம்பல உம்முடைய இல்லம் வருகின்றார்
தினம்பல வளர்ந்துநீ திருச்சபை காத்திடுவாய்
.........ஆராரோ......

ஆழத்தில் மூழ்கிநாம் ஈழத்தின் முத்தெடுத்து
கீழ்மேல் போடுகின்றோம் கிள்ளைமொழி பேசிடுவாய்
.........ஆராரோ......

வேதியர் குலத்தோனே ! வேங்கை மரபோனே
ஆதிகுல அன்னையையே அரியணை எற்றிடுவாய் !
.........ஆராரோ......

நாவால் உரைப்போமோ? நயன அழகுதன்னை
பாவால் பாடுகின்றோம் பாலகனே கண்வளராய் !
.........ஆராரோ......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி சென்றுமே படித்து உயர்ந்திடுவாய்
அள்ளி உனைக்கொஞ்ச அத்தைமார் வாருரே !

.........ஆராரோ......

எடுத்த விளையாட்டு எல்லாமே நாம்தருவோம்
நெடுநாள் வாழ்ந்துலகில் நெஞ்சம் குளிரவைப்பாய் !

.........ஆராரோ......

முத்தம் தரும்நீயும் முதல்வன் எமக்குத்தான்
நித்தம் நலம்பெறுவாய் நித்திலமே கண்வளராய்

.........ஆராரோ......

ஆச்சி அடித்தாரோ ! அண்ணன் பிடித்தாரோ
காச்சிய பாலும்தான் கரந்தனில் கொண்டோமே

.........ஆராரோ......

மணிகள் கிலுக்கிடுவோம் மன்னு தூங்கிடுவாய்
அணிகள் போட்டிடுவார் ஆரமுதே கண்வளராய்

.........ஆராரோ......

மாமிகள் வந்துனக்கு மாலைகள் சூட்டிடுவார்
பூமிதன் இருள்களைய புத்திரனுய் வந்திடுவாய்

......ஆராரோ......

★

## 13. மழலைப்பருவம்

அன்னையார் எடுத்துக் கொஞ்ச — அந்த
அழகுள்ள மழலைச் செல்வம்
பொன்னையே வெறுத்துத் தானும் — புவி
போற்றவே வளர லானுர்

பிறந்ததோர் பிள்ளை யெல்லாம் — தன்னில்
பிரபல்யம் அடைவ தில்லை
சிறந்ததோர் தந்தை தாயால் — அன்புச்
சிறுவர்கள் உயர்வு பெறுவார்

மேற்சொன்ன குறிக்கோள் தன்னை — கற்ற
மேன்மைகொள் வாசின் மனைவி
ஏற்றுமே செய்லில் காட்ட — தூய
எண்ணனுய் வளர்த்தாள் மகனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அறிவு ஊட்டி — வீட்டு
அலங்காரப் பணிகள் காட்டி
இன்னதான் செய்ய வேண்டும் — என்று
இளமையிலே சொல்லி வைத்தாள்

வாய்மைதான் காக்க வேண்டும் — வரும்
வறியவர்க் குதவு என்று
தாய்மகனுக் கென்றும் அன்பாய் — தினமும்
தக்கதாய் போதித் தாளே !

மலைமீதில் யேசு சொன்ன — அமுத
மலைப்பொழிவை மகனுக் கூட்டி
அலையாத மனமே ஆக்கி — கேட்கும்
அனைத்தையும் ஈந்து வந்தாள்

" விளையாட வருவோ ரிடத்தில் — நீயும்
வித்கியா சங்கள் பாராய் "
இளையதோர் வயதில் பாடம் — நல்ல
ஈன்றாளும் ஒதி ளுளே !

இறைவனுர் தூதனுக — பாவ
இருள்தன்னை நீக்கு தற்கே
மறைச்செய்தி பரப்ப வேண்டி — தங்க
மகனுக வளர்த்து வந்தாள்

அன்பையே விதைத்த யேசு — அந்த
அமலனுர் பாதை தன்னை
பின்பற்று நீயு மென்று — தந்தை
பெருமகனுர் புத்தி சொல்வார் !

புழுதியையே அழைந்து நிற்கும் — மூன்றும்
புத்திரனைக் கண்ட போது
எழுந்தோடி தூக்கி கொஞ்சி — துன்ப
ஏக்கமதை தீர்த்து விடுவார் !

தோன்றியதோர் வெள்ளி தனையே — அன்று
தொடுவானில் கண்டு விட்டு
சான்ருேனுய் வருவா னென்ற — தேவ
சம்மதத்தை மனதில் வைத்தார் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறைதனில் வாழும் உயிர்கள் — அனைத்தும்
பொதுவாக நேசி யென்று
அறைந்துமே அன்னை தந்தை — தக்க
அறிவமுதம் கொடுத்து வளர்த்தார்

பொன்னோடு பொருளும் மங்கை — பூமியில்
பொய்யலகை என்று கூறி
அன்னவற்றை நீக்கி வாழ — நாளும்
ஆன்றோர்கள் கதையும் சொல்வார்

" கன்னத்தில் ஒன்றில் அடித்தால் — நீயும்
கனிவுடன் மாற்றுக் கன்னம்
தன்னையுமே கொடுத்து விடுவாய் " என்ற
தற்பரனார் பாடமும் உரைத்தார்

பணத்தோடு ஆடை அணிகள் — இந்த
பார்தனிலே பொய்தான் என்றார்
பிணவாடை உண்மை என்று — பெற்றோர்
பிள்ளைக்கு உரைத்திட் டாரே

அயலானின் பொருள்கள் தன்னில் — என்றும்
ஆசையதே வைக்க வேண்டாம்
செயலெல்லாம் குற்ற மின்றி — மாயை
செகமதிலே வாழ்வாய் என்றார்

நாவுருசை அகற்றல் வேண்டும் — இனம்
நட்பெல்லாம் ஓங்க வேண்டும்
பூவுலகில் முடியுமட்டும் — நல்ல
புண்ணியங்கள் செய்வாய் என்றார்

பாவங்கள் இதுதா னென்று — தமது
பாலனுக்கு உரைத்த தோடு
சாவரைக்கும் இதையே நன்றாய் — மேன்மை
சத்தியமாய் காப்பாய் என்றார்

இப்படியே பற்பல புத்தி பெற்றோர்
இவருக்கு பாங்காய் உரைத்தார்
அப்படியே அவர்கள் சொன்ன — எல்லா
அமுதமொழி மனதில் வைத்தார்

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. கிறிஸ்தோப்பர் வாஸ் குடும்பம்

காலையிலே எழுந்தவுடன் கடவுளைத்தான்
தொழுவார்
வேலைதனையும் பார்ப்பதற்கு வேகமதாய்
எழுவார்
ஆலைதனில் இவர்கண்டால் பசித்தோர்கள்
அழுவார்
மாலைவரை இவர்நிலத்தை எருதுகள்தான்
உழுவார்

கொஞ்சுமொழி பேசுகின்ற மழலைதான்
ஆறு
தஞ்சமென வருவோர்கள் இவரிடத்தில்
நூறு
பஞ்சமென்று உரைத்திட்டு வந்தாலே
சோறு
நெஞ்சமது விட்டதுவாய் கூறிடுவார்
தேறு

இல்லத்தில் ஒழுக்கம்தான் பிரதான
நோக்கம்
செல்வமாம் பிள்ளைகளில் தணியாத
ஊக்கம்
நல்லதுவாய் பிந்திடுவார் படுக்கையிலே
தூக்கம்
பல்கலைகள் இவர்மனையில் அழியாத
ஆக்கம்

இறையேசு தன்புகழ்தான் இரவுதனில்
பாட்டு
மறைவளர்த்த புனிதோர்கள் படங்களும்தான்
வீட்டு
அறைகின்ற மொழிதனிலே அர்த்தமது
நீட்டு
நிறைகின்ற மனமுடையோர் இவருடைய
கூட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவைநகர் தன்னிலே மீளாத
பற்று
சேவைகளும் செய்வதற்கு ஆசையும்தான்
மற்று
தேவைகளைப் பார்ப்பதற்கு நேரமது
சற்று
நாவையுமே அடக்கிடுவார்! — பகைமைகளும்
அற்று

வாசுடைய வீட்டுக்கு எல்லோரும்
அழைப்பு
யேசுமறை உயர்வுக்காய் முழுநேர
உழைப்பு
காசுகளும் அதற்காக தேடிடுவார்
பிழைப்பு
பேசிடுவார் எவருடனும் சமமான
விழைப்பு

இல்லவளும் அப்படித்தான் குணமதிலே
குன்று
நல்லசெயல் புரிந்திடுவாள் துணிந்ததுவாய்
நின்று
கல்வியற்றோர் பிணக்கதனை தீர்த்திடுமோர்
மன்று
சொல்லாலும் செயலாலும் புரிந்திடுவாள்
நன்று

கட்டியதோர் கணவனர் கருத்தறிந்த
மாது
பட்டினியாய் விடமாட்டாள் வந்தவரையெப்
போது(ம்)
வெட்டியதோர் பேச்சுத்தான் மற்றவர்க்கு
தீது
இட்டடியில் சண்டைகண்டால் பொத்திடுவாள்
காது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டதனில் ஒளிதனையே ஏற்றிடுவாள்
பீடம்
நாட்டவரு பிள்ளைகட்கு ஓதிடுவாள்
பாடம்
காட்டுகின்ற கோலம்போல் அணியவில்லை
வேடம்
ஓட்டிடுவாள் வாழ்க்கையைத்தான் கடல்மீதில்
ஓடம்

துறந்தவர்க்கு எப்போதும் கொடுத்திடுவாள்
கனமும்
பிறந்ததன் பாலர்களைப் பார்த்திடுவாள்
தினமும்
மறந்துமே பொய்சொல்லாள் நேர்மைகொள்
மனமும்
சிறந்ததாய் வாழ்ந்திடுவாள் வேதியராம்
இனமும்

வந்தோரை உபசரித்து கொடுத்திடுவாள்
விருந்து
இந்திய மண்ணைத்தான் நேசிப்பாள்
இருந்து
கந்தலாய் வருவோரைக் கண்டாலே
வருந்து
விந்தைகொள் பெண்ணென்ற தேடரிய
மருந்து

குடும்பத்தை நடத்திடுவாள் குன்றின்மேல்
ஒளியாம்
எடுத்ததோர் செல்வமாம் மழலையாம்
விழியாம்
கொடுத்ததோர் அறிவுரைகள் அணுகுவோர்க்கு
வழியாம்
அடுத்தவர்கள் துயர்கண்டால் கண்ணீர்தான்
துளியாம்

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. இரவில் நடந்தவை

வளர்ந்து வந்த யோசேவ்வாஸ்
வள்ளல் யேசு வார்த்தைதன்னை
உள்ளத்தில் பதித்து வைப்பதற்கு
ஊக்கம் தன்னையே பூண்டுவிட்டார் !
முளத்தில் அவரும் படிப்படியாய்
முறையில் உயர்ந்து வந்துகொண்டு
குளத்தில் மலரும் தாமரையாய்
குலத்தைக் காக்க வந்தாரே !

மாலைப் பொழுது வந்தவுடன்
மகிழ்ந்து களைத்து விளையாடி
மேலே நன்றாய் கழுவியபின்
மெல்ல வேலை தொடங்கிடுவார் !
சாலை தன்னில் ஒருங்கிணைந்து
சகல ரும்தான் செபம்பண்ணி
காலைப் பாடம் நிரல்படுத்த
கனிவாய் மேசை அமர்ந்திடுவார்.

பாடம் நன்றாய்ப் படிப்பதுடன்
பாவம் பழிகள் கேட்டறிந்து !
கூடம் தன்னில் இறையேசு
குன்றின் மொழியின் கருத்தறிவார் !
சீடர் பலரின் வரலாற்றை
சின்ன வயதில் அறிந்தவுடன்
மூடக் கொள்கை அனைத்தையுமே
முறையாய் விலக்கி நடந்திடுவார் !

இவைகள் யாவும் முடிந்தவுடன்
இரவு நேரச் சாப்பாட்டை
சுவைகள் பார்க்கா உள்ளிறக்கி
சூழ்ச்சி யொன்று செய்திடுவார் !
சபையில் நேரம் தாமதித்தே
சகோத ரங்கள் போனபின்பு
அவையில் உணவு மிகுதியையே
அன்பர் பலருக் களித்திடுவார் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தி முடிந்த பின்னர்தான்
    பாட்டுத் தானம் ஆடலுமே
முந்தி வந்த முன்னிருவர்
    முறையில் அங்கு போட்டிவார்
இந்த விதங்கள் வெறுத்ததுவாய்
    இவரும் படுக்கை தனைநோக்கி
விந்தை யாக கண்மூடி
    விளக்கை அணைத்துப் படுத்திடுவார்

தாளம் பாட்டு ஆடலுமே
    தமையன் மார்கள் முடிந்தபின்பு
சூழ வந்து ஒன்ருக
    சுமக்கும் கட்டில் படுத்திடுவார்
நீள அவர்கள் குறட்டையுடன்
    நீண்ட தூக்கம் ஆனதன்பின்
மீள எழுந்து மு ழந்தாளில்
    மீட்பர் செபமும் தொடங்கிடுவார் !

அன்னை அவளும் பழக்கி வைத்த
    அரிய செபத்தை அவரும்தான்
பொன்னைப் போன்று நினைத்ததுவாய்
    போற்றி அதையும் செபிந்தாரே !
சின்ன வயதில் போதனைசெய்
    சிலுவை மரித்த யேசுவும்தான்
தன்னைப் புகழும் சிறுவனுக்காய்
    தகுந்த வழியும் அமைத்தாரே !

கதவு பின்ஞல் அவரிருந்து
    கர்த்தர் யேசு தனைநினைத்து
இதமாய் மனதை ஒருங்கமைத்து
    இருந்தார் அன்பு நிலைதனிலே
முதல்வன் தந்தை கிறிஸ்தோப்பர்
    முற்றும் அலுவல் முடிந்தபின்பு
விதமாய் கதவை தள்ளிடவே
    விரைவில் நசிந்தார் யோசேவ்வாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தால் செய்த கதவதனுல்
மகனுர் நெரிந்தா ரென்றெண்ணி
பரந்து தந்தை பார்க்கையிலே
பரனுர் யேசு சிசுகாத்தார்
இரவில் செபம்செய் புத்தகமும்
இருகை பிடித்த நிலைகண்டார்
வரத்தில் இவரும் பிறந்தவுடன்
வந்த வெள்ளி சரயென்றுர்

சிறிய வயதில் பாலகர்கள்
சிந்தை செய்யும் எண்ணங்களும்
குறிதான் காட்டும் இவ்வுலகில்
குமரன் செயலும் அப்படித்தான்
நெறியில் வளர்ந்த யோசேவ்வாஸ்
நெடுநாள் பணிதான் புரிவதற்கு
எறிந்த ஈட்டி குத்நியதோர்
ஏசுபெருமான் தயைபுரிந்தார் !

★

## 16. துறவறத்தார் உழைப்பும் யோசேவ்வாசின் அழைப்பும்

பஞ்ச புலன்கள் அடக்கி
பரமனின் புகழும் பாடி
பாரினில் பலதும் விட்டு
பணியது புரிவார் துறவோர் !

நஞ்சு கலந்த உணவை
நன்றெனக் கொடுத்திட்டாலும்
நயமுடன் அதையும் வாங்கி
நாளதில் புசித்து விடுவார் !

மஞ்சமும் மங்கையும் பொன்னும்
மதுவுடன் ஆசை விட்டு
மானிட விடுதலைக் காக
மாதவம் செய்கு வாரே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சமும் மனத்தி லில்லை
வருவது எல்லாம் ஏற்பார்!
வாய்மையின் வழியில் நின்று
வசிப்பது விடிவுக் காக.

தரித்திர கோலம் பூண்டு
தரணியில் சேவை செய்ய
தரும்பசி எல்லாம் ஏற்று
தருமமும் பேணி வளர்ப்பார்!

எரியொளி தீப மாக
ஏசுவின் புகழைச் சொல்லி
எங்கணும் வாழ்ந்து ஆறி
ஏழ்மையை ஏற்று நிற்பார்!

பரிவுடன் பரமன் வார்த்தை
பலரது மனதில் ஊட்டி
பாடமும் சொல்லிக் காட்டி
பகலவன் சேவை செய்வார்

பெரியவர் சிறியோ ரென்ற
பேதமும் விட்டு இவர்கள்
பெரும்பணி உலகில் செய்து
பேரின்ப வாழ்வு வாழ்வார்

உண்டி தனையும் சுருக்கி
உளத்தையும் பக்குவ மாக்கி
ஊற்றது கண்ணைப் போலே
உலகினில் வாழ்ந்து வருவார்!

வண்டியின் சக்கர மாக
வாழ்க்கை உருண்டு ஓடும்
வகுத்த பொன்மொழி தன்னை
வந்தவர்க் குரையும் செய்வார்

அண்டி வருவோர் தன்னின்
அவலங்கள் கேட்டே யறிந்து
ஆறுதல் பலதும் கூறி
அமலனை போற்று வென்பார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டுகள் பலது செய்து
தொல்பவம் அதனைப் போக்க
தோன்றிய பயனும் அடைய
தொடர்பணி ஆற்று வாரே

" கற்பு " என்னும் ஒழுக்கம்
காத்தது கொண்டு வாழ்ந்து
கசையடி பட்ட யேசு
கடவுளார் பெருமை சொல்வார்

பொற்புயர் தேச மாளும்
பொலிவுகொள் வேந்தன் தானும்
பொதுப்பணி துறவி கண்டால்
போற்றுதல் செய்வார் பண்பாய் !

உற்றது பெற்றோர் மற்றோர்
உடனது பிறப்பு வெறுத்து
உயரிய துறவின் மேன்மை
உலகத்தில் அறிந்த தாலே

தற்பரன் யேசு தந்த
தரித்திர துறவு பூண
தழைத்தெழு யோசவ் வாசும்
தான்மனம் கொண்டு விட்டார் !

✶

## 17. குருமட வாழ்வு

குருத்துவ மடத்தில் சேர
குதுகலம் வாசும் கொண்டு
எருவது தன்னை யாக்கி
ஏசுவின் பாதை ஏற்றார் !
உருக்கிய பொன்னாய் நின்று
உலகினில் ஒளியாய் வந்து
கருவிலே அடிமை மீட்ட
கடவுளார் மார்க்கம் சென்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்கையில் அன்ன மொன்று
பொலிவுடன் நீந்து மாப்போல்
" மெய்யியல் " தனையும் கற்று
மேதகு இன்பம் கொண்டார்
பெய்மழை வருதல் கண்டு
பெரும்பயிர் தழைக்கு மாப்போல்
செய்பணி இறைக்குச் செய்ய
சேவடி வணங்கி நின்றார் !

" இறையியல் " கற்ற பின்பு
ஈசனின் அன்பைப் பெற்று
மறையது தோற்றம் தன்னை
மகிழ்வுடன் அறியப் பெற்றார் !
பிறையது வளர்ந்து ஓர்நாள்
பிறந்தது மதிதான் போன்று
நிறைமனக் குருவாய் வந்து
நிமலனின் ஆசி பெற்றார் !

ஆதி ஆகமம் தொட்டு
அடிவரும் திருவெளிப் பாடும்
போதனை செய்ய வேண்டி
பொருட்பயன் தெளிவு கண்டார் !
நீதியும் அறமும் தேடி
நித்திய வாழ்வுக் காக
வேதியர் குலத்தில் வந்தோன்
விலங்கது ஒடிக்க வந்தார்

★

PUBLIC LIBRARY
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 2

## " கருப்பு "

### 18. கோவையில் போதனை

கடலொலி போட கலங்கள் ஆடும்
காற்றது கூட கயல்கள் ஓடும்
கோவை யென்ற கோல நகரில்
கோவில் குறைவு கொடுமைகள் பெரிது !
நீலக் கடலில் நீண்டு கிடந்த
அலையின் நிறங்கள் அழிந்து மாறி
செந்நிறப் பிழம்பாய் சேர்வது ஆகி
வட்ட வடிவாய் வனப்புடன் எழுந்து
அகிலம் விழிக்க ஆதவன் சுடர்கள்
ஒளியை வீச ஒலித்தன மணிகள் !

ஆலய மொன்றின் ஆர்த்தது நாதம்
அமலனின் அடியான் யோசேவ் வாசும்
ஆணியாம் மூன்ருல் அறைந்த குருசை
கரமதில் கொண்டு கர்த்தரின் வார்த்தை
பரப்புதல் பொருட்டு பணிவுடன் வந்து
இருகரம் கூப்பி இனிதாய் அழைத்தார் !

அருணன் தன்ஞல் அடித்த வெய்யில்
வெண்மணல் பட்டு வெம்மை யாகி
கொதித்தது அன்று கோவை நகரில்
சுடுமணல் கொடுத்த சூட்டை அன்று
குளர்பனி யாக குருவினர் கொண்டு
மிதியடி யின்றி மிகவும் களைத்து
உரைத்தார் வேதம் உத்தமர் அவரே !

இந்திய மண்ணின் இரத்தம் இவர்தான்
காவல் காத்தார் கர்த்தர் நாமம்
திருப்பலி காண திரண்டனர் மக்கள்
பாடு பட்டார் பயனும் கண்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்க்கரை தன்னில் சரிந்திடும் தேன்போல்
இவரது பேச்சு இருந்தது அன்றோ !
யோகிகள் வரியில் யோசவ் வாசை
நாடினர் மக்கள் நகர்தனில் அங்கே
ஆலயம் அமைத்தார் அரும்பணி புரிந்தார் !
தொட்டது எல்லாம் தோன்றிய பொன்போல்
பாரத மண்ணில் பணிகள் செய்தார்
போதனை எல்லாம் பொங்கிய கடல்போல்
சென்றதே திக்கில் சேர்ந்தனர் பலபேர்
திரண்டனர் மக்கள் விடுதலை பெறவே

கொஞ்சு மொழிதான் கொடுக்கும் பாலர்
அணைத்து அவரும் அன்பாய் சேர்த்து
மரிததோர் மீட்ட மரியாள் மைந்தன்
சாற்றிய வேதம் சகலரும் கேட்க
சந்தியில் நின்று சனமது தேடி
ஓதி நின்றார் ஓர்நாள் தன்னில்
முள்முடி தன்னை முன்னாள் அணிந்த
சிலுவை சுமந்த சீலன் தனக்காய்

வழியில் போவோர் வருவோர் எல்லாம்
அழைத்தார் அன்பாய் அணுகினர் சிலரே !
சிலபேர் இவரை சினந்து பார்த்தனர்
விசர னென்று வீசினர் கல்லை
அடிக்க வந்து அகன்றோர் உண்டு
வேலையற்ற வேதியன் என்றார்
விடுத்துக் கேள்வி விட்டனர் சிலபேர்
அவைகள் தனக்கு அளித்தனன் பதிலை

உடலை அன்று உடைத்துக் குருசில்
ஆணி மூன்றால் ஆவி பிரிந்தார்
மானிடர் தனக்காய் மரித்த யேசு
தாரணி தன்னில் தந்தார் மீட்பு
வான்மகன் தந்த விடுதலைப் பாதை
சாற்றிட அவரும் சனம்முன் வந்தார்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. கன்னடத்தில் சாதனை

கோவையெனும் நகர்தன்னின் கொண்டதிசை மேற்கேதான்
கன்னடமாம் தேசமதில் கர்த்தனுர் வழிதனேயே
நெஞ்சினிக்க முழுமனதாய் நேர்மையதாய் ஏற்றுத்தான்
வாழ்ந்தார்கள் மண்மீதில் வாஞ்சையாய் சிலகாலம்
டச்சினமாம் அன்னியரும் நாடெடுக்க வந்தார்கள்
சரிந்ததுவே மக்களினம் சமரதனுல் தன்னுலே

இந்தநிலே மாற்றுதற்கு இங்கிருந்த ஆயரவர்
பேச்சதனில் வல்லபராம் பெருமனம்தான் கொண்டுள்ள
யோசேவ்வாஸ் முனிவரையே யோசனேயில் கண்டுவிட்டு
அன்னவரை இங்குதான் ஆசையுடன் அழைத்துமே
வீழ்கின்ற மக்களினம் வீறுநடை போடுதற்கு
ஆள்விட்டு வரச்சொல்லி அறிவித்தல் கொடுத்தாரே !
இச்செய்தி தன்னேயே இம்முனிவர் கேட்டவுடன்
மறுக்காமல் தானுமே மறைக்கருத்தை ஓதுதற்கு
சம்மதம்தான் கொடுத்திட்டார் சன்மானம் பார்க்காமலே

திருமுழுக்கு எடுக்காமல் திகைத்தார்கள் சிலபேர்கள்
ஈசனவர் சன்னதியில் இருமனங்கள் ஒன்றிணைந்து
மணவிழாச் செய்வதற்கும் மதக்குருக்கள் இல்லாமல்
வேதனேதான் அடைந்தார்கள் வெகுகாலம் கன்னடத்தில்
பாவங்கள் சொல்லித்தான் பாரமதே போக்குதற்கு
இறைத்தூதர் இல்லாமல் இடர்பலதும் பட்டார்கள்
இறந்தோர்கள் ஆன்மாவும் ஈசனவர் தாள்தனக்கு
இட்டுமே செல்வதற்கும் இறைப்பணிகள் செய்வதற்கும்
குருக்கள்தான் இல்லாமல் குவலயத்தில் அழுதார்கள்

மூன்றதுவாம் வருடங்கள் முனிவரால் ஆசையுடன்
கன்னடத்தில் இருந்துதான் '' கர்வாலோ '' என்றதொரு
மருமகனுர் தன்னுடனே மண்மீதில் இறையருளால்
நற்செய்தி பரப்பினுர் நாளிரவு கண்விழித்தே !
ஆலயங்கள் புதுப்பித்து அனுதினமும் பூசைவைத்து
தேவனவர் திருவாக்கு தெருவெல்லாம் செழித்திடவே
விழிரெண்டு குளமாகி விண்ணரசர் புகழ்பாடி
புனரமைப்பு செய்தாரே ! புடமிட்ட தங்கம்போல் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலுகைகளும் எடுப்பதற்கு சத்தியத்தின் மறைவிட்டு
மாறியோர் வாழ்ந்திருக்கும் மனையெங்கும் சென்றுதான்
நித்தியத்தின் வழிதனையே நிலமீதில் கூறியதால்
மனம்மாறி வந்தார்கள் மாமுனிவர் போதனையால்

கன்னடத்தில் இவரிருந்த காலமதாம் மூன்றாண்டில்
மீட்பதனின் பாதைதன்னை மிகவழகாய் கூறியே
மக்களினம் எழுந்திடவே மார்க்கமது காட்டினாரே !

★

## 20. கடல்கடந்த மக்களின் கண்ணீர் குரல்

ஈர்பத்து ஐந்து ஆண்டில்
ஈசனார் பணிதான் ஏற்று
ஓர்நாளில் கோவை மண்ணில்
ஓதினார் இறைவன் செய்தி !
நீர்தன்னால் சூழ்ந்து காணும்
நித்திலம்கொள் இலங்கைத் தீவில்
சீர்கேட்டை முனியும் கேட்க
சித்தத்தை யேசு ஈந்தார் !

இந்தியா வருதல் போது
இடையிலே கொழும்பில் தங்கி
வந்ததோர் குருவின் மூலம்
வாதைபல அறிந்தார் வாசும் !
பிந்தியே வந்தோ ரெல்லாம்
பிறந்ததோர் கோலம் சொன்னார் !
மந்தைகளைக் காக்க வேண்டி
மாதிடம்தான் பூண்டு விட்டார் !

ஆயிரத்தி ஆறு நூறும்
ஐம்பதாம் எட்டாம் ஆண்டில்
தீயகுண டச்சுக் காரர்
தீவதுவாம் இலங்கை பிடித்தார் !
பாயிழுத்து கப்ப லேறி
பறந்திட்டார் பறங்கிச் சாதி
மாயிருளைக் களைந்த யேசு
மறைசேர்ந்தோர் தொடர்ந்து வாழ்ந்தார் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறங்கியரும் போன பின்பு
பரன்யேசு மதமும் பூண்டோர்
பிறந்தமண் இருந்து வாழ
பிதாமகன் கருணை செய்தார் !
கறந்ததோர் பசுவின் பாலை
காம்பிலே சேர்க்க லாமோ !
திறந்ததோர் டச்சு நீதி
தீவெங்கும் நடுங்க இட்டார் !

சிப்பாய்கள் பலரை விட்டு
சிலுவைதான் அணிந்தோர் தன்னை
தப்பாமல் பிடித்துக் கட்டி
தாக்கவே ஆணை யிட்டார் !
கப்பந்தான் வாங்கிக் கொண்டு
காட்டித்தான் கொடுத்தோர் உண்டு !
செப்பியதோர் செபத்தின் வேளை
செருப்பாலே உதையும் கொடுத்தார் !

நாடுகள் விட்டு வந்த
நச்சரவ சிப்பாய் கூட்டம்
வீடுகளில் இருந்த பொன்னும்
விதைநெல்லும் கொள்ளை யிட்டார் !
ஏடுடைய நிலைய மொன்றை
எரித்துமே வஞ்சம் தீர்த்தார் !
வாடுகின்ற பயிரைப் போலே
வாழ்கின்றார் ஈழமக்கள் !

தங்கநகை எடுப்ப தற்கே
தரம்தனையே அரிந்து கொன்றார் !
மங்கையரை இழுத்துக் காட்டில்
மதுவெறியர் அழித்தார் கற்பை !
அங்கங்கள் வெட்டி வீழ்த்தி
ஆற்றொணுக் கொடுமை செய்தார் !
பொங்குகடல் எழுந்தாற் போலே
போர்க்கோலம் டச்சுப் பூண்டார் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்களையும் கொழுத்தி னூர்கள்
　　தெய்வங்கள் தெருவில் போட்டார்!
பேர்கன்னி மாதா கோவில்
　　பேய்க்கூட்டம் அழிக்கப் பார்த்தார்!
கூர்வாளால் முதியோர் பாலர்
　　குத்தியே உயிரை மாய்த்தார்!
ஓர்நாளா? தொடர்ந்து செய்தார்
　　ஒழிந்ததா! யேசு வேதம்!

கப்பலிலே கடலில் நின்று
　　கள்ளமாய் குண்டு போட்டார்!
தப்பிய மக்கள் தன்னை
　　தண்டிக்க சிறையில் இட்டார்!
செப்பியதோர் தர்ம மென்று
　　செய்தாரே! மாருய் அன்று
இப்படியும் டச்சு செய்தும்
　　இறையரசு வீழ வில்லை!

சிலுவையை அணிந்து கொண்டு
　　சீவிக்கும் மனிதர் கண்டால்
வலுவுடைய வாளால் வெட்டி
　　வாவியிலே எறிந்து விடுவார்!
உலுத்தர்கள் குழந்தை பெண்கள்
　　உடலதையும் அரிந்தார் மண்ணில்
கொலுக்கிடைத்தால் இதுவா! நீதி?
　　கொடுமைகள் நிலைக்கு மாமோ?

கயிற்றலே கட்டித் தூக்கி
　　காவோலை எரித்தார் கீழே!
வயிற்றிலே வாளால் குத்தி
　　வட்டமாய் நின்று சிரித்தார்!
பயிற்றிய டச்சுப் பாடம்
　　பரவின சந்தி எங்கும்
உயிர்தனையும் தூசு வென்று
　　உண்மையை விட்டா ரில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டைக்குள் சிறையும் வைத்து
 கொடுத்தார்கள் உணவு கொஞ்சம்
வாட்டியே சவுக்கால் மேலில்
 வந்ததால் எறிந்தார் பந்தாய் !
மாட்டிய விலங்கி னேடு
 மரங்களைத் தூக்கச் செய்தார் !
காட்டிய மீட்பின் பாதை
 காலத்தால் அழிக்க லாமோ ?

கடலிலே மீன்கள் சேர்த்தோர்
 கருணையாய் அழைத்தார் யேசு
அடலதே கொண்ட டச்சு
 அவர்களை அழைத்து ஓர்நாள்
குடலதே கிழித்தார் வாளால்
 குவலயம் அறிந்த காதை
உடலெல்லாம் கண்ணீர் வெள்ளம்
 ஊரெல்லாம் சோக உள்ளம் !

படித்திட்ட கல்விக் கூடம்
 படைகளும் புகுத்து விட்டார்
குடிகளு மிருந்த ஊரில்
 கூடாரம் அமைத்துக் கொண்டார் ;
மடிதலே இன்ப மென்று
 மறைபுகுந்தோர் வெளிக்கிட் டாரே !
விடியலும் தூர மில்லை
 விமலனுர் யேசு சொன்னுர் !

## 21. நெஞ்சத்தில் வேதனை

கன்னடத்தில் மூன்ருண்டு சேவை செய்து
 கடவுளார் நற்செய்தி கரும்பாய் ஓத
பொன்போன்ற இயற்கைவளம் பொலிந்து காணும்
 பொங்குகடல் சூழிலங்கை போக நின்ருர் !
தன்காலால் " மலையாளம் " " கொச்சி " சென்று
 தமிழ்வளர்த்த " திருவாரூர் " தங்கிப் பின்பு
தென்திசைசேர் தூத்துக்குடி தேசம் தன்னில்
 தெள்ளுதமிழ் கற்றுணர்ந்து தெளிவாய் நின்ருர் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேசமொன்று போட்டுத்தான் வெளியோர் காணு
　　வேதியரின் குலமுதித்தோன் வேட்கை கொண்டு
யாசகனுய் உடையணிந்து யாதும் விட்டு
　　யாத்திரையும் செய்வதற்கு தயாராணுர்!
நீசகுண டச்சினத்தார் நிலத்தில் செய்யும்
　　நீடுதுயர் களைவதற்கு நினைத்து தூயோன்
பாசமுடன் ஈழமக்கள் துயரும் போக்க
　　பரமனது பாதமது பணிந்து நின்ருர்!

பூண்டதோர் இறையரசர் புதிய வேதம்
　　புகுந்தவர்கள் பூமிதனில் பூசையின்றி
ஆண்டதுவாம் முப்பதாம் அலைந்து வாழும்
　　அடிமைநிலை அகற்றுதற்கு ஆசை கொண்டார்!
காண்கின்ற குருக்களிடம் கருத்தைச் சொல்லி
　　கடல் கடந்த மக்களது கண்ணீர் கூறி
மாண்புமிகு சேவைகளும் மறைக்காய்ச் செய்ய
　　மாமுனிவர் போசேவ்வாஸ் மனதில் பூண்டார்!

அடுத்ததோர் ஊர்வசித்த அடியார் கூட்டம்
　　அங்குதான் போவதுதான் ஆபத் தென்ருர்!
தடுத்துத்தான் பார்த்தார்கள் தக்க ஞாயம்
　　தானுரைத்து தந்திரமாய் தப்பி விட்டார்!
எடுத்ததோர் திட்டமொன்றை ஏசு வுக்காய்
　　எப்படியும் நிறைவேற்ற எண்ணித் தூயோன்
நெடும்பயணம் ஒன்றைத்தான் நெஞ்சில் வைத்து
　　நேர்மைகொள் யோணுடனே நேரம் பார்த்தார்.

" வழிப்பயணத்துக்கு கோலோ ! பையோ ! உணவோ ! பணமோ ! ஒன்றும் எடுத்துச் செல்லாதீர்கள். இரண்டு உள்ளாடைகளை யாரும் வைத்திருக்க வேண்டாம். எந்த வீட்டுக்குப் போனாலும் அங்கே தங்கியிருங்கள் அங்கிருந்தே புறப்படுங்கள். யாராவது உங்களை ஏற்றுக் கொள்ளாவிடின், அவர்களுடைய ஊருக்கு வெளியே போய் அவர்களுக்கு எதிர் சாட்சியாக உங்கள் கால்களிலிருக்கும் தூசியை தட்டி விடுங்கள் " *(லூக்காஸ் : 9 : 3)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலமுதல்வர் வழியாக குன்றும் சீனுய்
குவலயத்தில் மோசேசும் குரலும் கேட்டார்!
பலங்கொண்ட கோலியாத் படியில் வீழ
பாலனுக்கு துணைசெய்ய பரமன் நின்ருர் !
நிலம்விட்டு போனுலும் நிமலன் ஆசி
நீர்சூழ்ந்த உலகமதில் நீங்கா தன்ரூே
கலம்மீதில் யோசேவ்வாஸ் கரைதான் விட்டு
கர்த்தரது உரைதன்னுல் களிப்பாய் போனுர் !

இறையுரையின் சத்தியத்தை இவரும் ஏற்று
இலங்கையில் இருப்போரின் இன்னல் நீக்க
மறைத்தாசர் அன்றுமே மனமும் கொண்டு
மாஈழ மண்மிதிக்க மகிழ்ந்து நின்ருர் !
அறைந்திருந்த சிலுவையொன்றை ஆரும் காணு
அங்கிக்குள் மறைத்துமே ஆண்டி போல
துறையதுவாம் தூத்துக்குடி கப்ப லேறி
தூதனுய் ''யாழ்ப்பாணம்'' துணிந்து போனுர்!

சித்திரையின் குழப்பத்தில் சீரும் மாறி
சிதறுகின்ற அலையுடனே புயலும் சீறி
யுத்தமதே செய்வதைப்போல் எழுந்து சுற்றி
யுகமெல்லாம் இருளடைந்து வந்த தன்ரூே !
நித்திரையும் பசிப்பிணியும் நிரையாய் வாட்ட
நீரின்றி நினைவிழந்து நின்ரூேர் வீழ்ந்தார் !
பத்ததுவாம் இருநாட்கள் படகும் ஓடி
பாய்கிழிந்து மன்னுராம் பக்கம் கண்டார் !

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் பாகம்

# ஈழத்தின் முத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 1

## தேன்மொழி

### 22. யாழ்நகர் நோக்கி

ஏலயேலோம் ஏலவலி — தத்தெய்தாம்
ஏலவலி யேலேலோம்

தேரோங்கு மாந்தை விட்டு — நாங்கள்
தெண்திரையில் போவதற்கு
கூரோங்கு வேலும் கொண்ட — எங்கள்
குமரனைத்தான் வணங்கிடுவோம்
நேராக ஆஞ்சானை நீட்டி இழுத்து
நேர்த்தியாய் ஆலாத்தை பார்த்தது வைத்து
வாராகச் சுக்கானை வடிவாய் பிடித்து
வங்கிலே மாட்டடா கயிறையும் நன்ருய்
சீராக பட்டையால் தண்ணியை அள்ளி
சிதறியே எறியடா பாய்தனை நோக்கி
பாராமல் வையாதீர் பாவலே அங்கு
பாய்ந்ததாய் ஓடுதே! எங்கள் கப்பல்

— ஏலயேலோம் ஏலவலி

அலைகிழித்து போகு தடா — டச்சு
ஆணைக்குள் கப்பலும்தான்
தலைச்சூடா எழும்பு தையா — அந்தத்
தாமானையும் கட்டிவிடு
கலைகின்ற நீரொன்று விரைவுடன் வந்து
கடையாலைத் தள்ளுதே கவனமும் வேண்டும்
உலையிலே மண்பானை வைத்தது ஆண்டி
உண்ணவே! கஞ்சியே ஆக்கிடு வீரே!
தொலைவிலே இருக்கின்ற தீவுகள் பாரீர்
தொடங்குவோம் பயணமே தொங்குது அணியம்!
கொலையதே! செய்கின்ருர் கொடியவர் டச்சு
கோலத்தைக் காணவே யாழ்நகர் போவீர்

— ஏலயேலோம் ஏலவலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கெடுக்கும் நாச்சிக்குடா — அதோ
சாய்வினிலே தோன்றுதடா
நங்கூரம் எறிய வேண்டாம்
நாட்களும்தான் போகுதடா
அங்கங்கள் எல்லாமே அலுத்தது போச்சு
அடிக்கவே வேண்டுமே கள்ளையும் இங்கு
மங்கலாய் தெரியுதே குமுழ முனையும்
மாறுதே ! காற்றதே சோழகம் கடலில்
தங்குவோம் இன்றைக்கே மண்ணித் தலையில்
தரிக்கவே பாய்தன்னை இறக்கிடு வீரே !
எங்கேயும் போகாதீர் ஏறிய கப்பல்
எடுப்போமே நாளைக்கு சொல்வது கேளீர் !
— ஏலயேலோம் ஏலவலி

கதிரவனார் எழுந்து விட்டார் — நீங்கள்
கண்விழித்துக் கொள்வீரே !
மதியதுதான் தோன்று முன்னே — நாமும்
மறுகரைதான் அடைந்திடுவோம்
பதிகின்ற பூநகரி அழகது பாரீர்
பக்கங்கள் மாற்றுவீர் பாய்தனை மச்சான்
துதிசெய்யும் கோவில்கள் உயரமும் காணீர்
தூரத்தில் மாடிகளும் இல்லமும் உண்டு !
சதிசெய்யும் டச்சினத்தார் கோட்டையி லிருந்து
சத்தமதே குண்டதனுல் கேட்குதே கேளீர்
கொதிக்கின்ற மணல்கொண்ட கொழும்புத் துறையில்
கோலம்சேர் கடற்கரையில் இறங்கிடு வீரே !
— ஏலயேலோம் ஏலவலி

*

## 23. ஒல்லாந்த தேசாதிபதி ஹென்றிக் அட்றியான் வான்றீட் (காலம் — கி. பி. 1687 — 1692)

ஆயிரத்து அறுநூற்று எண்பத்து ஏழதுவாம்
ஆண்டதனில் ஈழமதை ஆள்வதற்கு ஆளுநராய்
அட்றியான் வான்றீட் அரக்ககுண டச்சினத்தான்
யாழ்ப்பாண — திருமலையும் — யானைதிகழ் வன்னியையும்
மீன்பாடும் மட்டுநகர் மிக்கபுகழ் கொழும்பையுமே
படைப்பலத்தால் பிடித்துமே பாதுகாப்பாய் வைத்திருந்தான் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிமா நகர்தனையே கைப்பற்றும் துணிவோடும்
கரையோரப் பகுதிகளை காவல்தான் செய்வதற்கும்
கற்கள்பல சேர்த்துமே காலம்பல ஆள்வதற்கும்
கோட்டைகளைக் கட்டித்தான் கொடுமைகளும் புரிந்திட்டான்
மக்களையும் அழிப்பதற்கும் மனைகளையும் கொழுத்துதற்கும்
இவனுக்குக் கொடுத்ததோர் இதமான கட்டளைதான்
இவைகளைத்தான் நிறைவேற்ற அங்கிருந்து வந்துமே
ஆசையுடன் ஏறினன் ஆளுநனும் வான்றீட்டும்!

(வேறு)

| | |
|---|---|
| தலைமயிர்தான் பறட்டையதாய் | கொண்டோன் |
| தஞ்சம்கொள் மக்களுயிர் | உண்டோன் |
| கொலைசெய்து குருதிபல | கண்டோன் |
| கொலுவதனை தந்திரத்தால் | வெண்டோன் |
| முருங்கைமரம் வளர்ந்ததைப்போல் | உயரம் |
| முழுக்குலத்தை அழிப்பதிலே | வயிரம் |
| உருவெடுத்த யமன்போன்ற | துயரன் |
| உள்நாட்டில் இரும்பனெனும் | பெயரன் |
| மதுகுடித்து உறங்கிடுவான் | மஞ்சம் |
| மனிதகுலம் அழித்திடுமோர் | நெஞ்சன் |
| பொதுப்பணத்தை செலவுசெய்யா | கஞ்சன் |
| பொய்நிறைய மனம்கொண்ட | வஞ்சன் |
| குருக்களையும் சிறைவைக்கும் | வீரன் |
| குத்தகைகள் கூட்டுவதில் | சூரன் |
| விருந்துகளில் பெண்பிடிக்கும் | மாரன் |
| விதம்விதமாய் பேசிடுவான் | சோரன் |
| கோட்டைக்குள் பலியெடுக்கும் | கரத்தோன் |
| கொடுமைசெய்ய உருவெடுத்த | தரத்தோன் |
| நாட்டையுமே பிரித்தாளும் | தரத்தோன் |
| நச்சரவ பாம்புநிகர் | சிரத்தோன் |
| சிலுவைமரம் கண்டுவிட்டால் | பதைப்பான் |
| சீற்றமுடன் காலாலே | உதைப்பான் |
| வலுவுள்ள சவுக்காலே | வதைப்பான் |
| வன்செயல்கள் தூண்டிவிட | கதைப்பான் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தை ஆள்விட்டு எரிப்பான்
ஆண்மக்கள் தோலேயுமே உரிப்பான்
கோலவெழில் குமர்கண்டால் சிரிப்பான்
கொடுவாளால் மனிதசிரம் சரிப்பான்

காணிகளை மக்களிடம் பறிப்பான்
காய்க்கின்ற பனைதென்னை தறிப்பான்
தோணிகளில் முத்தெடுப்போர் மறிப்பான்
தொகைகளில்லா வரிகளையும் குறிப்பான்

பள்ளிசெல்லும் பாலர்களை தடுப்பான்
பாவையர்கள் கற்பழித்து கெடுப்பான்
வெள்ளிபல மதம்மாறக் கொடுப்பான்
வெகுமதிகள் காட்டித்தான் அடுப்பான்

அண்டையிலே வாழ்வோரை கொல்வான்
அவனியிலே பொய்பலது சொல்வான்
தண்டனைகள் கொடுப்பதற்கு செல்வான்
தன்பலத்தால் ஏழைகளை வெல்வான்

புனிதர்களின் படம்கண்டால் கிழிப்பான்
பூசைகளில் பக்தர்களை அழிப்பான்
தனித்திருக்கும் குருக்கள்சிரம் ஒழிப்பான்
தலைதூக்கும் மறைகளையும் பழிப்பான்

★

## 24. டச்சுப் பிரகடனம்

'' மணற்றிடல் '' யாழ்ப்பாடி
பரிசுபெற்ற பூமி
அதை இப்போ ஆள்வதோ — மாற்றார்

மதவிடுதலையை விரும்பியவர்கள்
கடலுக்குள் இருக்கும் சிப்பிகளாக
சேற்றுக்குள் புதைந்து — மறைந்து — ஒழித்து
வாழ்கின்றார்கள்
ஆனால்...... '' சிப்பிக்குள் இருப்பதோ முத்து ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரை யோரங்களில்
காணப்படும் அலரிப்பூக்கள்
கதிரவனின் வெப்பத்தால்
வாடுகின்றன — ஆனால்......
வெப்பமோ நிரந்தரமானதல்ல

கண்ணுக்கு அழகாயிருக்கும்
அலரிப்பூவின் கொட்டை
அரைத்துக் குடித்தால்
நஞ்சாகி ஆட்களைக் கொல்லும்
சக்தி கொண்டது.

" யாழ்ப்பாணக் " கோட்டைக்கு முன்னால்
ஆழ்கடலில் பிடிக்கப்பட்ட மீன்கள்
கரையில் கொண்டுவந்து
வயிறுபிளந்து குடல்கள் எடுத்து
சுடுமணலில் காயவிடப்பட்டுக்
காணப்படுகின்றன

மதவிடுதலையை விரும்பிய மக்களின்
உடல்கள் கோட்டைக்குள் குடலெடுக்கப்பட்டு
காக்கைக்கும் — கழுகுக்கும் — பருந்துக்கும்
விருந்தாக்கப் படுகின்றன.

" டும் " " டும் " என்ற
பறையொலி யாழ்ப்பாணக்
கோட்டைக்கு முன்னால் கேட்கின்றது.

" சாம்புவன் " அரையில்
பறைமேளத்தைக்கட்டி " கட்டியம் "
கூறுவதற்காக கோட்டைக்கு முன்னால்
நின்று — " டச்சுப்பிரகடனத்தை " வாசிக்க
ஆயத்தமாகின்றான்.

" பறைமேளம் " மேளத்துக்குக்
கொடுக்கப்பட்ட " சாதிப்பெயர் "
சாதிக்குப் பெயர் வைப்பதில்
தமிழர்கள் சமர்த்தர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சாம்புவன் " கையிலுள்ள
வலது — இடது — தடிகள்
பதனிட்டுக் காணப்படுகின்றன
மேளத்துக்கு அவை கூரிய
வாளாகத் தென்படுகின்றன.

அவன் தனது கையிலுள்ள
வலது — இடது தடிகளால்
மேளத்துக்கு அடிக்கின்றான்
" மேளம் " அடி பொறுக்க முடியாமல்
" கண்ணீர்ப்பூக்களை " உதிர்த்து விடுகின்றது.

அவன் ஒருமுறையல்ல — பலமுறை
மேளத்துக்கு அடிக்கின்றான்.
மேளம் — வலது — இடது
பக்கங்களை உடைத்துக்கொண்டு
தன்னிச்சையாக போக விரும்புகின்றது.

தெருவில் பறைசாற்றத் தொடங்குகின்றான்
அவனுக்கும் பயம்.
மக்கள் எழுந்தால்
தான் தூசு என்பதை
உணர்கின்றான்.

அவனால் டச்சுப்பிரகடனம்
வாசிக்கப்படுகின்றது.
" இங்குள்ள மக்கள் எல்லோரும்
டச்சுமதத்துக்கு மாறவேண்டும்.
" திருமுழுக்கு — திருமணம் — மரண
இறுதிக்கிரிகைகள் " எல்லாம் டச்சு
மத முறைப்படி நடாத்தப்பட வேண்டும்.
சிறுவர்கள் டச்சுப் பாடசாலையில்
கட்டாயமாகக் கல்வி கற்க
வேண்டும்."

இதை மீறினால் பல தண்டனைகளும், சித்திர
வதைகளும் கொடுக்கப்படுமென்று
கூறி தனது வாசிப்பை முடித்துவிட்டு
போய்விடுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கப்பட்ட கத்தோலிக்க கிறிஸ்தவ மக்கள் — தங்களின் ஆன்ம வழிபாடின்றி முப்பது வருடங்களாக — ஒரு குருவுக்காகக் காத்துக்கொண்டிருந்தனர்.

★

## 25. மக்களின் விண்ணப்பம்

இறைமகன் எங்களைக் காரும் — இந்த
இலங்கையில் நாங்களும் படுதுயர் பாரும்
அறைகின்ற எம்மொழி கேளும் — மண்ணில்
அடியவர் தனக்கொரு மீட்பதைத் தாரும்.

வீட்டினில் செபமது புரிந்தால் — டச்சு
வீரரும் எம்தனின் செல்வமும் எரிப்பார்
பாட்டினில் கடவுளைப் புகழ்ந்தால் — அந்தப்
பாதகர் எங்களின் பாவையர் பிடிப்பார்.

பள்ளிகள் கட்டிடம் சேதம் — எம் தன்
பாலர்கள் படிப்பது அவர்களின் வேதம்
அள்ளிய வெள்ளியைத் தந்து — நாமும்
அணுகிய சமயமும் விட்டிடு என்பார்

குருக்களைக் காண்பது இல்லை — தீய
கும்பலும் செய்திடும் கொடுமைகள் பெரிது
அருகினில் படையணி அமைப்பார் — அவர்
அழிந்திட உதவியும் செய்திடு மரியே!

வழிபடும் எங்களின் தலங்கள் — மற்றும்
வயிறது நிரப்பிடும் நெல்வயல் புலங்கள்
அழிவது செய்தது விட்டார் — டச்சு
அன்னியர் வந்தது ஆக்கினை யாச்சே!

மண்ணதில் துயரங்கள் போக்க — ஈழ
மக்களின் வேதனை கவலையும் நீங்க
உண்பதும் உடுப்பதும் அளிக்கும் — எல்லா
உயிர்களைக் காத்திடும் தூயவன் நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணதில் சமத்துவம் கூட — வாழும்
மானிடர் மீட்பது எங்கணும் நீட
விண்ணது விட்டிங்கு வந்த — எம்தன்
விமலனும் பகைகளும் நீக்கிடு வீரே !

நம்பிக்கை உம்மிடம் கொண்டோம் — வேத
நாயகன் புதுமைகள் பூமியில் கண்டோம்
மும்மையும் உணர்ந்திடும் ஈசா — எம்மை
முற்றிலும் அழிவது நீக்கிடு நேசா !

கண்ணது திறந்தது விழித்தார் — ஊமை
கதைத்திட வரமது அன்புடன் அளித்தார்
மண்ணதில் முடவரும் நடந்தார் — ஏழை
மக்களின் உரிமையை யேசுவே ! தாரும்

★

## 26. கொழும்புத்துறை

தென்னைமர குருத்துக்கள் தெருவெங்கும் தோரணமாம்
செவ்விளனீர் முகமெல்லாம் செஞ்சோதி விளக்குகளாம்
மஞ்சள்நிற தாழம்பூ மங்கலத்தின் அறிகுறியாம்
கடற்கரையின் வெண்மணல்தான் கால்மிதிக்கும் கம்பளயாம் !
சங்குகள்தான் மதுரநிகர் சாரீரம் பாடிடுவார்
நண்டுகள்தான் கையாலே நட்டுவம்தான் போட்டிடுவார் !

இத்தனையும் அழகுடனே இன்பபுரி என்றுரைக்கும்
யாழ்ப்பாடி பரிசுபெற்ற நாற்றிசைகள் புகழ்பூத்த
" மணற்றிடலாம் " கொழும்புத்துறை மாற்றானல் பிடிபட்டு
சுரண்டலுக்கும் அகப்பட்டு சுதந்திரமும் இழந்துதான்
பொலிவிழந்த துறையாக பொதுமாதாய் ஆனதன்றே !

கடற்கரையை அண்டியே கட்டியதோர் குடிசையிலே
கைவிளக்கு எரிந்துமே காட்டியதே வீடென்று
கப்பலதே விட்டுத்தான் கர்த்தனூர் அருளினல்
கையுதவி யோனுடனே கரைவந்த " யோசேவ்வாஸ் "
ஆண்டியதே கோலத்தில் அந்தரித்து நின்றூரே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்துதான் வந்ததினுல் நன்ருகக் களைத்துவிட்டார் !
அவர்களைத்தான் கண்டிட்ட அங்கிருந்த இருபெண்கள்
" எங்கேதான் இருந்து நீர் எடுபட்டு வந்தீர்கள் "
என்றவர்கள் கேட்டதற்கு ஏழைபோல் நின்றமுனி
" மன்ஞரில் இருந்துமே மாதர்களே வந்தோமே "
பதிலுரைத்தார் — " யோசேவ்வாஸ் " பரதேசி கோலத்திலே!
பசிக்களையால் இருபேரும் பக்கத்தில் கிடந்ததோர்
மனம்குத்தி ஒற்றிலே பணிவுடனே இருந்தார்கள் !

" பரதேசி இருபேரும் பலநாட்கள் பட்டினிதான் "
பெண்ணொருத்தி சொல்லியே பெரும்உதவி செய்வதற்கு
வடித்ததோர் கஞ்சிதனை வட்டில்களில் ஊற்றியே
சோறுகொஞ்சம் கலந்துமே துருவியதோர் தேங்காய்ப்பூ
இட்டுமே கொடுத்தார்கள் — இருவரும்தான் பசிதீர்க்க
குடித்துமே அங்குதான் கூலிகள்போல் இருந்தார்கள் . !

இருள்சூழ்ந்து விட்டதனுல் இருவருமே அந்தரித்து
இறையேசு சரணமதை இதயத்தில் நிலைநிறுத்தி
அங்கிருந்த பெண்களிடம் " அம்மணிகாள் ! எங்களுக்கு
இன்றிரவு தங்குதற்கு இடம் தருக !" என்ருர்கள்.

மாதர்களும் ஆண்டிகள்மேல் மனமதே இரங்கித்தான்
படுப்பதற்கு கிழிந்ததொரு பனவோலை பாயையுமே
கொடுத்துத்தான் சொன்னுர்கள் " கொடுங்காற்று சோழகமும்
பேய்போல வீசுதடா — ஆண்டிகளே ! நீங்களும்தான்
தாவார ஓரத்தில் தலைவைத்து படுத்துமே
வெள்ளாப்பு வந்ததுமே வெளிக்கிட்டுப் போவீரே ! "
உரைத்ததோர் வார்த்தையதை உவப்புடனே கேட்டுமே
மண்ணதனில் பாய்விரித்து மாமுனியும் யோனும்தான்
உரிமைதனைக் கொடுப்பதற்கும் உரைத்தமொழி பகர்வதற்கும்
விண்ணரசர் வணங்கியே விழிமூடி உறங்கிஞர்கள்.

★

## 27. வயிற்றோட்ட நோய்

ஆண்டியின் கோலம் அடிகளும் பூண்டு
ஆருயிர் யோணுடன் ஒன்றிணைந்தே
கான்தெரு வீட்டின் கதவுகள் தட்டி
கனிவுடன் பிச்சை கேட்டாரே !
தூண்களின் மறைவில் துண்டின் மேலே
துகிலது குறையச் செய்தாரே !
மாண்புயர் பணியை மண்ணில் ஆற்ற
மாமுனி வாசும் வந்தாரே

கோடையின் வெய்யில் கொடுத்தது வெப்பம்
கொடியது வயிற்றின் ஓட்டமும்தாள்
பாடையில் வைக்கும் பயங்கர நோயும்
பரவிய யாழ்நகர் எங்கணுமே !
ஓடையில் தண்ணீர் ஓடிய போன்று
ஓங்கிய பிணியும் அங்கேதான்
வாடையே காணு வாசின் வாழ்வில்
வந்தது மேலும் சோதனைதான் ?

சொந்த மென்று சொல்லும் யோணும்
சோர்ந்து படுத்தார் நோயாலே !
அந்த விடயம் அயலார் கேட்டு
அகற்றும் பணியை மேற்கொண்டார் !
இந்த நிலையில் இருவர் தன்னை
இரக்க மின்றி ஊர்வசித்தோர்
குந்தி இருந்த குடிசை நீக்கி
கூர்முள் காட்டில் போட்டாரே !

கோரச்சாதி தாண்டவ மாடும்
கொடிய யாழ்நகர் மண்மீதில்
ஆரும் இவர்க்கு ஆறுதல் சொல்ல
அணுகிய தில்லை அங்கேதான் !
“ பாரும் இவர்கள் பறையன் ” என்று
பகர்ந்தனர் அவ்வூர் மக்களே !
நீரும் கஞ்சி நிலத்தி லின்றி
நீடு பசியால் வாடினரே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளுக் காட்டில் முனியும் யோனும்
முனுகும் சத்தம் தனைக் கேட்க
" பள்ளி " தாழ்குல பாவை " வள்ளி "
பக்கம் எட்டிப் பார்த்தாளே !
தள்ளி விட்டு தனியே வாடும்
தவிக்கும் இருவர் உயிர்காக்க
அள்ளி யெடுத்து அவர்கள் மீட்க
அடிமை அவளும் போனாளே !

கொல்லும் சாதி கொண்ட மக்கள்
கொடிய விலங்கு நீக்கிடவே
இல்லம் சென்று இருவர் காக்க
இனிய கஞ்சி எடுத்தாளே !
கல்லும் முள்ளும் கடந்து சென்று
காலன் கயிற்றை அறுப்ப தற்கு
அல்லல் கொண்ட அவளும் அன்று
ஆண்டிக் குதவி செய்தாளே !

தாழ்ந்த குலத்தின் தையல் தன்னால்
தக்க உதவி பெற்ற பின்பு
வீழ்ந்த இருவர் நோயும் மாறி
விரைந்து சேவை செய்தனரே !
ஈழ மண்ணில் இருந்த மக்கள்
இன்னல் போக்க இவரும்தான்
ஆழக் கடலைத் தாண்டி வந்து
அரிய உதவி புரிந்தாரே !

★

## 28. மந்தைகளைத் தேடல்

மனைதனது முன்பாக மனுமகனார் சின்னமதை
மாட்ட மாட்டார் !
அனைவருமே செபமாலை அணிகின்ற பழக்கமதை
அழித்து விட்டார் !
மூனைகின்றார் வாழ்வளிக்க முன்னோர்கள் முகம்காண
முடிய வில்லை !
நினைந்துருகி தனிமையிலே நிலமீதில் அழுகின்றார்
நிழலாய் வாசும் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையிலே படுக்கையிலே கண்விழித்து எழுந்தவுடன்
கஞ்சி இல்லை !
பாலைநில வனத்திலே பகல்வேளை வெப்பம்போல்
பசித்தோர் வயிறு
சாலைதன்னில் இரப்போர்கள் ! சக்தியில்லாப் பாலர்களும்
சந்தி எங்கும் !
மாலைவரை யாழ்மண்ணில் மாமுனிவர் கண்டுதான்
மனமும் நொந்தார் !

தேவனவர் இருக்கின்ற தெய்வீக ஆலயத்தை
தேட முனைந்தார் !
பாவவிருள் கொண்டோர்கள் பட்டவினைகள் போக்குதற்கு
பாடு பட்டார் !
காவலதே செய்கின்றார் கல்நெஞ்ச டச்சினத்தார்
கண்டோர் கொல்ல
ஆவலதாய் அடிமைநிலை அகிலமதில் போக்கிடவே
அவரும் அலைந்தார் !

முப்பதுவாம் ஆண்டுகளில் மூண்டதோர் நெருப்பதனால்
முற்றும் இழந்தார் !
இப்படித்தான் வாழ்ந்தார்கள் உரிமையற்ற மக்களாய்
ஈழம் மீதில் !
செப்புதற்கு ஆளில்லை செத்துத்தான் பிழைக்கின்றார்
செருப்பாய் இங்கே !
உப்பைத்தான் தண்ணீரில் கரைப்பது போன்றேதான்
உரைக்கின்றார் மானிடரை !

வான்றீட்டாம் அரக்கனவன் வகுத்ததோர் அடக்குமுறை
வையம் தூற்றும் !
கான்திரியும் மான்கூட்டம் கானலதையே நீரென்ற
கதையும் அளப்பான் !
மீன்கூட்டம் கரைவந்தால் மீண்டும்தான் கடல்போகா
இவன்சிறையும் அப்படித்தான் !
ஊன்தின்னும் பேயாகி ஊரெல்லாம் அழிக்கின்றார்
உலுத்தோனின் சிப்பாய்கள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனைக்கும் மத்தியிலே இரவுகளும் பகலதுவும்
இடங்கள் பார்த்தார்!
பெத்ததோர் தாய்போலே பிரிந்ததோர் சிசுசேர்க்க
பெரும்துயர் பட்டார்!
செத்தவனை உயிர்கொடுத்த செகமீட்பர் யேசுபிரான்
செய்தார் புதுமை!
யுத்தத்தில் அழிகின்ற யுகமக்கள் மீட்பதற்கு
ஒழியாக வாசுவந்தார்!

★

## 29. அரக்கன் வான்றீட்டின் சபை

திருச்சபை மீண்டும் வருவதோ — அது
திரும்பவும் இலங்கையில் பெருகவோ — என்று
இரும்பு மனதுடை வான்றீட்டும் — பொங்கி
ஈழ மண்ணதில் துள்ளினான் — அதை
அரும்பில் அழித்திட வேண்டியே — புது
ஆணைகள் பலதையும் இட்டானே — பெரும்
செருக்களம் போலது ஆக்கிட — டச்சு
சேனையின் தொகைகளைக் கூட்டினான்.

துறவிகள் பலரையும் பிடிக்கவே — பல
தூதுவர் பலரையும் துரத்தினான் — இங்கு
பிறந்தவர் எவரது என்றாலும் — தன்னின்
புதியது மதத்துக்கு வரவேண்டும் — அன்றேல்
இறப்பது நிச்சய மென்றோதி — அந்த
இரும்பனும் கட்டளை இயற்றிட்டான் — இரு
சிறகுகள் இல்லாப் பறவைபோல் — துயர்
சீவியம் நடத்தினர் மக்களே!

"கோவை" இருந்தொரு முனிவனும் — இங்கு
கோலமும் வேறது மாற்றியே — சின்னத்
தீவையும் எளிதினில் பிடிக்கவே — நாலு
திசைகளில் நடைதனில் திரிகின்றான் — அவன்
சேவைகள் சொல்லிட முடியாதாம் — என்று
செப்பினர் எம்மத ஆட்களே — குரு
நாவையும் அரிந்தது நீருமே — எந்தன்
நாயது தனக்குமுன் போடுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுநர் இப்படிக் கத்தவே — அங்கு
அருகினில் நின்றவர் திகைத்திட்டார் — பின்பு
சூழ யிருந்தவர் தனைப்பார்த்து — தன்னின்
சூழ்ச்சி ஒன்றையும் ஓதினன் "நீரும்
ஈழ மண்ணில் இவனையே — எந்தன்
இருப்பிடம் கொண்டது வந்திட்டால்
ஏழு கோறனைப் பகுதிக்கே — உடன்
ஏந்தல் பட்டமும் அளிப்பேனே"

முரசது அடித்தது அவனுமே — பல
மூலைகள் எங்கணும் அறிவித்தான் — முனி
சிரமது அரிந்தது எடுக்கவே — உயர்
சிகரமும் கடல்களும் தேடினன் — பல
புரங்களும் குகைகளும் சென்றுமே — ஈனப்
புல்லனும் களைத்தது விட்டானே — யேசு
வரமது கொண்டவர் யோசேவ்வாஸ் — இவன்
வலைதனில் விழுந்தது இல்லையே!

ஒற்றர் வைத்தது பார்த்திட்டான் — இந்த
ஒருகுரு பிடித்தது விடுதற்கே — முன்பு
கற்ற வித்தைகள் பலதுமே — இதில்
காட்டி வென்றிட முனைந்தானே — சிலர்
பெற்ற தொகையது வெள்ளிக்கே — முனி
பெருமகன் பிடித்திட அலைந்தாரே!
குற்ற மில்லா குணக்குன்றை — வஞ்ச
குள்ள நரிகளும் பிடிக்குமோ!

பறையது ஓலியது கேட்டுமே — அந்தப்
பட்டினித் தொண்டரும் பயந்தாரே!
இறைமகன் பணியது புரியவே — பெரும்
இடைஞ்சலும் வந்தது எண்ணியே — தானும்
மறைந்திட யோசனை கொண்டுமே — வேத
மக்களின் உதவியை நாடினர் — பின்பு
அறைதனில் நாட்சில ஒளித்துமே — தூய
அடிகளும் காலமும் போக்கினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' சின்ன ரோமை '' என்றோதும் — எழில்
சிற்றூர் பெயரது '' சில்லாலை '' — அங்கு
அன்னை மரியாள் உறைகின்றாள் — அவள்
அடைக்கலம் புகுவது சிறந்ததே — என்று
தன்னம் தனிமையில் நடந்துமே — யேசு
தாசனும் அவ்விடம் போனாரே ! — மக்கள்
துன்பம் துடைத்திட எண்ணியே — மறைத்
தூதனும் மகிழ்வுடன் இருத்திட்டார் !

ஆட்கள் விட்டது தேடினான் — அந்த
அரக்க குணத்தோன் வான்றீட்டும் — அவன்
கூட்டிய சபைதனின் சூழ்ச்சியும் — மண்ணில்
குட்டிச் சுவரது ஆச்சுதே ! — ஊரில்
காட்டிக் கொடுக்க நினைத்தோர்கள் — ஆசை
கானல் நீராய்ப் போனதே — கையில்
பூட்டிய விலங்குகள் ஒடிக்கவே — யேசு
புகட்டிய பாதையில் ஏகினார்

★

## 30. ஓய்வுநாள்

மல்லிகைப்பூ தனக்கு
மணம் கொடுப்பதில்லை
சில்லாலை வந்த துறவி
யோசேவ்வாஸ் — ஒரு மல்லிகைப்பூ

இவ்வூர் பொய்கையில்
இருக்கும் தாமரை இலையில் படிந்திருக்கும்
பனித்துளிகள் காலைக்கதிரவன் சுடர்பட்டு
நீரோடு சங்கமமாகின்றன.

அரக்கன் வான்றீட்டின்
கூலிப்படையினால் யாழ்நகர்
மக்கள் சாவோடு சங்கமமாகின்றனர்

'' லூயிஸ் '' சில்லாலையில்
வசதி படைத்தவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு நல்லநாள் வீடு
திருப்பி மேயும்படி சோதிடன் கூறினன்.
மத வழக்கத்தை மாற்றி வீடு மேய
ஆரம்பித்தான் லூயிஸ்

மனைவி கெஞ்சினுள்,
ஊரார் அஞ்சினர்
கொஞ்சமும் அவனது நெஞ்சு
இழகவில்லை. மாமுனி வாசும்
மறித்துப் பார்த்தார் அவன்
கேட்கவில்லை.
சோதிடனை நம்பி ஒய்வுநாளில்
வீடு வேய்ந்து முடித்தான் லூயிஸ்
டச்சு சிப்பாய்களைக் கண்டு
இருளில் ஒளித்திடும் யாழ்நகர் மக்களைப்போல்
கதிரவன் நீலக்கடலுக்குள் மறைந்து கொண்டான்

அன்றில் பறவைகள் தனது
குஞ்சுகளை நெஞ்சணைத்து,
சுதந்திரமாக கொஞ்சி
கூட்டில் விளையாடிக்கொண்டு
" ஆனந்தராகம் " பாடிக்கொண்டிருந்தன.

சில்லாலை இடுகாட்டில் அடக்கம்
செய்யப்பட்ட மரித்தவர்களின்
உடல்கள் — நிம்மதியாகத்
தூங்கிக்கொண்டிருந்தன.

யாழ்நகர் — கத்தோலிக்க
கிறிஸ்தவ மக்கள் — டச்சுப்
சிப்பாய்களால், எப்போது
தாக்கப்படுவோமென்று பயந்து
" முகாரி " ராகம் பாடிக்கொண்டிருந்தார்கள்.

திடீரென அக்கினிச்சுவாலைகள் எழுந்தன
" லூயிசின் " புதிதாக வேய்ந்த வீடு
தீப்பற்றிக் கொண்டது.
" ஒய்வுநாளை துர்ப்பிரயோகம் செய்ததால்
லூயிசுக்குத் தண்டனை கிடைத்தது " என
ஊரார் பேசிக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31. நத்தார் படுகொலை

மண்ணிலே மனிதர் போலே
    மாதமாம் டிசம்பர் தன்னில்
அண்ணலாம் குழந்தை யேசு
    அவதரித்தார் தொழுவ மீதில்!
விண்ணிலே இருந்து வந்து
    விடுதலை விதைத்த யேசு!
புண்ணியன் பிறந்த நாளை
    புகலுவார் "நத்தார்" என்றே!

நத்தாரில் யோசேவ் வாசும்
    நடுச்சாமப் பூசை வைக்க
மெத்ததோர் ஆசை கொண்டு
    மேன்மையாய் இடங்கள் தேர்ந்தார்!
வத்தைகள் மலிந்து காணும்
    வலிமைகொள் மக்கள் வாழும்
சத்திய வேதம் வந்த
    சமுத்திரக் "கரையூர்" ஒன்றே!

கொஞ்சு மொழிகள் பேசும்
    கோலம்சேர் பால ரோடு
அஞ்சிய மாதர் ஆண்கள்
    ஆவலாய் அங்கு போனார்!
நெஞ்சமும் பயந்து தூதர்
    நெய்தலின் நிலத்தில் நின்று
பஞ்சையாய் வேடம் பூண்டு
    பலியதை ஆரம்பித்தார்.

(நத்தார் என்பது — கிறிஸ்மஸ் தினம்)

காட்டியே கொடுக்கு மந்த
    கயவர்கள் மூல மாக
தீட்டிய வாசின் திட்டம்
    தீயவர் டச்சு அறிந்தார்!
கோட்டைக்குள் இருந்த எல்லா
    கொலைகாரச் சிப்பாய் தன்னை
வேட்டைகள் ஆடு தற்கு
    வெளியிலே விட்டான் வான்றீட்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பலி தொடங்கி வாசும்
திரியேக கடவுள் தோற்றம்
கரும்பதாய் விளக்கிக் கூறி
கரந்தது பூசை செய்தார் !
விருந்துகள் முடிந்த பின்பு
விளம்பினுர் நிறைவு ஆசி
பெரும்புயல் வீசி ஞற்போல்
பேரொலி கேட்ட தப்போ !

பரிகளில் வந்த சிப்பாய்
பக்கங்கள் சூழ நின்ருர் !
எரிகின்ற பந்தம் ஏந்தி
எழுந்தங்கே ஓடி வந்தார் !
வரியது வாக வந்து
வளைத்துமே வட்ட மிட்டார் !
புரியாத நிலைக்கு ளாகி
பூவையர் கத்தி ஞரே !

( வேறு )

கரமது வாளது அள்ளியே — அந்தக்
கயவரும் அங்கது துள்ளியே — மக்கள்
சிரமது தன்னையும் அரியவே — அவர்
சீறிய பாம்பென வந்தாரே !
இரவினில் கொடியவர் சூழ்ந்துமே — ஒரு
இரக்கமும் இன்றியே கொதித்துமே – பாலர்
துரத்திப் பிடித்து வெட்டியே — உடல்
துடிக்க நெருப்பில் போட்டாரே !

பெண்கள் தன்னைப் பிடித்தாரே — வீழ
பெரிய சவுக்கால் அடித்தாரே ! — அவர்
கண்போல் மானமும் போக்கவே — ஈனர்
காரிகை சீலையும் கிழித்தாரே ! — மேலும்
மண்ணதின் மீதினில் தள்ளியே — மாதர்
மயங்க உதையும் கொடுத்தாரே ! — அந்த
வெண்ணுள யோசேவ் வாசரோ — உடன்
வேடமும் மாற்றியும் தப்பினுர் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிய போரது அறையிலே — நீசர்
ஆடவர் பலரையும் சிறைசெய்தார்
தேடிய முனிவரும் ஓடினர் — டச்சுத்
தேவையும் வீணது போச்சுதே — பின்பு
நீடிய வாளது தூக்கியே — ஆண்கள்
நிரையினில் விட்டது தாக்கினர் — அங்கு
ஓடிய இரத்த வெள்ளமே — பெரும்
ஓடமும் தள்ளுதல் முடியுமே !

சிறையது வைத்தது வதைத்தாரே — பல
சிப்பாய்கள் சேர்ந்து உதைத்தாரே ! — இருள்
அறையில் இட்டது பூட்டினர் — அங்கு
அடித்தும் அவர்களை நகைத்தாரே — பெரும்
நிறைகல் தன்னை தலையிட்டார் — வழி
நீண்ட நேரம் நடத்திட்டார் — மக்கள்
முறையில் வரவே சொல்லியே — அந்த
முரடரும் சவுக்கால் வாட்டினர் !

அக்கினி குழம்பது வாகியே — டச்சு
அரக்கரும் வீடுகள் எரித்தாரே — பின்பு
பக்கம் பலது சென்றுமே — வளர்
பயிர்கள் நெற்கதிர் அழித்தாரே ! — அவர்
சக்கரம் போல சுழன்றுமே — நின்ற
சமுத்திர வள்ளமும் உடைத்தாரே — வேத
மக்களைத் தேடி அலைகின்றார் — யேசு
மறைகளை அழித்திட முனைகின்றார் !

இத்தனை கொடுமைகள் புரிந்தாலும் — மக்கள்
இறைமகன் யேசுவை விடவில்லை — எழில்
முத்ததை சிப்பிகள் காக்குமே — அந்த
மூடரும் அறிந்தது இல்லையே — உயர்
சத்திய வேதத்தை அழிக்கவே — டச்சுச்
சாதியும் சமரது புரிகின்றார் — தூய
உத்தமர் பலரது மரணமே — பூவில்
உதித்திடும் மீட்பதன் பாதையே !

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 2

## மான்மயில்

### 32. மருதமடு மாதாவின் திருப்பதி

கலங்கள் எல்லாம் காற்றில் பறக்கும்
புரத்தின் கொடிகள் புகழைக் காட்டும்
வணிகர் பலரும் வாஞ்சை கொள்வார்
நெற்கதிர் குவியல் நெடுமலை ஒப்பாம்

பாலாவி மீதில் பவனம் ஓடும்
அலைகடல் அருகில் அலிகள் பாடும்
பண்டை நகரம் பலபேர் அறிவார்
மாந்தை பதியின் மாண்பு இதுதான்!

தென்றல் காற்றில் தெளிவது தண்ணீர்
அல்லி பூக்க ஆர்ப்பன நாதம்
கொற்றவர் அமைத்த கோட்டை யுண்டு
மான்களும் துள்ளும் மயிலும் ஆடும்

தேனது பாய மீனது குடிக்கும்
மதியை ஒக்கும் மங்கையர் முகங்கள்
முத்தை யணிந்து முறுவல் செய்வார்
வாவி பலதால் வாழ்வு செழிக்கும்

பத்து ஆறும் நூற்றாண்டதனில்
தென்னை சூழ்ந்த தென்கரை தன்னில்
அருளது பொழிய ஆசை கொண்டு
பரமன் தாயார் பள்ளி தொண்டாள்!

மாந்தை நகரில் மாதா வந்து
கருணை மழையை கரும்பாய் ஈந்தார்
டச்சு அரக்கர் அன்னை அழிக்க
ஆவலும் கொண்டு அலுவல் பார்த்தார்!

(வேறு)

அலைகடல் கொஞ்ச அருளும் புரியும்
அன்னை மாந்தை அழித்திட நினைத்து
கொலையது புரியும் கொடிய டச்சு
கோயிலை உடைக்க கொள்கை பூண்டார்!
வலைதனை இழுத்து வசிக்கும் மாந்தர்
வதந்தி யறிந்து வருத்தம் கொண்டு
சிலைதனைத் தூக்கி சீக்கர மாக
சிற்றூர் மடுவில் சிறப்பாய் வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானக மெங்கும் கரடி புலிகள்
காரிருள் தன்னில் காவல் காப்பார்
மோன நிலையில் மொய்க்கும் வண்டும்
மோட்ச அன்னை மொழியும் கேட்பார் !.
வானம் பாடி வருகை தந்து
வணங்கி அவளை வாழ்த்தி நிற்பார்
ஞானப் பாலை ஞாயிறு பருகி
ஞாலம் விழிக்க ஒளியைக் கொடுப்பான்

குளத்தில் காலை குவிந்து நிற்கும்
குமுத மலர்கள் கூட்ட மாக
உளமும் பொங்கி உவகை கொண்டு
உடலைச் சுற்றி உடையாய் நிற்பார் !
கிளம்பி அங்கு கிளிகள் வந்து
" கீகீ " என்று கீதம் பாடும் !
விளங்கும் தலையில் விண்மீன் முடியாய்
வீற்று இருப்பாள் விமலன் தாயார் !

தப்பிய வாசும் தலைமறை வாகி
தஞ்ச மின்றி தரையில் நடந்து
சிப்பி முத்து சிறப்புடன் காணும்
சீர்பெறு மாந்தை பதியையும் அடைந்தார் !
இப்படி இவரும் இன்னல் பட்டு
இறைமகன் தாயார் இருந்த மடுவை
செப்பிய வழியில் சென்று காட்டில்
செங்கை விரித்தார் சேவடி முன்னால் !

( வேறு )

ஆரோக்கிய அன்னையென்று அருளும் ஈவாய்
அடைக்கலத்தாய் பெயர்கொண்டு அனைத்தும் காப்பாய்
பாரோங்கும் யாழ்நகரில் புதுமை மாதா !
படர்துயர்கள் நீக்குதற்காய் பள்ளி கொண்டாய் !
ஏரோங்கும் மாந்தைநகர் எல்லை விட்டு
எழில்வளமாம் மருதமடு எழுந்து வந்தாய் !
நீரோங்கும் கண்ணோடு நிற்கு மெந்தன்
நீண்டதுயர் போக்கிடுவாய் நிமலன் தாயே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடுப்பதியை தரிசித்தே மனமும் பொங்கி
மாற்றாரும் காணுமல் மறைந்து வாழ்ந்து
அடுத்ததாய் புத்தளத்தில் அடியார் சேர்க்க
அச்சமின்றி நடந்தாரே அடவி எங்கும் !
விடுத்ததோர் இறைப்பணிக்கு விடிவு காண
விளங்குமோர் முள்ளிக்குளம் விரைந்து ஏகி
தொடுத்ததோர் பூங்குளத்தில் தோன்றும் ஆற்றை
தோணியால் கடந்தாரே தொண்டர் வாசம் !

★

## 33. மகா கல்கமுவ இராசவன்னியன்

புத்தளத்தில் ஆதியிலே புகலிடம்தான் கொண்டார்கள்
யுத்தம்செய் வன்னி வீரர் — அவர்
சத்தியமாம் யேசுமறை சம்மதித்தே ஏற்றுத்தான்
இத்தரையில் வாழ்ந்து வந்தார் !

பரம்பரையில் குகனினத்தார் பாரதமண் வழித்தோன்றல்
தரணியிலே அவர்மொழி தமிழே ! — அங்கு
புரமமைத்து சந்ததியாய் புகழுறவே வாழ்ந்தார்கள்
கரமதிலே வாளும் கொண்டே !

முட்டியதோர் சிற்றரசர் முடிகளையும் அழித்தார்கள்
பட்டயங்கள் பலதும் பெற்றார் — அவர்
கட்டியதோர் கோட்டைதனை கண்டவர்கள் அஞ்சுவார்கள்
கொட்டிடுவார் போரின் முரசை !

வன்னியரே புத்தளத்தில் வலுவுடனே ஆண்டார்கள்
சென்னியிலே முடியும் பூண்டே — ஆளும்
பொன்னிலங்கை மன்னவனின் போர்வீரர் இவர்களும்தான்
அன்னியரும் பயம்தான் இவர்க்கு !

ஒருவழியாய் யோசேவ்வாஸ் ஒளித்துத்தான் வந்துமே
குருக்களுக்கும் அழைப்பு விடுத்தார் — அதை
அரும்பதிலே கிள்ளிவிடவே அரக்கராம் ஒல்லாந்தர்
உருவெடுத்தார் காலன் போலே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிமா வேந்தனுக்கு காலங்கள் பலதாக
தொண்டுசெய் வன்னி யோரை — டச்சு
சண்டையில் வென்றுமே சகலதையும் அழித்திடவே
எண்ணியே எழுந்திட் டாரே !

படையணிகள் கொண்டுமே படுகொலைகள் செய்யவே
தடைவழிகள் தாண்டி வந்தார் — கோயில்
உடைத்துமே மக்களது உயிர்களையும் குடித்துமே
இடைத்தபல செல்வம் கவர்ந்தார்

கொடிகட்டி பறந்ததோர் கொற்றவனின் வீரர்களை
அடியோடு கொல்ல முனைந்தார் — ஆனால்
படிதனிலே பரன்யேசு பக்குவமாய் வன்னியரை
குடிவைத்தார் புதிய பூமி

கல்கமுவ என்றதோர் காடுசூழ் இடம்வந்து
இல்லமதே அமைத்துக் கொண்டார் — காலம்
செல்லவே குளம்கட்டி செந்நெல்லும் விதைத்தார்கள்
வல்லதோர் வன்னி மக்கள் !

அந்தோனி முனிந்திரனின் ஆலயமும் அமைத்துமே
தந்தையாய் ஏற்று வாழ்ந்தார் — தம்மின்
முந்தைபுகழ் '' இராச வன்னியனர் '' பட்டமதையே
சந்ததிக்கு வைத்தது விடுவார்

விற்போரில் வல்லதோர் வீரராம் வன்னியரின்
சுற்றமதே காக்க வேண்டி — நூல்கள்
கற்றதோர் முனிவாசும் கல்கமுவ நோக்கியே
பெற்றதாய் போன்று போனர் !

ஈசனவர் அன்றுரைத்த இன்னமுதாம் மீட்பதனை
பாசமுடன் கொடுப்ப தற்கும் — டச்சு
நீசரால் செய்கின்ற நீடுதுயர் போக்கிடவும்
'' வாஸ் '' என்ற முனியும் வந்தார் !

காவலனும் மாமுனியும் கல்கமுவ மக்களுக்கு
தேவனது செய்தி உரைத்தார் — அங்கு
பாவவினை நீக்குதற்கும் பல்லுயிர்கள் காப்பதற்கும்
ஆவலதாய் சேவை புரிந்தார் !

கடல்சூழ்ந்த ஈழமதில் கழித்ததோர் காலமதையே
படம்பிடித்து காட்டு தற்கே — கோவை
இடமிருந்த ஆயருக்கு இம்முனிவர் விபரமதாய்
மடலொன்று வரைய லானர் !



★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34. கடிதவாசகம்

புத்தளம்
1690-08-15

பாரதத்தின் மண்மீதில் பதியதுவாம் கோவையிலே
பரிபாலனம் செய்கின்ற ஆயருக்கு !
பரன்யேசு ஆசியதை பணிவுடனே கூறித்தான்
பலநாட்பின் எழுதிக் கொள்வது !

பேரதே ! செய்துமே பொல்லாத டச்சினத்தார்
பொய்கைசூழ் இலங்கைதன்னைப் பிடித்தபின்பு
போற்றல்மிகு ஆலயத்தின் பொன்போன்ற சிலைகளையும்
பொடிப்பொடியாய் தகர்த்து விட்டார் !

தாரணியில் நானுமே தமிழ்வளர்க்கும் யாழ்நகரில்
தற்பரனுர் பிறந்ததோர் நத்தாரில்
தணியாத ஆவலதாய் தலைமறைவாய் பூசையொன்று
தகையதுவாய் புரிந்த வேளை

பேரணிதான் கூட்டியே பேராசை ஒல்லாந்தர்
பெரியோர்கள் பாலரென்ற பேதமின்றி
பேச்சின்றி தலம்புகுந்து பேறுள்ள பொருளெடுத்து
பெண்டீரின் சீலையும் கிழித்தார்

சத்தியத்தின் மறைதன்னை சார்ந்தோர்கள் காட்டினுல்
சன்மானம் அள்ளித்தான் கொடுத்திடுவார் !
சந்தியிலே மக்களைத்தான் சங்காரம் செய்கின்ருர்
சவக்குழிதான் தஞ்சம் அவர்க்கு !

யுத்தமதே செய்கின்ருர் கிறிஸ்தவர்கள் ஒழிக்கவே
யுவதிகள் கூந்தலும்தான் அரிந்ததுண்டு
யுகத்திலே இப்படித்தான் கொடுங்கோலம் கண்டதில்லை
யூதர்களின் அடுத்த பிறப்போ ?

பெத்தத்தோர் பாலர்களும் பேறுடைய கல்விதன்னை
பெறுவதற்கும் இலங்கையிலே பெருந்தடைகள்
பெண்களது மானமதை பேய்க்குலத்தார் அழித்தார்கள்
பெருநாளாம் பூசை வேளை

சொத்தெல்லாம் எடுக்கின்ருர் சோரரைப்போல் உருவெடுத்தார்
சோதனையில் வாழ்கின்ருர் ஈழமக்கள்
சொல்லவொண்ணு வாதைகளைச் சொந்த மண்ணில் சுமக்கின்ருர்
சோகத்தின் விழிம்பில் நிற்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டுகளைக் கோட்டையிலே குவித்துமே வைக்கின்றார்
குருக்களையும் மனைபுகுந்து கொன்றதுண்டு
குருசணிந்த மக்களது குடல்களையும் எடுத்தார்கள்
குருதியெல்லாம் குளமாய்ப் போச்சே !

கண்டதோர் இடங்களிலே கரங்களையும் வெட்டினார்கள்
காய்ச்சியதோர் இரும்பாலும் குறிவைத்தார்
கற்களையும் சுமத்தியே கசையடியும் கொடுக்கின்றார்
கண்களுக்குள் தூளும் இட்டார் !

தண்டனைகள் கொடுப்பதற்கு தலைகீழாய்த் தூக்கிடுவார்
தரமறுத்து வீதியிலே எறிந்திடுவார் !
தங்கியதோர் சிறைதனிலே தாக்கிடுவார் பொல்லாலே
தாய்க்குலத்தின் மானமும் போச்சே !

தொண்டுகளும் செய்வதற்கு குருக்களும்தான் முக்கியமே !
தொட்டபணி இயக்கிடுவேன் இலங்கையிலே !
தோன்றியதோர் யேசுமறை தொலைப்பதற்கு முனைகின்றார்
சோல்விதான் கண்டார் டச்சு !

மலையகத்தின் தலைமைப்பதி மாபுகழ்சேர் கண்டிநகர்
மற்றானல் அடிமையது கொள்ளவில்லை
மன்னவனின் பெயரதுவாம் விமலதர்ம சூரியனும்
மக்களது நலன்கள் காப்பான்

நிலைக்கின்ற தொண்டுக்கு நிழல்கொடுத்து ஆதரிப்பான்
நீதியதாய் ஆழுகின்ற செங்கோலன்
நீசரவர் டச்சினத்தார் நீள்பிடியில் தப்புதற்கும்
நினைத்திட்டேன் அங்கு போக

கொலைசெய்யும் ஒல்லாந்தர் கொடுவிலங்கு உடைப்பதற்கும்
கோமகனார் மதமதையும் பரப்புதற்கும்
கொடிபறக்கும் கண்டிநகர் கோட்டமது சென்றுமே
கொடுங்கோன்மை சாற்றப் போறேன்

கலையாத நெஞ்சுடனே கால்நடையில் ஏகியே
காவலனின் அனுமதியும் பெற்றிடுவேன்
கர்த்தரது நாமமது கண்டியிலும் பரப்பிடுவேன்
கனிவுடனே கடிதம் முடித்தேன்.

இப்படிக்கு
யேசுவின் அன்புள்ள
வண. பிதா யோசேவ்வாஸ்

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 3

## " கோன்புரம் "

### 35. மலைநாடு

காரணர்கள் பலரையுமே களத்தில் வென்டோன்
கானமது பாடியே கயிலை கண்டோன்
வாரணத்தை மார்பிலே வடுவாய்க் கொண்டோன்
வனத்திலே சீதைதன்னின் வனப்பு உண்டோன்
ஆரணராம் சிவபெருமான் ஆசி பெற்றோன்
ஆதிமொழி தமிழைத்தான் அன்பாய் காத்தோன்
பூரணமாய் திசைபத்து பூவில் வென்ற
பூபாலன் ராவணனால் ஆண்ட நாடு!

பூவனத்தின் குருவிகள்தான் பூக்கள் ஏந்தி
புத்தருக்கு வைக்கின்ற புனித நாடு
காமனையும் எரித்ததோர் கண்ணு தலோன்
கங்கையணி உமாபதி கண்ட நாடு
சாவதனை வென்றுதான் சான்று சொன்ன
சத்தியனும் யேசுதந்த மறைகொள் நாடு
நாவண்ண ஒழுக்கமதை நன்றாய்த் தந்த
நபிகளது பள்ளிகளும் மலிந்த நாடு

கங்கையாம் மாவலியாள் காதல் பேசும்
கடும்பனியின் நீர்த்துளிகள் கண்ணில் வீசும்!
மங்கியதோர் நிலவொளியில் மலைகள் மீது
மஞ்சுகங்கள் கொஞ்சியதாய் மகிழ்ந்து கூடும்
செங்கதிரோன் காட்டுகின்ற செம்மை தன்னுள்
செவ்வானம் கம்பளமாய் செறிந்து காணும்!
தங்கநிற மலர்களினால் தந்த வண்ணம்
தரமுயர்ந்த பொன்போன்று தன்மை காட்டும்

காலையிலே குளிர்த்தென்றல் கங்கை ஏறி
கானமது பாடியே களித்து ஓடும்
மாலையிலே கதிரவனும் மறையும் வேளை
மஞ்சள்நிற வெய்யிலது மலையில் ஆடும்
சாலையிலே அந்தப்புரச் சங்கீ தங்கள்
சலங்கையொலி தேனாகச் சரிந்து பாயும்
சோலையிலே இளசுகளும் சோடி போட்டு
சொகுசாக உலவுகின்ற சொர்க்க நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனையும் கொடுத்தாளே இயற்கை அன்னை
இன்பபுரி மலைநாடு இடத்துக் கேதான் !
புத்தமத இந்துமத புதிய வேத
புகுந்ததோர் கிறிஸ்தவர்கள் முகம தென்ற
அத்தனையும் மலைநாட்டில் அணைத்துக் காத்து
ஆள்கின்ற கண்டிநகர் அரசன் ஒன்றே !
வித்தகராம் யோசேவ்வாஸ் விரைந்து இங்கே
விலங்கொடித்துக் காத்தலுக்காய் விரைந்து போனார் !

கண்டிநகர் அடைந்துதான் கடவுள் வார்த்தை
கனிவுடனே கூறுதற்கு கருத்தில் கொண்டு
கொண்டபுகழ் மன்னவனின் கொலுமுன் சென்று
கொற்றவனின் அனுமதியும் எடுத்து விட்டார் !
மண்மீதில் மீட்பதனை மக்கட் கோத
மனுயேசு வேதமதை மகிழ்வாய்க் கூற
எண்ணற்ற தொண்டுகள்தான் எங்கும் செய்ய
ஏற்றமுடன் கண்டிநகர் வந்தார் வாசும் !

★

### 36. கண்டி மன்னன் 11-ம் விமலதர்மசூரியன்

அமரர் பலரும் ஆசை கொள்ளும்
அழகுக் கொலுவினிலே
விமல தர்ம சூரிய மன்னன்
வீற்று இருந்தானே !
சமய மெல்லாம் சமத்துவ மென்று
சபையில் அறைந்தானே !
குமரி, காளை, குருக்கள், முதியோர்
குதுகலம் அடைந்தாரே !

கண்டி மண்ணை கயவர் பிடிக்க
காவலன் விடவுமில்லை
கொண்ட தன்னின் கொள்கை எதிலும்
கொற்றவன் மாறவில்லை
அண்டை ஊரின் ஆட்சக ளெல்லாம்
அணுகினர் அவனிடத்தில்
பெண்டிர் பிள்ளை பெரியோர் சிறியோர்
பெருகினர் இவன்புரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டச்சு என்னும் மாற்றான் வடக்கில்
வெறிகள் பிடித்ததுவாய்
பச்சைக் குழந்தை படுகொலை செய்து
பழிகள் தீர்த்தாரே !
அச்சம் கொண்டு அனைவர் இங்கு
அகதி ஆகினரே ;
உச்ச அடக்க முறைகள் தன்னால்
உரிமை இழந்தனரே !

அடியான் யோசேவ் வாசும் இங்கு
அன்புடன் வந்தாரே !
முடிகள் அணிந்த மன்னன் முன்பு
முற்றும் உரைத்தாரே
படியில் மக்கள் படுதுயர் தன்னை
பார்த்திபன் அறிந்தானே !
குடிகள் பார்க்க குருக்கள் செல்ல
கூறினன் அனுமதியே !

அனுமதி பெற்று அடியார் வாசும்
அகமது மகிழ்ந்தாரே !
மனுவுரு வாகி மரித்த யேசு
மார்க்கம் ஈந்தாரே !
சனம்பல சேர்த்து சற்குணன் முனியும்
சரித்திரம் படைத்தாரே !
மனமது திரும்பி மக்கள் வந்தார்
மாமுனி பின்னாலே

வாசின் பின்னால் வந்த மக்கள்
வளர்ந்தனர் பிறைபோலே
காசினி தன்னில் டச்சு மதத்தார்
காவலன் அணுகினரே !
பேசிய பொய்யை பெரிதெனக் கேட்டு
பெரும்சினம் கொண்டானே !
ஆசிகள் அளித்த அரசன் மாறி
அடிகளைச் சிறைசெய்தான்

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37. நாட்டின் வரட்சியும் மழையை அழைத்தலும்

கண்டிமா நகரில் அப்போ
கனநாட்கள் மழையு மின்றி
மண்ணிலே மனித ரெல்லாம்
மடிகின்ற நிலையு மாச்சே!
கொண்டதோர் வரட்சி தன்னின்
கொடுமைதான் போக்கு தற்கு
பண்டிதர்கள் அழைத்து மன்னன்
பலதடவை யோசித் தானே!

கற்றோர்கள் சிலரும் வந்து
கருத்துரை வழங்கிச் சென்றார்
மற்றோர்கள் இதனைப் போக்க
மடைகளும்தான் வைக்கச் சொன்னார்!
உற்றதோர் அமைச்ச ரெல்லாம்
உரைத்திட்டார் ஒன்று செய்ய
கொற்றவன் இதனைக் கேட்டு
கொம்பாவி கொழுத்தி னானே!

சாதுக்கள் பின்னர் கூவி
சபைதனில் சம்பா தித்தான்!
தீதுகொள் வரட்சி போக்க
திடம்பல ஆலோ சித்தான்
ஓதினார் பிக்கு வெல்லாம்
ஒருபூசை செய்க வென்று
யாதுமே மறுக்கா வேந்தன்
யாவையும் செய்து பார்த்தான்

பிக்குகள் ஒன்று கூடி
பிரார்த்தனை செய்ய வேண்டி
திக்கெல்லாம் மக்கள் சேர்த்து
திங்கள்பல பூசை செய்தார்!
கக்கிய வரட்சிப் பஞ்சம்
கடுகளவு மாற வில்லை!
வெக்கியே பிக்கு போனார்
வேறுவழி பார்த்தார் மன்னன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பார் வந்து பின்பு
பஞ்சமும் போக்கு தற்கு
பேர்பெற்ற யாக மொன்றை
பெரியதாய் செய்யச் சொன்ஞர் !
தேர்வேந்தன் அவர்கள் கேட்ட
தேவைகள் அனைத்தும் ஈந்தான் !
வேர்விட்ட வரட்சி போக்க
வேள்வியும் செய்து பார்த்தான்

பஞ்சமும் மேலே ஓங்கி
பட்டினி மக்கள் வாட்ட
கொஞ்சமும் அகல வில்லை
கொடும்பசி அன்று அங்கே !
நெஞ்சமும் வருந்தி மன்னன்
நெடுதுயர் கொண்டு வாழ்ந்தான்
அஞ்சிய வேந்தன் சோகம்
அகலவே ஒருவன் சொன்ஞன் !

" சிறையிலே இருக்கு மந்த
சிலுவைகொள் யோசேவ் வாசை
குறைகளைத் தீர்ப்ப தற்கே
கூப்பிட்டால் எல்லாம் தீரும் ! "
அமைந்தனன் ஒருவன் அங்கே
அரசனும் ஆமோ தித்தான் !
மறைதன்னை ஓது மந்த
மாமுனி அணுகிச் சென்ருன் !

வேந்தனும் மனமும் மாறி
வேதியர் சிறையில் கண்டு
" மாந்தரின் அழிவைப் போக்க
மாமுனி உதவு " என்ருன் !
ஏந்தலின் குறையைப் போக்க
ஏழைகள் வாழ வைக்க
சாந்தமும் கொண்ட வாசும்
சரியெனச் சாற்றி ஞரே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனை முன்பு உள்ள
அழகிய மைதா னத்தில்
பரன்யேசு விதைத்த அன்பை
பக்தியாய் மனதில் வைத்தார் !
புரமது இருந்த மக்கள்
புறப்பட்டு வந்தார் அங்கே
கரமது ஆணி தைத்த
கடவுளைக் கேட்டார் தூயோன் !

திருப்பலி முடியும் வேளை
திரண்டதோர் கரிய மேகம்
பெரும்மழை யாக அங்கே
பெய்தது மண்ணின் மீதே !
குருமணி பூசை வைத்த
குறிப்பிட்ட இடத்தில் அன்று
ஒருதுளி மழையு மில்லை
ஒப்புயர் காட்சி கண்டார் !

புதுமுறை காட்சி கண்டு
பூபாலன் துயரம் நீங்கி
குதுகலம் கொண்டு வேந்தன்
குருக்களின் காலில் வீழ்ந்தான் !
பொதுவிருந் தொன்று வைத்து
போற்றியும் வாழ்த்துக் கூறி
இதுவரை தடைகள் நீக்கி
இறைப்பணி ஆற்றச் சொன்னான்.

பண்டையக் கொள்கை யெல்லாம்
பயனற்ற செய்கை யென்று
கண்டியில் முனிவர் அன்று
காட்டினார் காட்சி ஒன்றே !
தண்டித்த அரசன் அங்கு
தாளது பணிந்து நின்றான்
கொண்டிட்ட கொள்கை விட்டு
கொற்றவன் உதவி செய்தான் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38. வைசூரி நோயும் கைவிடப்பட்டவர்களும்

கண்டி நகரில் காலன் உருவில்
காட்டிய வைசூரி — மக்கள்
கால்கள் கரங்கள் பொக்களமாக்கி
கரைகள் மீறியதே !

பெண்கள் ஆண்கள் குழந்தை யென்ற
பேதம் காட்டவில்லை — இதைப்
பெரியோர் பலது காரணம் காட்டி
பேசினர் தோஷமென்றே !

புண்களும் பழுத்து சிதழ்களும் வடிந்து
புதியது நிலையாச்சே — வாழும்
புரமதில் வசித்த பிரசைக ளெல்லாம்
புலம்பினர் வேதனையால்

மன்னவன் இதையும் அறிந்தது உடனே
மனமது கல்லானன் — அந்த
மாபிணி பிடித்த மக்களை அகற்ற
மழுவரை அழைத்தானே !

அன்னவன் அந்த மழுவரை அழைத்து
அரைகுறை உயிர்களையே — உடன்
அப்புறப் படுத்த செய்திடச் சொல்லி
ஆணையும் இட்டானே !

பொன்னிகர் கண்டி அரசனும் அந்த
பொழுதினில் சொன்னதையே — மது
போதையில் நின்ற மழுவரும் கேட்டு
பொங்கி எழுந்தாரே !

செத்தது சாகா உயிர்களை எல்லாம்
சேர்த்தனர் கண்டியிலே — பின்பு
சேவகர் அதனை ஒன்ருய்ப் போட்டு
செலுத்தினர் வண்டியிலே

கத்திய கரடி கடும்புலி வாழும்
காட்டினில் மனிதரையே — அந்த
கல்மன நெஞ்சர் எறிந்தது விட்டு
கடமையும் முடித்தாரே !

கொத்தினர் அவரை பருந்தது கழுகு
கோலமும் அழிந்தாரே — உயிர்
கொண்டவர் அங்கு கைவிடப் பட்டார்
கொற்றவன் தர்மமிதே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டினில் வெய்யில் மழைகள் — தன்னுல்
காத்திட அவர்களுமே — தங்கள்
கண்ணீரில் நனைந்த இலைகளை எடுத்து
கட்டினர் வீடுகளே !

வாட்டிய புண்கள் வேதனை போக்க
வனமது கதறினரே — அவர்
வயிற்றினில் ஏறி பாம்பது வந்து
வாதையும் கொடுத்ததுவே !

பூட்டிய விலங்கு உடைத்தது எறிந்த
புதியது உலகளித்தோன் — தூய
பூரணன் யேசு இவர்களை மீட்க
புத்துயிர் கொடுத்தாரே !

அடவியில் இருந்த அரைகுறை உயிர்கள்
அனைத்தையும் பார்ப்பதற்கே — வாசும்
ஆசையும் கொண்டு அவ்விடம் ஏகி
அவர்களைக் கண்டாரே !

தொடலது முடியா புண்களைக் கழுவி
தொண்டுகள் செய்தாரே ! — அங்கு
தோன்றிய பிணிக்கு தோட்டிகள்போல
தொழிலது செய்தாரே !

உடலது பார்த்து குறைகளைக் கேட்டு
ஊழியம் புரிந்தாரே — அவர்
உதவியும் பெற்று நோயது மாறி
உயிரது பெற்றுரே !

ஒருவரும் தேடா திருந்தோ ரெல்லாம்
ஒளியது பெற்றுரே — மன்னன்
ஒதுக்கிய மக்கள் மீட்பது வேண்டி
ஓடியும் வந்தாரே !

பெருகிய நோயும் மாறிய கண்டு
பேரின்பம் அடைந்தாரே — வேந்தன்
பேதமை உணர்ந்து முனிவரை வணங்கி
பேரருள் பெற்றுரே !

அருவுரு வாகி அகிலம் வந்த
அமலன் யேசுவுமே — மண்ணில்
அடிமைகள் தனக்கு விடுதலை கொடுக்க
அன்பாய் மரித்தாரே.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றும் பாகம்

# இறைவனின் சொத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 1

## செங்களம்

### 39. தென்கரை நோக்கி

கோட்டையிலே ஒல்லாந்தர் கொடிகள் ஏற்றி
கோவில்களை அழித்துத்தான் கொடுமை செய்தார்!
நாட்டில்வாழ் "கிறிஸ்தவர்கள்" நாதன் யேசு
"நற்செய்தி" அழுதின்றி நாளும் வாழ்ந்தார்!
சாட்டையால் அடிபட்டு சாவை வென்று
சரித்திரத்தைப் படைத்ததோர் சர்வ வல்லோன்
காட்டினர் தென்மேற்கில் கருணை அன்று
காத்தலுக்காய் யோசேவ்வாஸ் களத்தில் வந்தார்!

சிங்களம்சேர் "போளவத்தை" சிற்றூர் தன்னில்
சீவித்த மக்களையும் சிறப்பாய்க் கண்டு
கங்கைகள் பாய்ந்தோடும் கண்டி எல்லை
கடந்துமே போவதற்கும் கருத்தில் கொண்டார்!
செங்களம்சேர் தென்மேற்கின் சேதி கேட்டு
சேவைகளை அவ்விடத்தில் செலுத்த வெண்ணி
தங்கமன போசேவ்வாஸ் தானும் அப்போ
தலைமறைவாய் நீர்கொழும்பு தங்கப் போனர்!

நீர்கொழும்பு மக்களும்தான் நிலத்தில் அன்று
நீடுதுயர் பட்டழியும் நிலைமை தன்னை
நேர்முகமாய் பார்ப்பதற்கு நெஞ்சம் வைத்து
நெடும்பயணம் ஒன்றைத்தான் நெறியோன் செய்தார்!
வேர்விட்ட அடக்குமுறை வெற்றி காண
வேதனைகள் நீக்குதற்கு வேட்கை கொண்டு
போர்க்களத்தின் வீரன்போல் போனர் வாசும்
போற்றியே வரவேற்றார் பொறையில் மக்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகரில் இருந்ததோர் தடைகள் தாண்டி
தற்பரனூர் வேதமதை தகவாய் ஓத
கொலைக்களத்தை ஊடறுத்து கோமான் வாசும்
கொண்டதோர் பணிக்காக கொழும்பு போனூர் !
வலையிழுத்த சீடர்கொள் வள்ளல் யேசு
வார்த்தையைத்தான் அவ்விடத்தில் வழுத்தி பின்பு
அலைதவழும் " மாத்தறையில் " அடியார் மீட்க
ஆசையுடன் ஏகினூர் அன்று தூயோன் !

தென்கரையில் மக்களுக்கு தேவ தொண்டு
தேவைகளும் செய்தபின்பு தெளிந்த நெஞ்சோன்
மன்றங்களில் தமிழைத்தான் மலரச் செய்யும்
மட்டுநகர் தன்னையே மனதில் வைத்தார் !
அன்னவரும் கால்நடையில் அலைகள் தாண்டி
ஆறுகுளம் எல்லாமே அலைந்து தேடி
துன்பமுறும் மக்களுக்கு துணையும் செய்ய
துறைதிகழும் கிழக்குத்திசை துணிந்து போனூர் !

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 2

## திங்கள்கரை

### 40. மீன்பாடும் தேனூடு மட்டுநகர்

அலைகடல் காற்றில் அசைந்து ஆடும்
தென்றல் வந்து தேன்தமிழ் பாடும்
வாவி யெங்கும் வளமுறு கயல்கள்
கானம் இசைத்து களிப்பில் துள்ளும்
மணலில் நண்டு மகிழ்ந்து ஓடும்
அள்ளிய சிப்பி அணையாய் காணும்
கடல்நுரை யெங்கும் காலம் காட்டும்
உப்பு பொரிந்து உயர்மலை ஒக்கும்
முத்தைப் போன்று முறுவல் செய்து
கலங்கள் காத்து காதலி நிற்பார்!
இத்தனை அழகு இந்நிலம் தன்னில்
மட்டு நகரில் மக்கள் காண்பார்

சேற்றில் நின்று செவ்வாய் திறந்து
பாக்கள் பாடி பாவை நிற்பார்
கானம் கேட்டு காளை யோர்கள்
கவலை மறந்து கடமை செய்வார்!

காட்டில் தேனும் கனியும் உண்டு
அளிகள் கிளிகள் அகமும் மகிழ்வார்!
மருதம் நெய்தல் மலர்கொள் முல்லை
குறிஞ்சி நிலங்கள் குன்றும் காணும்
பொருப்பில் பிறந்த பொலிவுறு தமிழை
சிறப்பாய் வளர்த்து சீவிக்கும் மக்கள்
மண்ணைக் காக்க மறவோர் உண்டு
எல்லா மதமும் ஏற்ற நாடு!

டச்சுக் கொடுமை ஓங்கிய நேரம்
மட்டு நகரில் மக்க ளெல்லாம்
வீட்டி லிருந்து விம்மி அழுது
கண்ணீர் ஆறு கடலாய் ஓட
மதக்குரு ஒன்றை மண்ணில் காண
இரந்து கேட்டார் இறைமகன் இடத்தில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கப் பட்டோர் உரிமைக் காக
யேசு அன்று மரித்தார் மண்ணில்
இவர்கள் காக்க இச்சை கொண்டு
இறைமகன் வார்த்தை இனிதாய்ச் சாற்ற
யோசேவ் வாசும் துணிவு கொண்டு
மட்டு நகரில் பாதம் வைத்தார் !

★

## 41. கிழக்கு சிவந்தது

மட்டக் களப்பு மாநகர் தன்னில்
துட்டர் டச்சு துள்ளி எழுந்து
அட்ட காசம் அதிகம் போட்டு
வட்ட மிட்டு வலமும் வந்தார் !

ஈசன் கோவில் இடங்கள் புகுந்து
நாசம் செய்து நகைகள் கவர்ந்தார் !
பேச முயன்ற பெண்கள் தன்னை
நீசர் வதைத்தார் நீர்சூழ் நகரில் ?

வீடு எரித்தார் விதைநெல் பறித்தார்
நீடு வரியை நிலத்தில் விதித்தார்
கூடும் பணியைக் குறைக்க முயன்றார்
வாடும் பயிராய் வாழ்ந்தார் மக்கள் !

பிஞ்சு மாதர் பிடித்து இழுத்தார்
கஞ்சி யற்றோர் கழுத்தை நெரித்தார் !
தஞ்சம் அடைந்தோர் தரங்கள் மண்ணில்
அஞ்சி மக்கள் அகதி யானார் !

அன்று ஒருநாள் அரக்கர் டச்சு
ஒன்றும் தெரியா ஒருவர் பிடித்து
"கொன்று விடுவோம் காட்டு" என்று
குன்றில் ஏற்றி குருதி எடுத்தார் !

கிழக்கில் ஓடும் கிளைகொள் ஆறும்
குளத்தில் சிவப்பு குருதி தட்டி
வழக்க மான வடிவம் கெட்டு
இழப்புச் சொல்லி இருந்து அழுதாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலக் கடலும் நிறமும் மாறி
கோலம் கெட்டு கொடிய மண்ணில்
கால தூதன் கரத்தில் பட்டு
ஓல மிட்டு ஓசை செய்தாள்

சிறைக ளெல்லாம் சிவப்பாய்ப் போச்சே
துறைகளில் ஓடும் துள்ளும் மீனும்
பறைகள் அடித்து பாடை தூக்க
முறையாய் வந்தார் மூழ்கும் துயரில்

★

## 42. தாண்டவன் வெளியில் அறிவும் ஒளியும்

மட்டுநகர் மண்ணில் பூத்த
மரிமகனுர் வேதம் தன்னை
வெட்டியே வீழ்த்து தற்கு
வெளிக்கிட்டார் டச்சுக் கூட்டம் !
நட்டதோர் பயிரைக் காக்க
நலிவுற்றோர் துயரம் போக்க
சுட்டபொன் யோசேவ் வாசும்
சுறுக்குடன் இங்கு வந்தார் !

தாண்டவன் வெளியில் வாசும்
தலமொன்றை மறைவாய்க் கட்டி
மாண்புறு வேதம் ஓங்க
மறைப்பணி செய்து வந்தார் !
ஆண்டதோர் அரக்கர் சேனை
அறிந்துமே இவரைத் தேட
நீண்டதோர் படையைச் சேர்த்து
நிரையதாய் இங்கு விட்டார் !

வெள்ளி முபத்து வாங்கி
வெட்கிய யூதாஸ் அன்று
வள்ளலாம் யேசு தன்னை
வாழ்த்தியே காட்டி மாண்டான் !
கொள்ளைநோய் பரவு மாப்போல்
கோலங்கள் தொடர்ந்து நீளும்
வெள்ளையர் தருமம் பெற்றோர்
வேதியர் தேட லுற்றார் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சிலை நக்கும் நாய்போல்
    எடுத்ததோர் காசுக் காக
பிச்சைகொள் துறவி தன்னை
    பிடித்துமே கொடுக்க வந்தார்!
அச்சமே கொள்ள வில்லை
    அடியவர் வாசும் அங்கே!
துச்சமாய் உடலை எண்ணி
    தூயதோர் சேவை செய்தார்!

"வம்மியாம்" மரத்தில் கட்டி
    வதைத்துமே இவரைப் பார்த்தார்!
இம்மியும் அசையவில்லை
    இறையனுர் தூதர் அங்கே!
நம்பிய பலரும் வந்தார்
    "நற்செய்தி" கேட்டுப் போனுர்!
செம்மிய மனத்தோன் வாசும்
    செய்பலன் பார்க்க வில்லை!

பணியது புரிய வந்த
    பரமனின் சீடர் தன்னின்
துணிவது கண்டு ஊரார்
    தூரத்தில் நின்று விட்டார்!
வணிகமே நோக்காக் கொண்ட
    வன்நெஞ்ச "டச்சுக்காரர்"
அணிபல கூட்டி ஓர்நாள்
    ஆலயம் எரிக்கச் செய்தார்!

வலமது வந்த சிப்பாய்
    வளர்மதி பாதம் கொண்ட
குலமகள் புதுமை மாதா
    குடிகொண்ட கோவில் கண்டார்!
தலமதில் உள்ளே சென்று
    தவமுனி தேடி ஞர்கள்
பலன்ஒன்றும் காணவில்லை
    பாவியர் தீயை வைத்தார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பது தன்னுல் அந்த
    நெடுவுயர் கோவில் தானும்
கருகியே சாம்ப லாகி
    கண்ணுக்கும் தெரிய வில்லை !
இருந்ததோர் மாதா தெய்வம்
    இத்தீயில் பட்ட பின்பும்
உருவமே அழியா நின்ருள்
    ஊரெல்லாம் இதுவே பேச்சு !

மாதாவின் புதுமை கண்டு
    மனமது திருந்தி மக்கள்
வேதியர் வாசின் பின்னுல்
    வெளிக்கிட்டார் அன்பாய் அங்கே !
நீதிமான் இவரும் பின்பு
    நிமலஞர் தொண்டு செய்ய
பாதியில் விட்டு வத்த
    பாங்குயர் கண்டி போஞர் !

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 3

## சங்கமம்

### 43. கண்ணீர் கங்கையானது

காடெல்லாம் நடந்துமே வாசும் சென்று — மக்கள்
கவலைகளும் துடைப்பதற்கு பாடு பட்டார் !
வீடெல்லாம் மகிழ்சியது பெற்றே வாழ — மத
விடுதலைக்காய் பகலிரவு செயலும் புரிந்தார் !

மறைந்திருந்த மக்கள்குலம் எழுச்சி பெறவே — அவர்
மலைகளையும் நதிகளையும் தாண்டிச் சென்றார்
உறைகின்ற வீடுகளில் அமைதி இல்லை — மக்கள்
உரிமைகளைக் கொடுப்பதற்கு உழைத்து நின்றார் !

படைப்பலத்தால் ஆள்கின்ற டச்சு அரக்கர் — செய்யும்
படுகொலைகள் நிறுத்துதற்காய் ஈழம் வந்தார் !
அடைபட்டார் ! உதைபட்டார் ! சிறையும் சென்றார் — அவர்
ஆசைகளும் இவ்வுலகில் கான லாச்சே !

சமயமதை பரப்புதற்கு வந்தார் வாசும் — நாட்டில்
சமர்செய்த ஒல்லாந்தர் ஏற்க வில்லை
அமர்ந்துமே சமமாக உண்வு கொள்ளும் — பந்தி
ஆக்கிட துடித்தாரே முடிய வில்லை

அத்தனையும் மாறவில்லை கண்டார் இங்கே — யேசு
அமலனார் சொன்னவைகள் ஏற்றோர் கொஞ்சம்
இத்தனையும் பொருள்கொண்டோர் ஏற்கா நின்றார் — இவர்
இதைநினைத்து நெஞ்சமது நொந்து அழுதார் !

கண்ணீர்தான் விடுகின்றார் கவலை கொண்டு — வாசின்
கருவிழியால் ஓடியதோர் துளிக ளெல்லாம்
மண்மீதில் மாவலி கங்கை யாகி
மாறியதோ ? நானறியேன் காலம் சொல்லும் !

இறையேசு படைத்திட்ட புதிய வானம் — மக்கள்
இவ்வுலகில் ஏற்றிட்டால் மீட்பு உண்டு
நிறைவாகும் காலமது வருமோ ? இங்கு — மாந்தர்
நீடுதுயர் போக்குதற்காய் உழைப்போம் நாங்கள் !

PUBLIC LIBRARY
JAFFNA.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 44. விண்மீன்

வானைமுட்டும் மலையதனில் படிந்திருந்த மேகமும்
வட்டவெழில் முழுமதியை மறைத்திடவும் துணிந்ததோ ?
தேனைச்சொட்டும் பங்கயத்தின் நிறமதையே அழித்திட
தென்றலொன்று கர்வமுடன் மனமதிலே நினைத்ததோ ?

மானிடத்தின் மீட்பதற்காய் சந்தணமாய் வாழ்ந்தவர்
மண்ணுலகில் உடல்மறையும் காலமது வந்ததோ ?
நானிலமும் " நற்செய்தி " நயமுடனே புகன்றவர்
நற்பணிகள் தீபமதாய் ஒளியதுதான் விட்டதே !

விடியலைத்தான் கொடுத்திடவே எரிமெழுகாய் இருந்தவர்
விண்செல்லும் நேரமதை முன்னதாக அறிந்தாரோ ?
கொடிபறக்கும் கண்டிநகர் மலையகத்தின் மண்ணதில்
கோமகனூர் யோசேவ்வாஸ் எருவாகத் துணிந்தாரே !

ஞானிகள்தான் வானத்தின் ஒளிபோன்று விளங்குவார்
ஞாயிறுபோல் இருளகற்றி புதுவாழ்வு காட்டுவார் !
மேனியெல்லாம் அழிந்தாலும் போதனைதான் மறையுமோ ?
மேதினியில் அவர்நாமம் பேசிடுவார் மக்களே ?

விண்மீன்போல் விலங்கொடித்தோர் என்றென்றும் வாழுவார்
வித்திட்ட பாதையுமே பெருகிடுமே உலகிலே
தெண்திரையின் முத்தாகி பட்டொளிதான் வீசுவார்
தெருவெல்லாம் அவர்விட்ட பணிகளும்தான் தொடருமே !

மரிக்கின்ற போதினிலே யோசேவ்வாஸ் முனிவரும்
" மக்களுக்கு விலங்கிட்டு ஆள்வோர்கள் செயலையே
பரிவுடனே இறையரசே மன்னியுங்கள் " என்றென
பரன்யேசு தன்னையே பரிவுடனே வேண்டினூர்

ஆயரது பதவியும்தான் அன்புடனே அளித்தார்கள்
அதையுமே ஏற்காமல் ஆற்றினூர் தொண்டுகளே !
தூயவனூர் உயிர்பிரிய துணைநின்ற மறைத்தூதர்
தூக்கியே சென்றூரே ! சுதன்யேசு கரமதுக்கே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரத்தி எழுநூறு பதினெராம் ஆண்டதனில்
ஆரம்ப ஜனவரியாம் பதினுரும் திகதியில்
மாயிருள்சேர் உலகமதை மாமுனியும் பிரிந்திட
மறைத்தூதர் வான்மீது மங்களமும் பாடினுர்

யேசுவினுல் வித்திட்ட மீட்பதனின் நதிகளும்
எவ்விடமும் பாய்ந்தோடி செழுமையது கொடுத்ததே!
காசினியில் அடிமைநிலை பசிப்பிணியும் அகன்றிட
கறைசிந்தி மரித்ததோர் யேசுவழி செல்லுவோம்!

(காவியம் நிறைவு பெற்றது)

வணக்கம்.

---


## பிழைதிருத்தம்

| பக். | வரி | புத்தகத்தில் உள்ளபடி | திருத்தம் |
|---|---|---|---|
| iii | 17 | அந்திவாரமிட்டவர் | அத்திவாரமிட்டார் |
| iv | 19 | முளிவர் | முனிவர் |
| v | 7 | கப்பராமாயணம் | கம்பராமாயணம் |
| xiii | 23 | பாலடிகளில் | பாவடிகளில் |
| xv | 24 | ஆனி | சித்திரை |
| xvii | 10 | மூன்றுமாக | மூன்றுமாத |
| 7 | 1 | வத்த | வந்த |
| 12 | 1 | மாத்தை | மாந்தை |
| 20 | 8 | த்தகனே | வித்தகனே |
| 28 | 2 | தானம் | தாளம் |
| 29 | 8 | சரயென்ருர் | சரியென்ருர் |
| 39 | 34 | நெடுவுயிர் | நெடுவுயர் |
| 51 | 8 | மனம்குத்தி | பனம்குத்தி |
| 63 | 30 | எழில்வளமாம் | எழில்வனமாம் |
| 68 | 21 | தன்ஞுவ் | தன்ஞுல் |
| 71 | 16 | கொம்பாவி | கொடும்பாவி |
| 72 | 31 | காந்தமும் | சாந்தமும் |

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம் - 1987.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இவரைப்பற்றி....,

1976-ல் பேராதனை வளாகத்தில் மெய்யியற் துறையில் உதவி விரிவுரையாளராக இருந்தபோது, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ''தொழிலாளர் கல்வி நிறுவனத்தில்'' பட்டப்படிப்பை கற்கவந்தவர்களில் பலரை அறிவேன். அவர்களில் நிறைந்த அனுபவமும், அறிவாற்றலுமுடையவராக கவிஞர் தேவதாசன் காணப்பட்டார். இவரை நாங்கள் சந்திக்கும் போதெல்லாம் இலக்கியக்கடலில் முத்துக்குளித்தோம். அப்போதெல்லாம் இவரது இலக்கியப் புலமையையும், கவித்துவ ஆற்றலையும் கண்டு வியந்துள்ளேன். எப்போதுமே இயங்கிக்கொண்டிருக்கும் இவரை இலக்கிய உலகம் இன்னும் முழுதாக இனங்கண்டு, கொள்ளாதிருப்பது ஏனோ.

கவிஞர் தேவதாசன் எமது பாரம்பரிய கலைமரபுகளில் அதிகநாட்டம் கொண்டவர். அதேவேளை பழமையில் புதுமைநாடும் முற்போக்காளர். சுயவிளம்பரங்களாலேயே இலக்கிய நாயகர்களாகும் கலை உலகில் இவர் இலைமறைகாய். நாட்டுக்கூத்தும் நாடகத்தமிழும் இவரால் பொலிவுறுகின்றன என்பதை ஏனோ பலர் கூறத் தயங்குகின்றனர்.

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி பல முன்னணி எழுத்தாளர்களை உலகறிய உருவாக்கியது. அவர்களில் கவிஞர் தேவதாசனும் ''காத்தவன் காவியம்'' மூலம் வெளிப்படுகின்றார்.

1985-ம் ஆண்டு அமரர் ஆனந்தராஜன் சிறப்புமலர் (St. John's College, Magazine) வெளியிட்டபோது, பழைய மாணவர்கள் சார்பில் இவரின் கவிதை அதில் வெளிவந்தது. அதன்மூலம் இவரது கவியாற்றலை எமது கல்லூரியும், மாணவர்களும், வாசகர்களும் அறியமுடிந்தது.

**வே. யுகபாலசிங்கம் B.A. (Hons.), Dip. in Education**
ஆசிரியர், பரி. யோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம், இலங்கை.

தற்பொழுது கண்டிக்கச்சேரியில் கடமையாற்றும் கவிஞர் தேவதாசன் தமிழ், சிங்களம், ஆங்கிலம், சமஸ்கிருதம ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்.

யாழ்ப்பாடியால் பாசெய்து, பரிசுபெற்ற '' மணற்றிடல் '' பகுதியாகிய பாஷையூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். எமது இலக்கிய வட்ட முன்னுள்தலைவர். சாதாரண தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர். மலையக மக்களின் துயரங்களை பாவடிவில் வடித்தவர்.

**மாத்தளை வடிவேலன் B. A. (Cey.)**
பிரதம அமைப்பாளர்
மாத்தளை இலக்கிய வட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org